48

மூன்றாம்

# குலோத்துங்க சோழன்



...வரர் கோயில், திரிபுவனம்

ஆசிரியர்:
...மச்சந்திர தீக்ஷிதர், M. A.

# மூன்றாம்
# குலோத்துங்க சோழன்

ஆசிரியர் :

**வி. ரா. இராமசந்திர தீக்ஷிதர்,** எம். ஏ.,

*University of Madras*

T. G. கோபால் பிள்ளை

பதிப்பாளர்

| | |
|---|---|
| தெப்பக்குளம் | 2/27, பிராட்வே |
| திருச்சிராப்பள்ளி | ஜி. டி. சென்னை |

பதிப்புரிமை] 1949 [விலை அணா 12.

திருந்திய பதிப்பு—மே ௴ 1949

உயர்நிலைப்பள்ளி மாணவர் பதிப்பு

KABEER PRINTING WORKS, TRIPLICANE, MADRAS.

# முகவுரை

படைப்புக்காலக்தொட்டுத் தமிழகத்தில் செங்கோலோச்சி வந்த முடியுடை மூவேந்தர் வரலாறுகளை உள்ளபடி அறியப் போதிய சான்றுகள் கிடைத்தில. ஆயினும், சோழர் வரலாற்றை அறிதற்குப் பல சாதனங்கள் கிடைத்துள்ளன. இலக்கியங்களையும் கல்வெட்டுக்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சியாளர்கள் இம்மன்னர்களைப்பற்றிப் பல நூல்கள் எழுதியிருக்கின்றனர். அவர்களுள் ஸ்ரீ க. அ. நீலகண்ட சாஸ்திரியார் ஆராய்ச்சி குறிப்பிடத்தக்கது.

பிற்காலத்துச் சோழ அரசர்களுள் கீர்த்தி மிக்க மூன்றுங் குலோத்துங்கனைக் குறித்து, இதுவரை வெளிவந்துள்ள வரலாறுகளையும், கல்வெட்டுக்களையும் இலக்கியங்களையும் ஆதாரமாகக்கொண்டு யான் சில ஆண்டுகட்கு முன்னர் 'மூன்றும் குலோத்துங்க சோழன்' என்ற ஓர் ஆராய்ச்சி நூலை வெளியிட்டேன். அதனைக் கல்லூரி மாணவர்க்குப் பாடப் புத்தகமாகப் பல்கலைக் கழகத்தார் ஏற்படுத்தினர்.

தமிழ்நாட்டு வரலாற்று உணர்ச்சி மாணவர்க்கு ஏற்பட வேண்டுமென்ற விருப்பம் பெருகிவரும் இந்நாளில், உயர்நிலைப் பள்ளி மாணவர்க்கு ஏற்றவாறு, மூன்றும் குலோத்துங்கன் வரலாற்றை ஆராய்ச்சிப் பகுதிகளை நீங்கி, எளிய முறையில் திருத்தியமைத்து இப்புதிய பதிப்பினை வெளியிடலானேன். இதனை மாணவர் வாசித்துப் பயன் பெறுவர் என்பது எனது அவா.

வி. ரா. இராமசந்திர தீக்ஷிதர்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழகமும் சோழரும் | ... | 1 |
| 2. | சோழர் முன்னோர் | ... | 3 |
| 3. | இராஜாதிராஜன் | ... | 15 |
| 4. | குலோத்துங்கன் ஆட்சித்தொடக்கம் | ... | 24 |
| 5. | போர்ச் செயல்கள் | ... | 26 |
| 6. | கலை வளர்ச்சி | ... | 42 |
| 7. | சமயநிலையும் அறச்செயல்களும் | ... | 54 |
| 8. | சாமந்தர்கள் | ... | 61 |
| 9. | நாட்டுச் செய்திகளும் வழக்குகளும் | ... | 70 |
| 10. | அரசியல் | ... | 84 |
| 11. | குணாதிசயங்கள் | ... | 93 |
| 12. | முடிவுரை | ... | 102 |

# மூன்றாம் குலோத்துங்க சோழன்

## அத்தியாயம் 1

## தமிழகமும் சோழரும்

நம் பாரத தேசத்தில், வடக்கில் வேங்கடமும் தெற்கில் குமரியும் கிழக்கிலும் மேற்கிலும் கடல்களும் எல்லைகளாகவுடைய தென்கோடிப் பகுதியில் தமிழ் மொழி வழங்குகின்றது. அதனால், இதனைத் 'தமிழ் கூறும் நல்லுலகம்,' 'தமிழகம்' என்று முன்னோர் வழங்கினர். இந் நிலப்பகுதிக்கு வடக்கே பெரும்பாலும் வடமொழி பயின்று வந்தமையால், அதினின்றும் வேறுபாடு அறிய, இந்நிலத்துமொழி தென்மொழி என்று வழங்கப்பட்டது. இத் தமிழகத்தை அநாதிகாலமாக ஆண்டு வந்த அரசர்கள் சேரர், சோழர், பாண்டியர் என்னுமூவராவர். இம்மூவருடைய ஆட்சிக்கு உட்பட்ட தேசங்கள், தலைகீழான ஆய்தவெழுத்தின் வடிவில் (ஃ) மூன்று மண்டலங்களாய்ச் சேரநாடு, சோணாடு, பாண்டிநாடு என வழங்கின. இவற்றை முறையே குடபுலம், குணபுலம், தென்புலம் என்று கூறுவது பண்டை வழக்கு. சேரநாடு மேல்நாடானதால் குடபுலம் என்றும், சோழநாடு அதற்குக் கிழக்கே உள்ளமையால் குணபுலம் என்றும், அவ்விரண்டுக்கும் தெற்கில் அமைக்

தமையால் பாண்டிநாடு தென்புலம் என்றும் கூறப்பட்டன.

தமிழகத்தின் இம் மூன்று இராஜ்யங்களும் எந்தக் காலத்தில் நிறுவப்பெற்றவை என்பது தெரியவில்லை. அதனால் இந்த மூன்று நாடுகளின் அரசர்களையும் படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டுவரும் பழங்குடியினர் என்று முன்னோர் பொதுவாகக் கூறலாயினர். ஆதி இதிகாசங்களான இராமாயண மகா பாரதங்களில் இந்நாடுகளின் இயல்புகளும் அரசர்களைப்பற்றிய செய்திகளும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. புத்த பகவானது முற்பிறவிகளைப் பற்றிக் கூறும் ஜாதகக்கதையொன்றில், சோழரது 'தமிளராஜ்ய'மும் அதன் தலைநகரான காவிரிப்பூம்பட்டினமும் குறிக்கப்பட்டிருக்கின்றன. மௌரிய சக்கரவர்த்தியாய் இப் பரதகண்டத்தின் பெரும்பகுதியும் தன் ஒரு குடைக்கீழ் வைத்தாண்ட அசோகனது காலத்தில், இத் தமிழகம் அவன் ஆட்சிக்கு உட்படாமல் மூவேந்தர்க்கே உரிய தனிநாடாய் விளங்கிய செய்தி அவனது கல்லெழுத்துக்களால் தெரியவருகின்றது.

தென்னாட்டின் முடியுடைவேந்தரான இம் மூவருள் நடுநாயகமாய் விளங்கியவர்கள் சோழ மன்னர்களாவர். இவர்கள் ஆட்சிக்கு உட்பட்ட குணபுலமானது, வானம் பொய்யாமற்பெய்து காலத்திற் பெருக்கெடுக்குங் காவிரியாற்றின் நீர்ப்பாய்ச்சலால் பெருவளம் படைத்த பிரதேசமாகும். நீர்வளம்பற்றியே 'புனனாடு' எனவும் இது பெயர்பெற்றது.

> " தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
> மண்ணாவ துஞ்சோழ மண்டலமே." (த. நா. சரிதை)
>
> " சோழவளநாடு சோறுடைத்து " (தனிப்பா)

என்று, இவ்வாறு முன்னோரும் பின்னோரும் புகழ்ந்துள்ள நாட்டுச்சிறப்பெல்லாம் இக் காவிரியின் மாட்சியால் உண்டானதே. காந்தமன் என்னுஞ் சோழன் வேண்ட, "அமர முனிவன் அகத்தியன்தனது, கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை"யைக் கங்கா தேவியிடம் சென்று வாங்கிவந்து அம்முனிவர் தென்னாட்டில் பெருக விட்டார் என்பது புராண வரலாறு. இதனால், கங்கைப் பேராற்றின் புனிதமும் பெருமையும் உடையது காவிரிப் பேராறு என்பது தெளியலாகும். பொன்போன்ற வண்டலொடுகூடிய காவிரி நீர்வளத்தால் அழகும் செல்வமும் அறிவும் பொங்கி இன்றுவரையும் நின்று செழித்து வருகின்றது சோழவளநாடு. இந்நாட்டை அநாதிகாலமாக ஆண்டுவந்த சோழவேந்தர் எண்ணிறந்தவர்கள். இவ்வேந்தர்களைச் **சங்க காலத்துக்கு முற்பட்ட சோழர், சங்க காலத்துச் சோழர், பிற்காலத்துச் சோழர்** என்று மூன்று வகையினராகப் பிரிக்கலாம்.

## அத்தியாயம் 2

# சோழர் முன்னோர்

1. **சங்ககாலத்துக்கு முற்பட்ட சோழர் :**—நம் பாரதகண்டத்து அரசர்கள் சோம குலம், சூரிய குலம், அக்கினி குலம் என்னும் மூன்று மரபுகளுள் ஒன்றுக்கு உரியவராகப் பெரும்பாலும் கூறப்படுவர். அம்முறையில், சோழ வேந்தர் சூரிய குலத்தைச் சேர்ந்தவராவர். பாண்டியர் சந்திரகுலத்தவராகவும் சேரர் அக்கினி குலத்தவராகவும் கூறப்படுகின்றனர். சூரியகுலத்து ஆதிவேந்தர்களான மனு, இக்ஷ்வாகு, மாந்தாதா, சிபி, முசுகுந்தன் முதலியோரே இச்சோழர்க்கும் குலமுன்னோர்கள். **கலிங்கத்துப்பரணி, மூவருலா** முதலிய

தமிழ் நூல்களிலும், அன்பில், திருவாலங்காடு, கன்யாகுமரி முதலிய இடங்களில் அகப்பட்ட சிலா தாமிர சாஸனங்களிலும் இம்முன்னோர்களின் வமிசாவளியும் வரலாறுகளும் சுருங்கக் கூறப்பட்டுள்ளன. இவருள், மனு சிபிகளின் சரித்திரங்களைப் புராணங்களிலன்றிச் சங்க நூல்களிலும் காணலாம். பசுவின் கன்றைக் கொன்ற பழிக்காகத் தன் ஒரு மகனையே தேர்க்காலிலிட்டு முறை செய்த மனுவின் கதையும், புறுவின் துக்கம் நீங்கத் தன்னுடலையே அரிந்து வைத்துத் துலையேறிய சிபியின் கதையும் பிரசித்தமானவை. இவரன்றிப் புகார்நகரில் இந்திரவிழா வெடுத்த முசுகுந்தன் வரலாறும், ஆகாயத்தில் பறந்து உலகத்துக்குத் துன்பம் விளைவித்துவந்த அசுரர்களின் கோட்டைகளை அழித்த சோழன் ஒருவன் செய்தியும், பரசுராமன் காலத்தில் புகார் நகரிலிருந்து அரசாண்ட காந்தமன் சரித்திரமும் சிலப்பதிகாரம் மணிமேகலைகளிற் கூறப்படுகின்றன. பண்டைக்காலத்தே இவர்களைப்போலப் பிரபலரான சோழர்கள் வேறு சிலரும் உளர். இவர்கள் வரலாறுகள் இங்கு விரிப்பிற் பெருகும்.

2. **சங்ககாலத்துச் சோழர் :—** இனி, பண்டைச் சோழரின் சரித்திரங்களிலே, மனித ஆற்றலுக்கு மேற்பட்டனவாகக் காணப்படுஞ் செய்திகள் பல உள்ளன. அவைகளுள், சரித்திர உண்மைகளாக இக்காலத்து அறிஞராற் கொள்ளப்படுவன சிலவே. ஆனால், முதற் காலத்துச் சோழர்க்குப் பல நூற்றுண்டுகளின் பின்னர் வாழ்ந்த சோழர்களின் வரலாறுகள் பழைய இலக்கியங்களிலிருந்து தெரியவருகின்றன. இவர்களே சங்க காலத்தில் விளங்கிய சோழ மன்னர்கள். ஏறக்குறைய ஐம்பது வருஷங்களுக்குமுன் இவர்களும் புராண

காலத்துச் சோழர் போலவே கருதப்பட்டனர். ஆனால், முன்னூல்களும் சாஸனங்களும் கண்டு பிடிக்கப்பட்டு வெளிவரத் தொடங்கியபின், அவற்றின் ஆராய்ச்சி பெருக, இச்சோழருள் பலருடைய வரலாறுகள் உண்மையானவை என்றே அறிஞர்களால் கருதப்படலாயின. சங்ககாலத்துச் சோழர்களாகப் பண்டைத் தமிழ் நூல்களால் அறியப்படுவோர் பலர். இவர்களுள் பெரும்புகழ் படைத்தவர் சிலரே. **கரிகாற்சோழன், கோச்செங்கணான், கிள்ளிவளவன்** போன்றவர்கள் முதன்மையானவர்கள். இவர்களுக்குள் முன்னவனான கரிகாலன், கரிகாற் பெருவளத்தான் எனவும், திருமாவளவன் எனவும் வழங்கப்படுவான். தன் தந்தை இறந்ததும், நாட்டில் அரசுரிமைபற்றி நேர்ந்த பெருங் குழப்பத்தில், பிள்ளைப் பருவத்தனான இக்கரிகாலனைப் பகைவர்கள் சிறைப்படுத்தியதோடு, அச்சிறையில் தீயும் இட்டனர். அதிலிருந்து இவன் தப்பியோடிய போது காலொன்று அத்தீயால் கரிந்துவிட்டது. இக் காரணத்தால் கரிகாலன் என்னும் பெயர் இவனுக்கு வழங்கலாயிற்று. இவ்வாறு இவன் சிறையினின்றும் தப்பி, ஐந்து பிராயத்தில் முடிசூடித் தன் இளமைப் பருவத்திலேயே பகைவரை யெல்லாம் வென்று ஆட்சி புரிந்தான். அக்காலத்தில், இவனுக்குப் பேருதவி புரிந்தவர் இவன் மாமனாகிய **இரும்பிடர்த் தலையார்** என்னும் பெரும்புலவர். ஆண்டில் இளையனாய் இருந்தும் அறிவில் முதியவனாய் நீதிவழுவாது ஆண்ட இவனது செங்கோற் சிறப்பால் தமிழகம் பலவகையிலும் செழிக்கலாயிற்று. இவனது அரிய செயல்களுள் காவிரிக்குக் கரைகட்டிச் சோழநாட்டை வளப்படுத்தியதும், தொண்டை நாட்டில் வேளாண் மக்களைக் குடியேற்றியதும், காஞ்சிமா நகரையும் காவிரிப்பூம் பட்டினத்

தையும் பலவகைகளில் அழகுற அமைத்ததும் சிறந்தவை. இவன், மற்றைத் தமிழரசர்களை அடக்கித் தன் ஒரு குடைக்கீழ் இத்தமிழகத்தை ஆண்டதோடு, வடநாடுகளிலும் படையெடுத்துச் சென்று, வச்சிரம் அவந்தி மகதம் இத்தேசத்து மன்னர்களைவென்று, இமயத்தில் தன் புலிக்கொடியை நாட்டி வந்தான். இவனைப் பாடிய புலவர்கள் பலர். இவன் அருமை பெருமைகளைப் **பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை** என்னும் பாட்டுக்களிலும், பிற சங்கச் செய்யுட் களிலும் விரிவாகக் காணலாம்.

இவனுக்குப் பின்பு ஆண்ட சோழர்கள், பதினறு வருக்கு மேற்பட்டோர் சங்கநூல்களால் அறியப்படுகின் றனர். அவருள் கிள்ளிவளவன், பெருநற்கிள்ளி என்னும் இருவரைப்பற்றிய செய்திகள் சிலவற்றை **மணிமேகலை** யிலும் **சிலப்பதிகார**த்திலும் காணலாம். சோழரெல் லாரும் அறிவு ஆற்றல்களாலும் வள்ளன்மையாலும் மேம்பட்டு விளங்கியவர்கள் என்பது அவர்களைப் பண்டைப் புலவர்கள் பாடிய சங்கச் செய்யுட்களினல் அறியப்படுகின்றது.

இவ்வேந்தருள் கடைசியில் ஆண்ட சோழன் கோச் செங்கணனாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. இவன் முற்பிறவியில் சிலந்தியாயிருந்து திருவானைக் காவில் எழுந்தருளியுள்ள சிவபிரானுக்கு வெயில் விழாமல் நூற்பந்தர் இழைத்துப் புரிந்த திருத்தொண்டால், மறு பிறவியில் பேரரசன் ஆனன் என்று **தேவாரம்** முதலிய வற்றில் புகழ்ந்து பாடப்பட்டுள்ளான். இவன், சிவபக்தி யின் மிகுதியால் 'எண்தோள் ஈசற்கு எழின்மாடம் எழுபது செய்த'வன்; அறுபத்துமூன்று நாயன்மார்க ளுள் ஒருவராக மதிக்கப்பட்டு விளங்கினவன். திருநறை யூரில் எழுந்தருளியுள்ள திருமாலிடமும் இவன் பக்தி

பண்ணியவன் என்று புகழ்வர் திருமங்கையாழ்வார். இச்சோழன் பக்திச் சிறப்போடு வீரச்சிறப்பும் பிற உத்தம குணங்களும் உடையனுயிருந்தான். கணைக் காலிரும்பொறை என்னுஞ் சேரமானுடன் இவன் கழுமலத்தில் பொருதுபெற்ற வெற்றித்திறத்தைப் பொய்கையார் பாடிய **களவழி நாற்பதி**லும், ஏனைச் சங்கச் செய்யுட்களிலும் காணலாம். இச்சேரமான் படைத் தலைவனுகிய **கணையன்** என்பவன் சேரரது கொங்கு நாட்டைச் சேர்ந்திருந்த **விளந்தை** என்னும் ஊருக்குத் தலைவனுனமையால் விளந்தைவேள் எனவும் வழங்கப் பட்டான். அவனது விளந்தையை அடுத்துள்ள கழுமலம் என்ற ஊரில் செங்கணுனுக்கும் அவ் வேளுக்கும் பெரும்போர் மூண்டது. அதனில் அவனை வென்று, அவனுக்கு உரியதாயிருந்த கொங்குநாட்டை இச் செங்கணுன் தன் சோழ நாட்டோடு சேர்த்துக் கொண்டான். இஃதன்றி, **வெண்ணி** முதலிய இடத்தும் இவன் பகைவர்களை வென்ற செய்தி அறியப்படுகின்றது. இவனுக்கு நல்லடிக்கோன் என்ற மகன் ஒருவன் இருந்தான் என்று அன்பில் சாஸனம் கூறுகின்றது. இந் நல்லடிக்கோனது ஆட்சிச்சிறப்பு சங்கச்செய்யுளான **அகநானூற்றிலும்** (356) குறிப்பிடப்பட்டுள்ளது.

3. **பிற்காலத்துச் சோழர்:**—கோச்செங்கணுனுக்குப்பின், அஃதாவது உத்தேசம் கி. பி. நான்கு ஐந்தாம் நூற்றூண்டுமுதல், வடநாட்டரசர்கள் பெருவலி பெற்றவர்களாய்த் தமிழகத்திற் புகுந்து, அதன் பெரும்பாகத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். அதனுல், தமிழ்நாட்டு முடியுடை வேந்தர் மூவருமே தங்கள் பழைய பெருமை குன்றி அவர்கள்கீழ் அடங்கவேண்டியதாயிற்று. விஷ்ணுகோபன் முதலிய பல்லவர்களும், அச்சுத விக்ராந்தன் முதலிய களப்பிரர்களும், சோழ

பாண்டிய தொண்டை நாடுகளில் ஆதிக்கம் பெற்று அரசாண்ட செய்திகள் நூல்களாலும் சாஸனங்களாலும் தெரியவருகின்றன. இவர்களுள், பல்லவர்கள் மிக்க வலி படைத்தவர்களாய்த் தென்னாட்டின் பெரும்பாகத்தைப் பல தலைமுறைகள் ஆட்சி புரிந்து வந்தனர். இவர்களது உள்நாட்டுத் தலைநகர் காஞ்சீபுரமும், கடற்கரைத் தலைநகர் மாமல்லபுரமும் ஆகும். இன்னோரது நீண்ட ஆட்சி, பெருமைபெற்றதென்பதில் ஐயமில்லை. இப்பல்லவருடைய ஆதிக்கமும், எட்டு ஒன்பதாம் நூற்றாண்டுகளில் ஒரு முடிவு அடைந்தது. இதற்குக் காரணராயிருந்தவர்கள் வடக்கே சளுக்கியர்களும், தெற்கே பாண்டியர்களும் ஆவர். அவ்விருவரும் பல்லவருடன் பகைமை கொண்டு நடத்திய போர்கள் பல. பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த சோணாட்டு எல்லைப்புறமும், மழநாடு கொங்கு நாட்டுப் பகுதிகளும், இப் போர் வெற்றியால் பாண்டியரின் வசமாயின.

இவ்வாறே, வடக்கில் சளுக்கியர் என்பார் பல்லவர்களைத் தாக்கி வெற்றி பெற்றனர். இவ்விதம் பல்லவர் ஆட்சி இருபுறமும் நெருக்குண்டதனால், தளர்ச்சி அடைந்தது. இத்தளர்ச்சி, ஒடுங்கிக் கிடந்த சோழர்க்கு ஊக்கமளித்து அவர்களது ஆற்றலைத் தோற்றுவித்தது. இக்காலத்தில் தங்கள் பழைய சுயேச்சையை நிலைநிறுத்துவதற்கு முதன்முதலில் துணிந்து வெளிவந்த சோழர் குலத்தோன்றல் **பரகேசரி விஜயாலயன்** என்பவன். இவன், தஞ்சைப் பிரதேசங்களில் பல்லவர் தலைமைக்குட்பட்டு ஆண்டுவந்த முத்தரையர்களை முதலில் வென்று, அப் பிரதேசங்களைத் தன்னடிப்படுத்தினான். இவ்விஜயாலயன் புரிந்த போர்ச் செய்திகளை அதிகம் அறிய இடமில்லையேனும், இவனே பிற்காலத்துச் சோழர்களின் குலமுதல்வனானவன் என்பதில் ஐயமில்லை.

இவன் முதலாகத் தொடர்ந்துவந்த சோழவமிசம், 13-ஆம் நூற்றாண்டு வரையில் பிரபலம் பெற்று, தமிழக மட்டுமன்றித் தெலுங்கு கன்னட நாடுகளையும் வென்று சோழ ஏகாதிபத்யத்தை நிலைநாட்டியது. விஜயாலயன் வழியில் வந்தவரான இச்சோழமன்னர்களை மூன்று தொகுதியினராகக் கொள்வது பொருந்தும். **முதல் தொகுதியினர்** புத்திர பௌத்திர பரம்பரையாக வந்தவர்கள். **இரண்டு மூன்றுந் தொகுதியினர்** தௌகித்திர முறையில் வந்தவர்கள்.

i. **புத்திர பௌத்திர பரம்பரையினரான சோழர்கள்:** மேற்கூறிய விஜயாலயனுக்கு மகன், இராஜ கேசரி ஆதித்தசோழன் என்பவன். பரகேசரி, இராஜ கேசரி என்பவை பண்டைக்காலத்துச் சோழருள் இருவர் தரித்திருந்த சிறப்புப் பெயர்கள். இந்த இரண்டு பெயர்களும், பின்பு அவர்கள் வழியினர்க்கும் மாறி மாறி வழங்கலாயின. அஃதாவது, பரகேசரி என்பது முன்னோனுக்கானால் இராஜகேசரி என்பது அவன் பின்னோனுக்கு வழங்கும். இது விஜயாலயன் காலம் முதலாகவே தொடர்ந்து வழங்கியது. இச் சிறப்புப் பெயர்களைக் கொண்டு ஒரே பெயர் தரித்த சோழர்களை நாம் வேறுபடுத்தி நன்கறியலாகும். இம்முறையில், இராஜகேசரி என்ற பட்டந் தரித்த ஆதித்தன், தன் தந்தை விஜயாலயனினும் வலிமிக்கவனாய்த் தக்க சமயத்தில் பாண்டியருடன் சேர்ந்து கொண்டு, பல்லவர்களைப் போரில் வென்று, தன் முன்னோர் ஆண்ட சோழ நாட்டை முழுதும் மீட்டுக்கொண்டான். அதனோடு, தொண்டைநாட்டையும் சேரமான் உதவி பெற்றுத் தன்னடிப்படுத்தினான். இவனோடு பல்லவராதிக்கம் தமிழ் நாட்டில் ஒழிந்ததுமட்டுமல்லாமல், அவர்கள் சிற்றரசர்களாகிச் சோழர்களுக்குக் கீழடங்கி ஒடுங்கவும் நேர்ந்தது.

இவ் வாதித்தன் மகன், பரகேசரி பராந்தகன் என்பான். இவன், தன் பேராற்றலால் பாண்டிய நாட்டையும் ஈழநாட்டையும் வென்று அடிப்படுத்திச் சோழர் பெருமையை ஓங்கச் செய்தான்; சிவபக்தியிற் சிறந்தவனாய்த் திருச்சிற்றம்பலத்தின் முகட்டைப்பொன் வேய்ந்து புகழ்பெற்றான். இவ்வாறு இப்பராந்தகனால் முயன்று நிலைநாட்டப்பெற்ற சோழராஜ்யத்தை, இவன் மக்களும் பேரர்களும் முன்னிலைமை குறையாதபடி பேணிப் பாதுகாத்து வந்தனர். இவர்களுள், பராந்தகனது கொட்பேரனான இராஜகேசரி முதலாம் இராஜராஜன் என்பவன், சிறுவிளக்கில் ஏற்றிய பெரும் பந்தம் போல விளங்கினான். இவனே, பாண்டிய சேர ஈழ நாடுகள் முழுமையும் வென்று, அவற்றைச் சோணாட்டின் பிரிவுகளாக்கிச் சோழசாம்ராஜ்யத்தை அமைத்தவன். இவன் சிவபக்தி மிக்கவன்; திருவாபரணம் முதலியவைகளைப் பெருவாரியாகக் கோயில்களுக்கு வழங்கினவன். தஞ்சைமாநகர், இவன்காலத்தில் அரசிருப்பாகப் பொலிவுபெற்று விளங்கியது. அந் நகரில் இவன் எடுப்பித்த இராஜராஜேசுவரம் என்னும் பிருகதீசுரர் (பெருவுடையார்) கோயிலொன்றே இவன் பெருமையை இன்றுவரை உலகில் விளக்கி நிற்கின்றது. திருவிசைப்பாவில் கருவூர்த்தேவர் என்ற சிவனடியாரால் இப்பெரிய கோயில் பாடிச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்னும் மூவரின் வணக்கம், இவன் காலத்திலிருந்தே நாட்டில் பரவியதாகும். இவ்வடியார்கள் அருளிச்செய்த தேவாரத்தைக் கண்டுபிடித்து, நம்பியாண்டார் நம்பிகளைக்கொண்டு வெளிப்படுத்தியும், அதனால் 'திருமுறை கண்ட சீராஜராஜன்' எனப்பெயர் பெற்றும் விளங்கிய வேந்தன் இவனே என்பர். இவனுக்குச் சிவபாதசேகரன், அருண்மொழித்தேவன்,

மும்முடிச்சோழன் முதலிய பெயர்கள் வழங்கின. இவன் காலத்திலிருந்துதான், மெய்க்கீர்த்தி என்னும் புகழ்ச்சிப் பாடல்கள் சாஸனங்களிற் பயில்வனவாயின. இன்னும் இவன் பெருமைகள் பல; விரிக்கில் பெருகும்.

இவனுடைய அருமை மகன், இராஜேந்திரன் என்பவன். இவன் பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்டவன் என்று சாஸனங்களிற் புகழப்படுபவன். தன் தந்தை வளர்த்த சோழசாம்ராஜ்யத்தைக் குன்றின் மேலிட்ட தீபம்போல உலகெங்கும் ஓங்க வைத்தவன் இவன் என்பதை அறியாதார் இல்லை. கங்கதேசம், ஈழநாடு, மலைநாடு, இரட்டபாடி, ஒட்டரம், கோசலம், இலாடம், வங்காளம் முதலிய தேசங்கள் இவனால் வெல்லப்பட்டன. இவற்றோடு, அலைகடனடுவிற் பல கலஞ் செலுத்தி, மாநக்கவாரம், கடாரம், மாப்பப்பாளம் முதலிய கீழ்கடற்கு அக்கரையிலுள்ள நாடுகளை வென்று, அந்நாட்டரசர்களையும் தனக்குப் பணியச் செய்தனன். இவன்போல அரிய செயலைச் செய்த தமிழ் வேந்தர், இவன் முன்னோனான கரிகாலனும் சேர வேந்தனான செங்குட்டுவனுமேயன்றி வேறு எவரும் இல்லை. இவன் கங்கை நாடுகளை வென்றதன் அடையாளமாகக் கங்கைகொண்ட சோழபுரத்தை ஏற்படுத்தி, அந்நகரைத் தன் தலைநகராகக் கொண்டும், கங்கை கொண்ட சோளீச்சுரம் என்ற திருக்கோயிலெடுப்பித்தும் சிறப்பித்தனன். பண்டித சோழன், முடிகொண்ட சோழன், விக்கிரம சோழன் முதலிய பல பெயர்களை இவன் தரித்தவன். இவனுக்கு இராஜாதிராஜன், இராஜேந்திரன், வீரராஜேந்திரன் என்ற மூவர் புதல்வர்களும், அம்மங்காதேவி என்ற ஒரு மகளும் உண்டு. இவர்களுள் ஆண் மக்களெவர்க்கும் மகப்பேறு இல்லை. அதனால் இம்மக்களே ஒருவர்பின் ஒருவராய்ச் சோழ

நாட்டைத் திறமையுடன் ஆண்டுவர நேர்ந்தது. இவர்களுக்கும் மேலைச் சளுக்கியர்க்கும் மூண்ட பெரும்போர்கள் பல. இவற்றிலெல்லாம் சோழர்களே வெற்றி பெற்றனராயினும், சிலர் அப்போர்களில் இறந்து போயினர். இவருள், கடைசி மகனுன வீரராஜேந்திரன் அறிவாற்றல்களால் பெருமை பெற்று விளங்கினுன். வீரசோழன் என்றும் இவன் வழங்கப்பட்டனன். இவன் ஆட்சிக் காலத்தில், **புத்தமித்திரர்** என்ற பெரும் புலவர் விளங்கி, **வீரசோழியம்** என்ற ஐந்திலக்கண நூலொன்றை இவன் பெயரால் இயற்றினுர்.

ii. **முதலாம் தௌகித்திர பரம்பரை**:— இவ் வீரராஜேந்திரன், அரசுக்குரிய மகப்பேறின்றியே கி. பி. 1070-ல் இறந்துவிட்டான். அடுத்த பட்டத்துக்குரியவர் யாவர் என்பது பற்றிய விவாதமும் குழப்பமும் நாட்டில் உண்டாயின. வீரராஜேந்திரனுக்கு அதிராஜேந்திரன் என்ற மகனெருவன் இருந்தான் என்பர். ஆனுல், சோழவரசை அடைவதற்குரிய குலவுரிமை அவனுக்கு இல்லை. ஆதலால், நாட்டு மக்களெல்லோரும் அவனைச் சிங்காதனம் ஏற்றுவதில் வெறுப்புக் கொண்டிருந்தனர். ஆயினும், அந்த அதிராஜேந்திரனுக்கு வேண்டிய உறவினர்களும் தலைவர்களும், வீரராஜேந்திரன் இறந்ததும் அவனை அரசனுக்கிப் பட்டத்தில் அமர்த்தினுர்கள். இது, சோணுட்டில் பெருங்குழப்பத்தையும் போரினையும் உண்டாக்கியது. வீரராஜேந்திரனுக்குப் பின் பட்ட வுரிமை அவன் மருமகனும் வேங்கை நாட்டுச் சாளுக்கிய அரசன் இராஜராஜேந்திரன் மகனுமான இராஜேந்திரனுக்கு உரியது என்றே, அவன் தாய்ப் பாட்டியாலும் பிற அரசாங்கத் தலைவர்களாலும் முன்னமே முடிவு செய்யப்பட்டிருந்தது. இந்த இராஜகுமாரன், தன் அம்மானுன சோழ

வேந்தன் இறந்தபோது வடநாட்டில் சக்கரக்கோட்டம் என்ற இடத்தில் நடந்து வந்த போரில் முனைந்து நின்றான். அப்போது மாமன் இறந்த செய்தி இவனுக்குச் சில நாட்களில் எட்டியது. எட்டியதும் இவன் வடநாட்டினின்றும் விரைந்து வந்து, சோணாட்டின் குழப்பங்களை யெல்லாம் ஒழித்தும், தன் உரிமையைக் கைப்பற்றியவனைக் கொன்றும், தௌகித்திர பாத்தியங் கொண்டாடிச் சோழ சிங்காதனத்தில் அமர்ந்து அரசாளுவானாயினான். இவனே **முதற் குலோத்துங்கன்** என்பவன். வடநாட்டில் கீழைச் சளுக்கியர்க்குரிய வேங்கை மண்டலமும், தென்னாட்டுச் சோழ மண்டலம் தொண்டை மண்டலம் முதலியனவும் இக்குலோத்துங்கனுக்குக் குலவுரிமையானமையால், சோழ சாம்ராஜ்யம் இவன் காலத்தில் முன்னிலும் பரப்பும் பெருமையும் பெற்று விளங்கியது. அறிவும் திருவும் ஆற்றலும் படைத்த பெருவீரனாகிய இவன் தனக்கு அடங்காதிருந்த கலிங்கவரசனைக் கீழ்ப்படியச் செய்வதற்காகத் தன் சேனாதிபதியான கருணாகரத் தொண்டைமானைப் பெரும் படைகளுடன் ஏவி, அவனைப் போரில் வென்று கலிங்க நாட்டையும் தன் கைவசப்படுத்தினான். இவ்வெற்றியே **கலிங்கத்துப் பரணி** என்ற நூலில் **சயங்கொண்டார்** என்ற பெரும் புலவரால் புகழ்ந்து பாடப்பட்டது. இவன் 45 ஆண்டுகள் நீதி வழுவாமல் ஆட்சி புரிந்து வந்தான். இவனுக்கு அபயன், விஜயதரன் என்ற வேறு பெயர்களும் உண்டு. மகன் வழிப் பரம்பரையில் வந்த சோழவரசர் குடியுரிமை, மகள் வழியில் மாறியது இவன் காலத்திலேயே யாகும்.

இக்குலோத்துங்கனாகிய அபயனுக்கு மகன் விக்கிரம சோழன். இவன் கி. பி. 1117-1134 வரையில் ஆட்சி புரிந்தான். இவன் ஆட்சியில் எங்கும்

அமைதி நிலவியது. இவன் தில்லைச் சிதம்பரத்துக்குப் பற்பல திருப்பணிகள் புரிந்தும், திருநாட்கள் கண்டும் அந்நகர்க்குச் சிறப்புண்டாக்கினான். ஒட்டக்கூத்தர் பெரும் புலவராய்ப் பிரபலம் பெற்றது இவன் காலத்தி லிருந்தேயாகும். இவன் இளமையில் தன் தந்தையின் ஏவலால் கலிங்கப் போரில் கலந்து வெற்றி பெற்று வந் ததைப்பற்றிப் பரணியொன்றும் இவர் பாடியிருப்ப தாகத் தெரிகிறது. இவன் **தியாக சமுத்திரம்** என நூல்களிலும் சாஸனங்களிலும் வழங்கப்படுகின்றான்.

இச்சோழனுக்குப் பின் இவன் மகன் **இரண்டாம் குலோத்துங்கன்** பட்டம் எய்தினான். இவன் பழுத்த சிவபக்தன். கவிச்சக்கரவர்த்தியான கூத்தர், இவனது இளமைக் காலத்தில் இவனுக்குத் தமிழாசிரியராய் இருந்ததோடு, இவன் பட்டம் எய்தியபின் ஆஸ்தான மகா கவியாகவும் விளங்கினார். இக்குலோத்துங்கன்-மேல், பிள்ளைத்தமிழ் ஒன்றும் உலாப்பிரபந்தமொன்றும் இக் கூத்தர் பாடிச் சிறப்பித்தனர். சிவபக்தியின் மிகுதியால், இவ்வரசன் தில்லையுள் திருமால் திருக் கோயில் கொண்ட திருச்சித்திரகூடத்தை அழித்து, அக்கோயில் மூர்த்தியைக் கடலில் இடுவித்துத் தில்லை யம்பலத்தின் திருமுற்றத்தை இடம் பெருகச் செய்தான் என்பர். புலவர் திலகரான சேக்கிழாரைக் கொண்டு, நாயன்மார்கள் சரித்திரமான **திருத்தொண்டர் புராணம்** என்ற பெரிய புராணத்தைப் பாடுவித்தவன் இச் சோழனே. தில்லைச்சிற்றம்பலம் பேரம்பலங்களைப் பொன் வேய்ந்து, கூட கோபுரங்களால் அந்நகரை அலங்கரித்தனன் இவன். இவனுக்கு அகளங்கன், திரு நீற்றுச் சோழன், எதிரிலிப் பெருமாள், நல்ல பெருமாள் என்ற வேறு பெயர்களும் உண்டு.

இந்த இரண்டாங் குலோத்துங்கனுக்குப்பின், இவன் மகனுன இராஜராஜன் என்பவன் உத்தேசம் கி. பி. 1144-ல் பட்டம் பெற்ருன். இவன் ஆட்சி முழுவதும் சோழசாம்ராஜ்யத்தில் அமைதி குடிகொண்டிருந்தது. இவன் காலத்திலும் கூத்தர் மிக்க செல்வாக்குடன் விளங்கினர். இச்சோழன்மீதும் அவர் உலாப் பாடியுள்ளார். அவ் வுலாவை அரங்கேற்றும்போது, இவ்விராஜராஜன் அதன் கண்ணி ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் பொன் சொரிந்ததாகச் **சங்கரசோழனுலா** கூறுகின்றது. இந்நூலன்றி, **தக்கயாகப் பரணி, ஈட்டியெழுபது** என்ற வேறு இரண்டு நூல்களும் இவன் காலத்தே அப்புலவர் பெருமாஞல் பாடப்பட்டன. அவ்விரண்டிலும் இவ் இராஜராஜ சோழனே சிறப்பிக்கப் பட்டுள்ளான். இவன் ஆட்சி உத்தேசம் 19 வருஷங்கள் வரை நடைபெற்றது.

## அத்தியாயம் 3

# இராஜாதிராஜன்

### இரண்டாம் தௌகித்திர பரம்பரை

மேற்கூறிய இரண்டாம் இராஜராஜ சோழன் கி. பி. 1163 வரை ஆண்டவன். இவ்வரசனுக்குப் புத்திர சந்தானம் இல்லை. நாளடைவில் இவன் உடல்நிலையும் குன்றிவந்தது. அதனுல் தனக்குப் பின் அரசாளுதற்குரிய மக்களைப்பற்றிய சிந்தை இவனுக்கு அதிகமாயிற்று. தனக்குமுன் ஆட்சி புரிந்த சோழர் வழியில் தோன்றிய இராஜகுமாரர்கள் எங்கேனும் உளரா என்று விசாரித்தபோது, கங்கை கொண்ட சோழபுரத்தில் பிள்ளைகள் இருவர் இருப்பது தெரிய வந்தது. இவன்

பாட்டனார் விக்கிரம சோழரின் தௌகித்திரரான **நெறியுடைப் பெருமாள்** என்பவருடைய மக்களே இப்பிள்ளைகள்; இவர்கள் ஒன்றும் இரண்டுமான வயதுள்ளவராயிருந்தனர். இவர்களைத் தவிர, வேறு உரிமையான ஆண்வழிப் பிள்ளைகள் ஒருவருமே இல்லை. தன் பாட்டனாரது பெண்வழி மக்களேனும் இவ்வாறு அரசாளக் கிடைத்ததற்கு மகிழ்ந்த இராஜராஜன் அவர்களைக் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து உடனே அழைப்பித்து, தான் அப்போது வசித்து வந்த தலைநகரான **ஆயிரத்தளி**யில் தன் அந்தப்புர பரிவாரங்களுடன் அவர்கள் இனிது வாழ்ந்து வரும்படி ஏற்பாடு செய்தான். இது நிகழ்ந்த சில காலத்துக்குள் அரசனுக்கு நோய் முற்றிவிட்டது; இறுதிக்காலமும் நெருங்கியது. உடனே, தன் அறிவு கலங்குவதன் முன்பு அப் பிள்ளைகளுள் மூத்தவனான **எதிரிலிப் பெருமாள்** என்பவனை 'மண்டை கவிப்பித்து'[1] இளவரசனாக்கி, ஆக்கிய அன்றே இறந்துவிட்டான்.

அரசன் இறந்ததும் நாடு பெரிதும் கலக்கமடைந்தது. அரசுரிமைபற்றிச் சோழகுலத்தார்க்குள்ளும் அதிகாரிகள் சிலர்க்குள்ளும் குழப்பமும் சூழ்ச்சிகளும் பெருகின. இவற்றை யெல்லாம் அறிந்து, இறந்துபோன அரசனுடைய அந்தரங்க மந்திரியும் அவனால் எல்லாச் சிறப்பும் பெற்று அரசாங்கத்தில் தலைமை வகித்து வந்தவருமான **பெருமான் நம்பிப் பல்லவராயர்** என்பவர், அரசுக்குரிய பிள்ளைகளும் அந்தப்புர பரிவாரங்களும் ஆயிரத்தளிப்படை வீட்டில் இருப்பது ஆபத்து என்று கருதி உடனே அவர்களை வெளியேற்றி இராஜராஜபுரத்

---

1 மண்டை என்பது-யுவராஜனாக்குவதற்குச் சூட்டும் ஒருவகை முடியாகத் தெரிகின்றது.

துக்கு அழைத்துச் சென்று தக்க பாதுகாவலுடன் அங்கே அமர்வித்தார்; அக்கம் பக்கங்களிற் பகைவர் சூழ்ச்சிகளால் கேடு நேராதபடியும், உடன்கூட்டம் முதலிய அதிகாரிகளால் அதிக்கிரமமொன்றும் நடவாதபடியும் வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்து, இரண்டாண்டுகள் வரையும் அரசியல் நிர்வாகத்தைத் தாமே மிக்க திறமையுடன் நடத்தி வந்தார். இறந்த அரசனுல் இரண்டு வயதுக் குழந்தையான எதிரிலிப் பெருமாள் இளவரசனுக்கப்பட்டது முதலே அவன் பேரால் சாஸனங்கள் வழங்கலாயின. ஆயினும் அவ்விளங்கோவிற்குப் பட்டாபிஷேகம் செய்து அரசனுக்கி விடுவதே உத்தமமென்று பல்லவராயர் தீர்மானித்து, இளவரசனுன அவ்வெதிரிலிப் பெருமாளை, அவனது நாலாம் வயதில்—அதாவது கி. பி. 1165-6ல் நாடறிய **இராஜாதிராஜன்** என்று அபிஷேகத் திருநாமம் சூட்டி மகுடாபிஷேகமும் செய்வித்தார். சோழ சாம்ராஜ்ய முழுதும் அரசனையும் அமைச்சரையும் வாழ்த்தின. சிறுவனுன அரசனுக்குப் பிரதிநிதியாயிருந்து அரசியற் பொறுப்பனைத்தையும் திறமையாகவும் ஒழுங்காகவும் பல்லவராயரே நடத்தி வந்தார்.

அவ் விளவரசன் பட்டம்பெற்ற நான்கு, ஐந்து வருஷங்களில், தென்னுட்டில் குலசேகர பாண்டியனுக்கு விரோதமாக, சிங்கள வேந்தன் ஏவலால் ஈழப்படைகள் பாண்டி நாட்டில் புகுந்தன. அங்கே அவற்றை எதிர்த்த பாண்டியன் சேனைகளையெல்லாம் போரில் முறியடித்து, கொள்ளை கொலைகளால் அவ்வீழப் படைகள் நாட்டைப் பாழ்படுத்தியதோடு, சோழநாட்டிலும் நுழையத் தொடங்கின. அப்போது குலசேகர பாண்டியன் சோணுட்டுக்கு ஓடி, அந்நாட்டரசனைத் தனக்கு உதவி புரியும்படி வேண்டினுன். சோழவேந்தன் பிரதிநிதியான

பல்லவராயர் அப்பாண்டியனைத் தம் நாட்டில் பத்திரமாயிருக்கும்படி செய்வித்து, தென்னாட்டுக்கு விரைந்து சென்று ஈழப்படைகளைப் பொருது ஓட்டும்படி பெருஞ் சேனைகளுடன் தாமே தலைமை வகித்துச் சென்றார். தம் முழுப்பலத்துடன் அந்நாடு நோக்கிச் சென்றவர் அவ்விலங்கைச் சேனைகளுடன் பெரும்போர் புரிந்து அவற்றை அழித்து, படைத்தலைவனையும் கொன்று, குலசேகரபாண்டியனை முன்போல நாடாளும்படி செய்து மீண்டனர். பின்பு, சோழ ராஜ்யம் நடக்கும் முறைப்படி, பாண்டிய நாட்டிலும் தொண்டை மண்டலத்திலும் அரசியல் நிர்வாகம் நடைபெறுமாறு அப் பல்லவராயர் ஒழுங்கு பண்ணினார். அரசியலை நிர்வகிக்கும் தலைவர்கள் தம் காலத்தில் தம் கட்டளைப்படியே நடப்பதுபோல, தமக்குப் பின்பும் அப்படியே நடந்துவரும்படி திட்டம் செய்து, இளவரசனது அரசாங்கப் பொறுப்பனைத்தையும் தாமே ஏற்றுப் பெருந்திறமையுடன் நடத்தி வந்தார். இவ்வாறு சோணாட்டுக்குப் பல அனுகூலங்களையும் உண்டாக்கி, அரசனாலும் குடிகளாலும் பாராட்டப்பட்டு வந்த பெருமானம்பிப் பல்லவராயர், சிறிது காலத்தின்பின் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட, அவரது குடும்பப் பாதுகாப்புக்காகப் பல்லவராயன் பேட்டை என்னும் கிராமம் இராஜாதிராஜனது 8-ஆம் ஆட்சியாண்டில்; அவனது பிரதிநிதியாகவும் அப்போது தலைமை யமைச்சராகவும் இருந்த அண்ணன் பல்லவராயரால் இறையிலியாக அளிக்கப்பட்டது.

இச்சாஸனம் கூறுகின்றபடி, இராஜாதிராஜனது 8-ஆம் ஆட்சியாண்டுக்குச் சில வருஷங்களுக்குமுன் பாண்டிய நாட்டில் இலங்கைப் படையுடன் பல்லவராயர் நடத்திய பெரும்போரைப் பற்றி, இலங்கைச் சரித்திர

மான **மகாவமிசமும்** விரிவாகக் கூறுகின்றது. அவ் வரலாறுவது :—

பாண்டிய ராஜ்யத்தின் அரசாட்சியைப்பற்றிப் பராக்கிரம பாண்டியனுக்கும் குலசேகர பாண்டியனுக்கும் வழக்கு உண்டாயிற்று. பராக்கிரம பாண்டியன் சிங்களத்து அரசனுகிய பராக்கிரம பாகுவைத் துணை வேண்டினுன். அவ்வீழவேந்தன் தன் தண்டநாயகனுன **இலங்காபுரி**யை ஒரு பெரும்படையுடன் அனுப்பினன். இலங்காபுரி தென்னுடு வந்து சேருமுன்பே குலசேகரன் சேனையால் முற்றப்பட்டிருந்த பராக்கிரமன், பெண்டு பிள்ளைகளோடும் போரில் கொல்லப்பட்டான். இவ்வாறு 'பிரமாதம்' நேர்ந்தது எனக் கேள்வியுற்ற இலங்காபுரி யெனும் தண்ட நாயகன், பாண்டிய நாட்டை வென்று, அதனைக் கொலையுண்ட பராக்கிரம பாண்டியன் உறவினர் எவருக்கேனும் கொடுப்பது என்று துணிந்தான். துணிந்து, பெருஞ்சேனையுடன் சென்று, முதன்முதல் இராமேசுவரத்தைக் கைப்பற்றி அங்குள்ள கோயிலை அழித்தான். பிறகு **குந்துகாலம்** என்ற இடம் அவன் கைவசமாயிற்று. அங்கே ஒரு கோட்டை கட்டி அதற்குப் **பராக்கிரமபுரம்** என்று தன் அரசன் பெயரினை யிட்டான். இவ்வாறு வரும் இலங்காபுரியைத் தாக்க வேண்டி, சுந்தர பாண்டியன், பாண்டியராஜன் என்ற இருவர் தலைமையின் கீழ்ப் பெரும்படையைக் குல சேகரன் அனுப்பினுன். ஆனுல், அவ்விருவரும், சிங்கள தண்டநாயகனுல் தோல்வியுற்றுர்கள். அதன் பின்பும் பற்பல இடங்களில் போர்கள் நடக்க, அவற்றிலும் சிங்க ளவரே வெற்றியடைந்து வந்தனர். இப்போர்களொன் றில் பாண்டிய தளகர்த்தனுன ஆளவந்தான் என்பவன் மடிந்தான்.

இவையெல்லாம் அறிந்த குலசேகரன் கொங்கு நாட்டினின்று தன் மாமன் சேனைகளையும், பராக்கிரம பாண்டியன் சேனைகளிற் சிதறுண்டு போன சிலவற்றையும், தன் படைகளையும் ஒருங்கு திரட்டிக்கொண்டு தானே போருக்குப் புறப்பட்டான். பெரும் போர் மூண்டது. முடிவில் குலசேகரன் தோல்வியடைந்தான். சிங்களவர் பலவிடங்களைப் பிடித்துக்கொண்டு, அவற்றையெல்லாம் பலப்படுத்தி வந்தனர்.

கொலையுண்ட பராக்கிரமனது கடைசி மகனை வீரபாண்டியன், குலசேகரன் கையில் அகப்படாமல் மலை நாட்டுக்கு ஓடி ஒளிந்தான் என்பதை இலங்காபுரி அறிந்து, அவனை மதுரைக்குத் திரும்பி வந்து இராஜ்யத்தைப் பெற்றுக் கொள்ளும்படி சொல்லியனுப்பினன். அப்பாண்டியனும் இலங்காபுரியின் தைரியத்தால் திரும்பிவந்து, சிங்களவேந்தனல் அனுப்பப்பட்ட பரிசுகளுடன் தன்னுட்டையும் பெற்று, அவ்விலங்காபுரியின் உதவியுடன் ஆண்டுவந்தான்.

இதனோடு, இலங்காபுரி போரை நிறுத்திவிடவில்லை. மேலும், கீழைமங்கலம், மேலைமங்கலம் முதலிய ஊர்களைப் பிடித்து, கண்டதேவமழவராயன் என்பவனை அவ்விடங்களை யெல்லாம் ஆளும்படி நியமித்தான். பிறகு, **மானவீரன் மதுரை**[1] முதலிய பல இடங்களும் சிங்களவர் வசமாயின. பாதபதம் என்ற இடத்தில் நடந்த போரில் குலசேகரனுக்குப் படைத்தலைவனும் மிக்க நண்பனுமான தென்னவ பல்லவராயன் என்பவன் இறந்தான். தொண்டி, கருந்தங்குடி, திருவேகம்பம் என்ற ஊர்களும் சிங்களவர் வசமாயின. இவ்விடங்களை யெல்லாம், மாளவசக்கரவர்த்தி என்பானிடம் ஒப்

---

[1] இது மானமதுரை என வழங்குகிறது.

படைத்து, அவனை ஆளும்படி நியமித்துவிட்டு இலங்காபுரி திரும்பினான்.

சிங்களவர் மேன்மேலும் வெற்றியடைவதையும் பாண்டியர் ஓரேயடியாகத் தோல்வி யுறுவதையும் கண்டு சகியாத குலசேகரன், மறுபடியும் தன் மறப்படைகளைத் தைரியப்படுத்தித் திரட்டிக்கொண்டு ஆயத்தமாகையில், சிங்கள தளகர்த்தனால் ஆங்காங்கே நாடாளும்படி நியமிக்கப்பட்ட தமிழ்ச் சிற்றரசர்கள், சொல்லாமலே குலசேகரனுடன் சேர்ந்துவிட்டனர். இதனால் வீர பாண்டியன் மதுரை நாட்டை மறுபடியும் இழக்க நேரிட்டது. இப்படித் தன் எண்ணமெல்லாம் பழுதாகப் போனதைக் கண்ட இலங்காபுரி, உடனே தன் அரசனான பராக்கிரமபாகுவை மற்றுஞ் சில சேனைகளை அனுப்பும்படி எழுதி வேண்டிக்கொண்டான். அவ்வரசனும் ஜகத்விஜயன் என்ற தண்டநாயகன் வசம் ஒரு பெரும் படையை அனுப்பி யுதவினான். இலங்காபுரியும் ஜகத்விஜயனுமாகச் சேர்ந்து, திருப்பாலி என்ற இடத்தில் குலசேகரனை முற்ற முறியடித்து, மதுரைக்குச் சென்று, வீரபாண்டியனைத் திரும்பவும் சிங்காதனத்தில் ஏற்றினார்கள். அப்பால், இலங்காபுரி குறும்பராயன் என்றவனைப் போரில் வென்று திருப்புத்தூரைக் கைப்பற்றிக்கொண்டு, பொன்னமராவதி புகுந்து, அங்கே மூன்று மாளிகை கொண்ட அரண்மனை முதலிய கட்டிடங்களை இடித்தழித்து மதுரைக்குத் திரும்பினான்.

இவையெல்லாம் முடிந்ததும், வீரப்பாண்டியனுக்கு முடிசூட்டு மகோற்சவம் நடத்தி வைக்கும்படி பராக்கிரமபாகுவிடமிருந்து இலங்காபுரிக்கு ஆணைவர, அதன்படியே அப்பாண்டியனுக்கு மகுடாபிஷேகம் நடத்தப்பட்டது.

குலசேகரன், பின்னும் ஒருமுறை ஸ்ரீ வில்லிபுத்

தூரில் இலங்காபுரியுடன் எதிர்த்துப் பெரும்போர் புரிந்தான். ஆனால், அதிலும் அவன் தோல்வியடைந்து, சாத்தனேரியில் போய்த் தங்கியிருந்தான். அதனை கேள்வியுற்ற இலங்காபுரி அவ்வூரின்மேல் படையெடுத்துச் சென்றான். அச்செய்தியை முன்னமே அறிந்த குலசேகரன் வெள்ளத்தில் படையுடன் அவன் மடிய வேண்டும் என்று கருதி, அங்குள்ள பெரிய ஏரியின் கரையை உடைத்துவிட்டான். இந்தச் சூழ்ச்சியும் நிறைவேறவில்லை. பிறகு குலசேகரன் பாளையங்கோட்டைக்குப் போய், அங்குள்ள பாசறையிலிருந்து கொண்டு சோழனைத் துணை வேண்டினான். இராஜாதிராஜன் உடனே பல சேனைகளைத் தக்க சமயத்தில் அனுப்பியுதவினான். இப்படைத் தலைவர்களுள் பல்லவராயன், நரசிங்கவன்மராயன் என்ற இருவர் முக்கியமானவர்கள். சிங்களவர் நற்காலம் இதனுடன் ஒழிந்தது. பாண்டிய சோழ கொங்குச் சேனைகளெல்லாம் ஒருங்கு திரண்டு, பாண்டிய ராஜ்யத்தில் கோயில்களை யிடித்தும் கொள்ளை கொலைகளால் பலவகை அட்டூழியங்களைச் செய்தும் வந்த சிங்களப்படைகளைத் திருக்கானப்பேர், தொண்டி, பாசி, பொன்னமராவதி, மணமேற்குடி, மஞ்சக்குடி என்ற இடங்களில் எதிர்த்து, அவைகளைச் சிதறவடித்துப் பாண்டிய நாட்டைவிட் டொழியும்படி செய்தன. இவையே அம் மகாவமிசம் கூறியுள்ள செய்திகள்.

மேற்கூறிய வரலாறுகளால், இராஜாதிராஜன் இளவரசனாகிய காலத்திலிருந்தே சோழராஜ்யத்தின் ஆட்சி நிர்வாகம் உத்தேசமாக எட்டாண்டுவரை பெருமானம்பிப் பல்லவராயரால் நடத்தப்பட்டு வந்ததென்றும், ஈழப்படை வெற்றியை இராஜாதிராஜனது ஐந்தாமாண்டு (கி. பி. 1168)க்குச் சிறிது முன்பு அப்பல்லவராயர் பெற்றவர் என்றும் அறியலாம். அவ்

விராஜாதிராஜனது ஆட்சியை அவர்க்குப் பின் நிர்வகித்துவந்த அமைச்சர் தலைவர் வேதவன முடையான் அம்மையப்பனான அண்ணன் பல்லவராயர் என்பார். இவரும் முன்னவர் போலவே அறிவும் ஆற்றலும் அரசனது அந்தரங்கமும் பெற்று விளங்கியவர். இவர் காலத்திலும் பெரும் போர்கள் நிகழ்ந்து வெற்றிகளுண்டாயின. முன்பு பெருமானம்பிப் பல்லவராயரால் பாண்டிய சிங்காதனத்தில் அமர்த்தப் பட்ட குலசேகர பாண்டியன், சிலவாண்டுகளுக்கெல்லாம் தனக்குச் சோழ வேந்தன் செய்த நன்றியை முற்றும் மறந்து, பகைவனான சிங்களவேந்தனுடன் சேர்ந்து கொண்டு, சோணாட்டுக்குத் தீங்கிழைக்கச் சூழ்ச்சி செய்தான். இதை யறிந்த அண்ணன் பல்லவராயர், மிக்க சினங்கொண்டு இதற்குக் காரணமான இலங்கை யரசன் பராக்கிரமபாகுவை அடக்கியொடுக்க முதலில் வழி தேடினார். அச் சிங்களவரசனுக்கு அவன் நாட்டிலே பகைவனாய் இடுக்கண் விளைத்து வந்தவன் அவனுடைய மருமகனான ஸ்ரீவல்லபன் என்பவன். அவனை இப்பல்லவராயர் தமக்கு ஏற்ற துணையாகக் கொண்டு, வேண்டிய முன்னேற்பாடுகளுடன் இலங்கை மேற் படையெடுத்தார். அங்கே, ஸ்ரீவல்லபன் சேனை களும் சித்தமாயிருந்து இவர்க்குப் பேருதவி செய்தன. அதனால் பராக்கிரமபாகுவின் சேனை போரில் முற்ற முறியடிக்கப்பட்டு ஒழிந்தது. இப்பெரு வெற்றியால் ஈழநாடு சோழநாட்டுக்கு உட்பட்ட தாயிற்று. ஜயசீலரான அண்ணன் பல்லவராயர், உடனே பாண்டிய நாட்டிற்குச் சென்று நன்றி மறந்த குலசேகரனை நாட்டைவிட்டு ஓட்டி, அவன் பகைவனாய் முன் தோல்வியுற்ற வீரபாண்டிய னுக்கே பாண்டிய சிங்காதனத்தை யளித்து ஆளச்

செய்து சோணுடு மீண்டார். இப்போர் நிகழ்ச்சி, பெருமானம்பிப் பல்லவராயர் பாண்டிய நாட்டிற் பெற்ற வெற்றிக்கு 4, 5 ஆண்டுகட்குப் பின் இராஜாதிராஜனது 12-ம் ஆட்சியாண்டில் நடந்தேறியது. ஆகவே, சிங்களவருடன் இச்சோழன் படைகள் இருமுறை போராட நேர்ந்தது என்பது அறியலாகும்.

நான்கு வயதில் பட்டமெய்திய இவன் வாழ்க்கை 18-19 வயதோடு முற்றுப்பெற்றது. இவன் காலமுழுவதும், உண்மையும் உறுதியும் வீரமுமுடைய மந்திரித் தலைவர்களால் இராஜ்ய நிர்வாகம் நடத்தப்பட்டு வந்தமையால், சோழ ஏகாதிபத்யம் பெரும்பாலும் முன்னிலைமையில் விளங்கியது.

## அத்தியாயம் 4

# குலோத்துங்கன் ஆட்சித் தொடக்கம்

மேலே கூறிய இராஜாதிராஜனுக்குப் பின் குலோத்துங்கன் மகுடஞ் சூடினன். இவன் முடிசூடிய காலம் கி. பி. 1178௵ ஜூலை௴ 6உ-முதல் 8உ-க்குள் என்று கணிக்கப்பட்டுள்ளது. இக்குலோத்துங்கன் தன் முன்னோனுக்கு என்ன முறையினன் என்பதைச் சாஸனங்கள் மூலம் அறிய இடமில்லை. ஆனல், இலக்கிய வழியால் ஆராயும்போது, இராஜாதிராஜனுக்கு இளைய சகோதரன் இவன் என்பதும், இராஜாதிராஜசோழன் தன் கடைசிக்காலத்தில் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து தருவித்துத் தன் அரசுக்கு உரியவர்களாகத் தெரிந்தெடுத்த இரண்டு பிள்ளைகளுள் ஒரு வயதுடைய குழந்தையாயிருந்தவன் இவனே என்பதும் தெரிய வருகின்றன. அஃதாவது, விக்கிரம சோழனுடைய

பெண் வழிக்கொட்பேரனும், செறியுடைப் பெருமாள் என்ற சங்கமராஜனுடைய இளைய மகனுமாவான் என்பதாகும்.

கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து அழைத்து வரப்பட்டதுமுதல், தலைநகரான ஆயிரத்தளி அரண்மனையில் இக் குலோத்துங்கன் 'அழகாண்மை யெல்லாம் கண்டார் கொண்டாட' இளஞ்சிங்கம்போல் வளர்ந்துவந்தான். தமையனான இராஜாதிராஜனுக்கு இக் குலோத்துங்கன் ஒரு வயசு இளையவன். அதனால், நாலு வயதில் பட்டம் பெற்ற தன் தமையனுடன் கூட இருந்து, அரசாங்க காரியங்களில் நன்கு மேற்பழகவும், கல்வித் துறைகளில் தேர்ச்சி யடையவும், வீரப்பயிற்சிகள் பெறவும் வேண்டிய அவகாசம் இவனுக்கு அமைந்திருந்தது. அறிவில் முதிர்ந்த புலவர்களின் கூட்டுறவு இளமையிலே அமைந்தமையால், இக் குலோத்துங்கனுக்குக் கலைச் செல்வத்துடன் செவிச்செல்வமும் நிரம்பியது.

இக் குலோத்துங்கன் முடிசூடிய காலத்தில், சோழ சாமராஜ்யம் மேதாவிகளான மந்திரிகளால் திறமையுடன் நிர்வகிக்கப்பட்டு வந்தபோதிலும், இவன் முன்னோனான முதற் குலோத்துங்கன் ஆட்சியில் இருந்த நிலைமை சிறுகச் சிறுகக் குறைந்து வந்தது. இதற்குக் காரணம், சிற்றரசர்களும் படைத்தலைவர்களும், சிறியவும் பெரியவுமான தங்கள் பிரதேசங்களிலே தனிப்பட்ட அதிகாரங்களை நாட்டிக்கொண்டு சுயேச்சை பெற்று வந்ததேயாம். இந்த நிலைமை, இவன் தமையனது இளமையாட்சியில் அதிகமாயிற்று என்றும் சொல்லலாம். இதனுடன், இலங்கை அரசனான பராக்கிரமபாகு, சோழ அமைச்சர்கள் இருவராலும் தான் போரில் அடைந்த பரிபவங்களால் விரோத மிக்கவனாய், கலகம் செய்து வந்த பாண்டியருள் ஒருவன் கட்சியைச் சார்ந்து

தென்னாட்டில் எப்பொழுதும் குழப்பத்தை உண்டாக்கிக் கொண்டே வந்தான். இது சோழ நாட்டையும் பாதிப்பதாயிருந்தது. அன்றியும் வடுகுநாடுகளிலும், கொங்கு தொண்டை நாடுகளிலும், சோழமுன்னோர்க்கு இருந்த ஆதிக்கம் சிலகாலமாக நெகிழ்ந்து வந்ததால், அங்கும் அவராணையைத் தாபிக்கவேண்டியது அவசியமாயிற்று. ஆக இவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்தி வைக்கும் பொறுப்பைத் தக்கவன் ஒருவன் ஏற்றாலன்றிச் சோழ சாம்ராஜ்யம் முன்னிலைமையை அடைய முடியாமலிருந்தது.

## அத்தியாயம் 5

## போர்ச் செயல்கள்

நம் சோழன், அறிவாற்றல்களும் ஊக்கமும் உள்ள இளைஞனாயிருந்தமையால் தான் முடிசூடியதும், மேற் கூறிய கடமைகளைச் செய்து முடிக்கும் அவசியத்தை நன்குணரலானான். இவன் தமையனான இராஜாதிராஜன் இளமையில் போர் முதலிய பெருங் காரியங்களைத் தானே சென்று நேரில் நடத்தியவனல்லன். மேதாவிகளான அமைச்சர்களே பகைவர்களை ஒடுக்கியும் அவனது இராஜ்ய காரியங்களை நிர்வகித்தும் வந்தார்கள். ஆனால், இக்குலோத்துங்கன் அரசியல் முதலியவற்றுள் மேற் கூறியபடி நல்ல அநுபவம் பெற்றிருந்தமையால், இவன் முடிசூடியதும் அவையாவும் இவனுடைய பார்வையிலே நிகழலாயின. முதலில், ஆணைக்கடங்காதாரை அடக்குதற்கு இவன் புரிந்த வீரச்செயல்களை நோக்குவோம்.

## 1. வடநாட்டுப் போர்

இக்குலோத்துங்கனது நீண்ட ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த போர்கள் பல. இவன் சிங்காதனம் ஏறியதும், இவன் நோக்கம் முதலில் வடக்கே சென்றதென்பது இவன் சாஸனங்களால் தெரியவருகின்றது. சோழ ஏகாதிபத்தியத்தில் அடங்கித் தன் முன்னோர் காலமுதல் திறைகட்டிவந்த வடுக அரசர்கள், சிலகாலமாக அது செய்யாமல் மறுத்துச் சுவாதீனங் கொண்டாடி வந்தனர். அவர்களை அடக்கிவருவதற்கே இவன் அங்குப் படையெடுத்துச் சென்றான். அப்போது இவனை அவ் வடுகர் எதிர்க்க, அவர்களை முழுதும் முறியடித்து ஓட்டி, அவர்கள் நாட்டைக் கவர்ந்து வெற்றியுடன் காஞ்சீபுரம் புகுந்தனன். இவ்வரசர்கள் கொல்லாபுரம், கலிங்கம், வேங்கைமண்டலம், உறங்கை என்ற ஓரங்கல் முதலிய நாடுகளை ஆண்டவர்கள். 'எழுகலிங்கமும் கொல்லாபுரமும் பொருதோன் குலோத்துங்கன்' என்று இவன் கோவையும் இப்போரைக் கூறுதல் காணலாம். இவர்களெல்லாரும் முடிவில் நம் குலோத்துங்கனது தனியாணையை ஏற்றவர்களாய், அக் கச்சிமா நகர்க்கே வந்து திறை கட்ட, அவர்களிடம் கோபம் மாறி, அத்திறைகளை ஏற்றுக்கொண்டு தன் நாட்டிற்குத் திரும்பினான். இவ் வெற்றியே குலோத்துங்கனது கன்னிப்போரின் பயனாகக் கருதலாம்.

## 2. தென்னாட்டுப் போர்

இனி, குலோத்துங்கன் தெற்கே நடத்திய போர்களாவன :

(1) மதுரை கொண்டது
(2) பாண்டியன் முடித்தலைக் கொண்டது

(3) ஈழநாடு கொண்டது
(4) கருவூர் கொண்டது
(5) கச்சி கொண்டது
(6) மதுரையில் வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் பண்ணியது

என்பன. இனி, இவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

(1) **மதுரை கொண்டது** :—வடக்கே வடுகரசரை வென்று அடிப்படுத்திய செயல் முடிந்ததும், குலோத்துங்கனது நாட்டம் தெற்கே பாண்டிய நாட்டின்மேற் செல்வதாயிற்று. இவன் தமையனான இராஜாதிராஜனது ஆட்சிக்காலத்தில், பாண்டியர்க்குள் நிகழ்ந்த கலகங்களும் போர்களும் இருமுறை சோழ சேனாதிபதிகளால் அடக்கப்பட்டனவன்றோ? அவற்றுள் **முதலாம்போர்** குலசேகர பாண்டியனுக்கு உதவியாகப் பெருமானம்பிப் பல்லவராயர் பெரும்படையுடன் சென்று அப்பாண்டியனது விரோதியான வீரபாண்டியனுடனும், அவனுக்கு உதவியாக வந்த ஈழப்படையுடனும் நடத்தியது. **இரண்டாம் போர்**, சோழவேந்தன் செய்த நன்றியை மறந்து குலசேகர பாண்டியன் சிங்கள வேந்தனுடன் சேர்ந்து செய்த சூழ்ச்சி காரணமாக விளைந்தது. இந்த இரண்டு யுத்தங்களிலும், பல்லவராயரிருவரும் பெற்ற வெற்றிகள் முன்பே விரித்துரைக்கப்பட்டன.

இனி, குலோத்துங்கன் பட்டம் பெற்றதும் மேற்கூறிய பாண்டிய நாட்டுக் கலகம் மறுபடியும் தொடங்கியது. சோழர் செய்த உதவியை மறந்து துரோகம் செய்த குலசேகர பாண்டியன், நிலைமை குலைந்து சில காலத்தில் இறந்துவிட, அவன் மகனான விக்கிரம பாண்டியன் புதிதாகப் பட்டம் பெற்ற குலோத்துங்கனைச் சரணமடைந்தனன். சரணம் புகுந்த

அவனைக் குலோத்துங்கன் உடனே தழுவி ஏற்றுக் கொண்டான். இதினின்று, அப்போது மதுரையை ஆண்டுவந்த வீரபாண்டியன், நம் சோழனுக்கு அனு கூலமாய் இல்லாமல் வெறுப்புக்கு உரியவனுயிருந்தான் என்று தோன்றுகிறது. அவ்வாறில்லையேல் மதுரையர சுக்குச் குலசேகரன் வழியினரே அதிக பாத்தியதை உடையவர் என்று எண்ணி, அவ் விக்கிரமனை இவன் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். எது காரண மாயினும், குலசேகரன் மகனை ஆதரிப்பது தெரிந்ததும், வீரபாண்டியன் நம் சோழனுக்கு வெளிப்படையாகவே பகைவனுனன். ஆதலால், பெரும்படையுடன் குலோத் துங்கன் சென்று மதுரைப் பக்கத்தில் அப்பாண்டிய னுடன் கடும்போர் தொடுத்தான். அந்த யுத்தத்தில் வீரபாண்டியன் மகன் இறந்ததோடு, பாண்டியனது சிறந்த ஏழகப் படைகளும் மறவர் படைகளும் அழிந் தன. அவனுக்கு உதவியாக வந்த சிங்களப்படைகள் மூக்கறுப்புண்டு பரிபவப்பட்டுக் கடல்வழியே இலங்கை நோக்கி ஓடின. இவ்வாறு பகைவர் சேனைகள் நிலை குலைந்து சிதறியவுடனே "மதுரையும் அரசும்கொண்டு ஜயஸ்தம்பம் நட்டு, அம்மதுரையும் அரசும் அடைந்த பாண்டியற்கு அளித்தருளி" னன் நம் சோழர் பெரு மான். பாண்டிய நாட்டில் இவன் நடத்திய **முதற்போர்** இது.

(2) **முடித்தலை கொண்டது**:— மேற்கூறியபடி தமையன் இராஜாதிராஜன் காலத்தில் அரும்பாடு பட் டுப் பெற்ற அரசையும் தலைநகரையும், அவன் தம்பியால் இழக்கநேர்ந்த அவமானம்பொறுக்காத வீரபாண்டியன், குடமலைநாட்டுச் சேரன் உதவியைப் பெற்று, இழந்த வற்றை மீட்க வழிதேடினன். தக்க உதவி தனக்குக் கிடைக்கவே, அப்பாண்டியன், சிதறிக் கிடந்த தன்

சேனைகளைத் திரட்டிக்கொண்டு மதுரையைத் தாக்கு வதற்குப் புறப்பட்டான். அதனை அறிந்ததும், குலோத் துங்கன், சோழியப் படைகளைத் திரட்டிக் கொண்டு, தானும் அவனைத் தாக்க அதிவேகமாகச் சென்றான். இரண்டு படைகளுக்கும் மதுரைக்குக் கிழக்கே நெட் டூரில் பெரும்போர் மூண்டது. இதிலும் பாண்டியன் படைகள் சோழசேனைகளால் முற்ற முறியடிக்கப் டன. பாண்டிய முன்னோர்க்குரியதும் வீரபாண்டியனால் தரிக்கப்பட்டிருந்ததுமான கிரீடத்தைக் குலோத்துங் கன் அப் போரில் கைப்பற்றிக் கொண்டதோடு, அவன் பட்டத்துத் தேவியையும் சிறைபிடித்துத் தன் ஊருக்கு அனுப்பிவிட்டான். இவ்வாறு சேனைகளோடு தன் முடியையும் தேவியையும் இழந்த வீரபாண்டியன், 'இனி என்ன நேருமோ' என்று அஞ்சி, சோரது மலை நாட்டுள்ள கொல்லத்திற்குத் தன் குடும்பத்துடன் ஓடி யொளித்தனன். அந்நாட்டரசனான சேரன், பாண்டிய னுக்குத் தான் உதவி புரிந்தால் தன்னையும் சோழன் சும்மா விடான் என்பதை நன்கறிந்து, முடிவில் பாண் டியனோடு சென்று குலோத்துங்கனைச் சரண மடைந் தான். இவ்வாறு அடைக்கலம் புகுந்த அவ்விருவரையும் மரியாதையுடன் ஏற்று, அவருள் வீரபாண்டியனுக்கு ஒரு பகுதி நாடும் முடியும் அளித்தும், சேரனுக்கு அவன் செல்வத்தை வழங்கியும் ஆதரவு காட்டித் தன் கீழ் அமரச் செய்தனன் குலோத்துங்கன். இது நடந்த போது, கைகயன் (கைதவன் பாண்டியன்) தன் மகனுக் குப் பருதிகுலபதி என்ற பெயரைச் சூட்டி, இச் சோழன் முன் நிறுத்தவே, இவன் மனமகிழ்ந்து, அப் பாண்டியன் மகனுக்கு "இருநிதியும் பரிசட்டமும் இலங்கு மணிக்கலனு நல்கி" னான் என்று இவன் மெய்க்

கீர்த்தி கூறுகின்றது. இவ்வரலாறே பாண்டியருடன் நம் சோழன் நடத்திய **இரண்டாம் போர்** ஆகும்.

குலோத்துங்கனது சாஸனங்களில் முறையே, 'மதுரை கொண்டருளிய' 'மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய' என இப்போர்கள் பிரித்துக் கூறப்பட்டுள்ளன. அதனால், இவை வெவ்வேறானவை என்பது தெளிவாகின்றது. பாண்டியனது முடித்தலை கொண்ட களமாதல் பற்றியே, மதுரைக்கு 'முடித்தலை கொண்ட சோழபுரம்' என்ற பெயரும் பின்பு வழங்கப்பெற்றது. இவ்வாறு மதுரையும் முடித்தலையுங் கொண்ட செயல்கள் குலோத்துங்கன் பட்டம் எய்திய இரண்டாண்டுக்குள்—அதாவது கி. பி. 1180-க்குள் நடந்ததாதல் வேண்டும். இது, இவனது 2-ஆம் ஆட்சியாண்டில் அமைந்த திருவக்கரைச் சாஸனம் முதலியவற்றால் தெரியவருகின்றது. இதனால், தன் 22-ஆம் வயதில் குலோத்துங்கன் இவ்வெற்றிகளைப் பெற்றவன் என்பது பெறப்படுகின்றது.

(3) **ஈழங் கொண்டது**:—மேற்கூறிய பாண்டிநாட்டு வெற்றிகளுக்குப்பின் வீரகேரளன் என்பவன் குலோத்துங்கனுடன் பகைத்து எதிர்த்தான் என்றும், அப்போரில் கேரளன் தன் கைவிரல்கள் தறிக்கப்பட்டுத் தோற்றுச் சரணமடைந்தான் என்றும், அவனையும் அன்புடன் ஏற்றுத் தன்னுடனிருந்து உண்ணும்படி 'பரிகலத்து அமுதளித்து' உபசரித்தான் என்றும், மெய்க்கீர்த்திகள் கூறுகின்றன. இவ் வீரகேரளன் என்பவன் வேணாட்டரசன் என்று அறியப்படுகின்றான். இவன் கி. பி. 1126-7-ல் வாழ்ந்திருந்தவன் என்பது மலைநாட்டுச் சாஸனங்களால் அறியப்படுகின்றது.

இடையில் நிகழ்ந்த இம்மலைநாட்டு வெற்றியை முன்காட்டிய சாஸனக் கட்டுரைத் தொடர்கள் குறிப்

பிடவில்லை. அதனால், இதனை அவ்வளவு சிறப்புடைய தாக அக்காலத்தார் கருதவில்லை யென்று தோன்று கிறது. ஆனால் அக் கட்டுரைகள் குறிப்பிடும் பெரும் போர் 'ஈழங் கொண்டருளியது' ஆகும். இது, குலோத்துங்கனது 10-ஆம் ஆட்சி வருஷத்துக்குமுன் நடந்ததாக வேண்டும். இவன் தமையன் காலத்தி லிருந்தே, இலங்கையரசனான பராக்கிரமபாகு சோழர்க்குப் பரமவைரியாய்த் தென்னாட்டை அலைத்து வந்தவன் என்று முன்பே கூறினோம். அவனோ அவன் பின்னவனோ, இக்குலோத்துங்கன் காலத்தும் பெருந் தொந்தரவுகளை விளைத்தவனாக வேண்டும் என்றும், அதனாலேதான் இச்சோழனும் ஈழப்போரைத் தொடுக்க நேர்ந்தது என்றும் தோன்றுகின்றன. திரு மாணிக் குழிக் கல்வெட்டு ஒன்றில், ஈழவேந்தன் முடி மேல் தன்னடியிணையைச் சூட்டியவன் என்று குலோத் துங்கன் புகழப்படுவதனால், இலங்கையரசனொருவனை அடக்கி வர இவன் படையெடுத்தான் என்று தெரி கின்றது. அச் சிங்களவேந்தன் பராக்கிரமபாகு ஆவன். தனது ஆட்சி யிறுதியில், அதாவது கி. பி. 1188-9-ல் இவ் வெற்றியைக் குலோத்துங்கன் பெற்றவனாக வேண்டும் என்றும், நிஸ்ஸங்கமல்லன் என்று பேர் பெற்றவனும், இச்சோழன் சேனாபதியாய்ப் பாண்டிய நாட்டுப் போர்களை வென்றவனுமான கோப்பெருஞ் சிங்கன் தலைமையில் இப்போர் நடந்திருக்க வேண்டும் என்றும் கருதப்படுகின்றன.

(4) **கருவூர் கொண்டது** :— மேற்குறித்த ஈழப் போரை அடுத்துச் சாஸனங்கள் பலவும் கூறும் பெரும் போர் "கருவூர் கொண்டருளியது" ஆகும். இக் கருவூர், சேர மண்டலத்தின் பழைய தலைநகராய் அம் மண்டலத்தின் ஒரு பிரிவான கொங்கு நாட்டில் உள்ள

தாகும். பிற்காலத்தே, இந்நகரும் கொங்கு நாடும் சோழர் ஆதிக்கத்துக்கு உள்ளடங்கின. ஆயினும் இப் பிரதேசங்களைப் பழைய சேரரின் மரபினர்கள், கருவூர் தாராபுரங்களைத் தலைநகர்களாகக் கொண்டு, அச்சோழ ராதிக்கத்தின் கீழ் ஆண்டு வந்தனர். இவ்வாறிருந்த வர்கள் குலோத்துங்கன் ஆட்சிக்குச் சிறிது முன் காலந் தொடங்கி, சோழர்க்கு அடங்காது சுவாதீனங் கொண்டாடி வந்தனர்போலும். அதனால் அவர்களை யும் அடக்கி முன்போலத் தன் ஆதிக்கத்தில் வைக்க எண்ணினன் குலோத்துங்கன். இவன் காலத்தில் கருவூரிலிருந்தாண்ட சேரன், **கோநேரின்மை கொண் டான் வீரசோமன்** என்று தெரியவருகின்றான். இச் சேரன், தனக்கடங்காமல் பகைமை கொண்டதனால், இவன்மேற் படையெடுத்துச் சென்று கருவூர்ப்பக் கத்தில் நம்சோழன் போர் தொடுத்தான். இப்போரில், கொங்குச் சேரன் பெருந்தோல்வியடைந்து, குலோத் துங்கனைச் சரண மடைந்தனன். இவ்வெற்றியால், அவனது தலைநகரான கருவூர் சோழன் கைவசமாயிற்று. இந்நகரில் குலோத்துங்கன் ஆடம்பரத்துடன் பிர வேசித்துச் "சோழகேரளன் என்று மன்னர் தோழ விசையமா முடி" சூடி விளங்கினன். 'சோழகேரள தேவன்' என்று இக்குலோத்துங்கனையும், 'சோழ கேரள மண்டலம்' என்று கொங்கு நாட்டையும் சாஸனங்கள் பின்பு கூறியிருத்தலும் அறியத்தக்கது. இதன் பின்பு, அந்நாட்டரசையும் சரணடைந்த சேர னுக்கே அளித்து, முன்போலவே சோழவாதிக்கத்தின்-கீழ் அவனை அமர்ந்து ஆளச்செய்துவிட்டுத் தன் நகருக்கு மீண்டார். இவ்வாறு சேரனுக்கு முடிவழங்கிய சிறப்புப்பற்றி, கருவூர்க்கு "முடிவழங்கு சோழபுரம்" எனப் பெயர் பின்பு உண்டாயிற்று.

இக் கருவூரே சேரரது பழைய தலைநகர் என்று முன்னூல்களும் பின்னூல்களும் கூறுவதற்கேற்பவே திருவஞ்சிமாநகர், வஞ்சிமாநகர் என்று சாஸனங்களும் வழங்குவதும்,

"மதுரையும் பாண்டியன் முடித்தலையுங் கோண்டருளி
காஞ்சியும் வஞ்சியுங் கோண்ட" ருளி (Pd. Insc. 164)

என, இக் கருவூர்வெற்றியைக் கூறுமிடத்து, இந்நகரை வஞ்சி என்று இக் குலோத்துங்கன் காலத்துச் சாஸனக் கட்டுரை கூறுவதும் இங்கே குறிப்பிடத்தக்கவை. 'முடிவழங்கு சோழபுரம்' என்ற பெயரைக் கருவூர் இப்போது இவனால் பெற்றது போலவே, "முடிகொண்ட சோழபுரம்" என்ற பெயரை மதுரை இவனால் முன்பு பெற்ற செய்தி ஒப்பிடத்தகும். கருவூர் கொண்ட செயல், குலோத்துங்கனது 16-ஆம் ஆட்சியாண்டிலிருந்தே சாஸனங்களில் காணப்படுவதனால், கி. பி. 1194-ஆம் வருஷத்தை ஒட்டி, இக் கொங்குப் போர் நடந்ததாக வேண்டும்.

(5) **கச்சி கொண்டது:**—இக் கருவூர் கொண்டதை அடுத்துக் குலோத்துங்கனது பெருமையாகக் கூறப்படுவது அவன் 'கச்சி கொண்டது' ஆகும். கச்சியைப் பற்றிய பிரஸ்தாபம் குலோத்துங்கனது 19, 34-ஆம் ஆண்டுக் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. அவை ஸ்ரீரங்கம், குடுமியான் மலைகளில் முறையே அமைந்தவை. அவ்விரண்டிலும், குலோத்துங்கனது முதற் படையெடுப்பாக, அவன் வடதிசை சென்று ஆங்குள்ள மன்னர்களை அடிப்படுத்திய பின் கச்சிமாநகர் புகுந்தான் என்று காணப்படுகிறதேயன்றி, அக் கச்சியைப் போரில் வென்று கைக்கொண்டான் என்று குறிப்பிடப்படவில்லை. அதனால், "கருவூங் கச்சியுங்

கொண்டருளிய ” என்று சாஸனங்கள் கூறும் விசேடணம், குலோத்துங்கனது கருவூர் விஜயத்துக்குப் பின்—அஃதாவது அவனது 16-ஆம் ஆட்சியாண்டுக்குப் பின்பு—அச்சோழன் பெற்ற தனிவெற்றியாகக் கருதுவதே பொருத்தமாகின்றது.

இவ்வாறு கச்சியைக் கைக்கொள்ள நேர்ந்தது எக்காரணம்பற்றி என்பதைத் தெளிவாக அறிய இடமில்லை. தெலுங்கு நாட்டில், நெல்லூர் கடப்பை முதலியவற்றை ஆண்டுவந்த வடுகரசர்கள், குலோத்துங்கன் ஆட்சிக்கு அநுகூலர்களா யிருந்தவர்களே என்பது, அந் நாட்டுள்ள கல்வெட்டுக்கள் பலவற்றால் விளக்கமாகின்றது. அதனல், நம் சோழனது ஆட்சி முழுவதிலும் அவ் வடநாடு உட்பட்டிருந்ததெனலாம். ஆகவே, கச்சியை வேற்றரசர் கைப்பற்றி நெடுங்காலம் ஆண்டனர் என்று கொள்ள இடமில்லை. ஒருகால், நெல்லூர் கடப்பைகளிலிருந்து ஆண்டுவந்த தெலுங்கரசர்கள், குலோத்துங்கன் தென்னாட்டுப் போர்களில் மூண்டுநின்ற காலத்தில், கச்சியிற்புகுந்து கலகம் விளைக்க, அப்போது தன் படையை விடுத்து அவர்களை அடக்கி அந் நகரையும் கைக்கொண்டதாகலாம். இக்கருத்தைக் கடப்பைப் பக்கத்திலே மகாராஜப்பாடி என்ற நாட்டை நம் சோழன் காலத்தில் ஆண்டுவந்த தெலுங்கு சோடனை நல்லசித்தன தேவன் என்பவன், கச்சியிலிருந்து பிற அரசரிடம் தான் கப்பம் பெற்றுவந்ததாகப் பெருமைபாராட்டிக் கொள்ளுதல் வலியுறுத்துகின்றது. இது எவ்வாறாயினும், இக் கச்சிவெற்றி தன் ஆணைக்கு அடங்காதாரை அடக்கிவர நம் சோழன் விடுத்த சிறு படையெடுப்பின் பயனே எனலாம். இது, இவன் சாஸனங்கள் பலவும் இச்செயலை விசேடித்துக் கூறமல் நெகிழ விட்டிருப்பதனல் அறியப்படுகின்றது.

**(6) மதுரையில் வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் செய்துகொண்டது:**—கச்சிகொண்டருளியதை அடுத்துச் சாஸனங்கள் புகழும் குலோத்துங்கனது அரிய செயல்கள், இவன் புரிந்த வீராபிஷேக விஜயாபிஷேகங்களாகும். இச்செயலை, இவனது 26-ஆம் ஆட்சியாண்டில் அமைந்ததிருவொற்றியூர்க் கல்வெட்டுக் குறிப்பிடுதலால், அந்த ஆண்டுக்கு அதாவது கி. பி. 1204-5க்குச் சிறிதுமுன்பு—இவ்விசேடம் நடந்ததாக வேண்டும். இவ்வபிஷேகங்களைச் சோழன் செய்து கொள்ளுதற்குக் காரணமான சம்பவங்கள், குடுமியான் மலை மெய்க்கீர்த்தி முதலியவற்றிலிருந்து அடியில் வருமாறு தெரியவருகின்றன.

குலோத்துங்கன் சேரரிடமிருந்து கருவூரைக் கைப்பற்றி, அந்நகரிலேயே சோழகேரளன் என்ற பட்டப் பெயரையும் விசயமாமுடியையும் சூடிக்கொண்டு, வீரமா முடியையும் புனைதற்கு எழுந்தான். அக்காலத்தில், தன்னால் முன்பு சிங்காதனம் பெற்ற விக்கிரம பாண்டியன் மகனான ஜடாவர்மன் குலசேகர பாண்டியன் என்பவன் பாண்டிய நாட்டை ஆண்டுவந்தனன். இப்பாண்டியன் தான் ஆளத்தொடங்கிய (கி. பி. 1190) சில ஆண்டுகட்கெல்லாம், தன் தந்தைபோலச் சோழர் ஆதிக்கத்துக்கு உட்பட்டிராமல் சுதந்திரம் பாராட்டியதோடு, குலோத்துங்கனுக்கு விரோதமான செயல்களையும் செய்து வந்தான். பாண்டிநாட்டில் காணப்படும் இக்குலசேகரனது ஆடம்பரமான மெய்க்கீர்த்திகள், சோழனுடன் இவன் பகைமை பாராட்டிவந்தவன் என்பதைக் குறிப்பிடுகின்றன.

குலோத்துங்கனுடைய தமையன் காலத்தில் இருமுறையும், இவன் காலத்தில் இருமுறையுமாகப் பாண்டிய நாட்டில் விளைந்த நான்கு பெரும்போர்களால் சோணாட்

டுக்கு உண்டான கவலையும் துன்பங்களும் கணக்கில் அடங்கா. அவற்றை யெல்லாம் முடிவில் அரும்பாடு பட்டு ஒடுக்கிப் பாண்டிய நாட்டில் தான் செய்துவைத்த ஒழுங்கையெல்லாம் குலசேகர பாண்டியன் குலைக்கத் தொடங்கவே, குலோத்துங்கனுக்கு உண்டாகிய சீற்றத்துக்கு அளவில்லை. பாண்டிய அரசாட்சியையே அடியோடு தொலைத்துச் சோழர் ஆதிக்கத்தில் அதை வைத்துவிடுவது என்று அவன் துணிந்தான்; துணிந்து, தன் ஆற்றல் மிக்க படைகளை யெல்லாம் திரட்டிக் கொண்டு, பாண்டி நாட்டின்மேல் பாய்ந்தான்.

சோழன் சேனைகள் அதிவேகமாகத் தன்னுடு நோக்கி வருதலை அறிந்த குலசேகரன், பேர்பெற்ற தன் ஏழகப்படை மற்றப் படைகளைத் திரட்டிச் சென்று மட்டியூர், கழிக்கோட்டை என்ற இடங்களில் அச் சேனைகளை எதிர்த்துநின்றான். பெரும்போர் மூண்டது. வீராவேசத்துடன் பாண்டியன் சேனைகள் சோழ சேனைகளைத் தாக்கின. ஆயினும் பல தலைமுறைகளாகப் பகைவருடன் பொருது பழகி, சோழ ஏகாதிபத்தியத்தின் மேம்பாட்டுக்குக் காரணமாயிருந்த குலோத்துங்கனது மூலப்படைகளின் முன், அவை நிற்கும் வலியற்றுச் சிதறின. சோழ சேனைகள் அப் பாண்டியன் படைகளை உழக்கித் துகைத்து அழித்துவிட்டன. அதனால், பாண்டியன் தன் குடும்பத்துடன் காட்டுக்குள் புகுந்து ஒளிக்க வேண்டியதாயிற்று. உடனே, சோழன் படை யாவும் மதுரைக்கோட்டையை வளைத்துக்கொண்டு, அங்கு நடந்த எதிர்ப்புக்களையும் கடந்து நகருக்குள்ளே புகுந்தன. புகுந்து, அரண்மனையுள் முடிசூட்டுமண்டபம் முதலியவற்றை இடித்துத் தகர்த்ததோடு, அவற்றைக்

கழுதையேர் கொண்டு உழுது கவடி* வித்திப் பாழ் படுத்திவிட்டனர். குலோத்துங்கன் பாண்டியன்மேல் கொண்டிருந்த பெருஞ்சீற்றம் இத்தகைய செயல்களால் ஒருவாறு தணிவுற்றது. இப் பெருவெற்றியால் உள்ளம் பூரித்த சோழன், கருவூர் விஜயத்தில் 'சோழகேரளன்' என்ற பட்டப்பெயர் பூண்டு, விஜயமாமுடிசூடியது போலவே, மதுரையில் சோழ பாண்டியன் என்ற பட்டமும் வீரமாமுடியுந் தரித்து ஜயஸ்தம்பமும் நாட்டினான்.

இவ்வாறு சேரரது கருவூரையும், பாண்டியரது மதுரையையும் வென்று கைக்கொண்ட விஜயங்களிலிருந்து 'திரிபுவன வீரன்' என்ற சிறப்புப் பெயர் நம் குலோத்துங்கனுக்கு வழங்குவதாயிற்று. மூன்று தமிழ் நாடுகளுக்குமுரிய வீரன் என்பது இப்பெயரின் உட்பொருளாகக் கொள்ளத்தகும். குலோத்துங்கனது 26-ஆம் ஆட்சியாண்டுமுதல் இப் பட்டப் பெயராலேயே இவனைச் சாஸனங்கள் பெரும்பாலும் வழங்கலாயின. பாண்டியநாட்டைச் சோணாட்டின் பகுதியாக்குவதற்கே நம் சோழன் அப்போரைத் தொடுத்தவனாதலால்,

" வண்டறைதார் வழுதியரைக்
கொண்ட பாண்டி மண்டலத்தை
சோழபாண்டி மண்டலமென்
றேழுபாரும் சொலநிறுத்தி
மல்லல்வையை மதுரையையும்
மதுரையென்று பேரொழித்துத்
தொல்லைமுடித் தலைகொண்ட
சோழபுரம் என்றருளி

* கவடி-வெள்வரகு.

தாடொழுத மண்டபத்தில்
சேரபாண்டியர் தம்பிரானேன்று, பேரெழுதி ''

என்று மெய்க்கீர்த்தியும் இவனைப் புகழ்ந்தது. இதனால், பாண்டிமண்டலத்துக்குச் சோழபாண்டி மண்டலமென்றும், மதுரைக்கு முடித்தலைகொண்ட சோழபுரம் என்றும் மதுரை அத்தாணிமண்டபத்திற்குச் 'சேரபாண்டியர் தம்பிரான்' என்றும் பேர்களை வழங்கினன் இவ்வேந்தன் என்பது அறியலாகும். அன்றியும், இவ் வெற்றி மகிழ்ச்சியால் வேட்டை முதலிய பற்பல விளையாடல்களைப் புரிந்தும், திருவாலவாய்ச் சிவபிரானுக்குத் தன் பேரால் திருவீதியும், திருநாளும் அமைத்தும், அப்பெருமான் பவனிவிழாவைத் திருவீதியிற் கண்டும் மகிழ்ந்தான்; திருவாலவாய்க் கோயிலை, தான் திறைகொண்ட பொன்னால் வேய்ந்ததோடு, இறையிலிகள் பல அளித்தும் சிறப்பித்தான்.

இனி, இப் பெரிய மதுராவிஜயத்தில் வீரர் பெருமானை இச்சோழன்—

'' பாண்டியனைப் பாண்டியன்
என்னும்பேர் மாறிவர
நெடும்படைத் தென்னவர்கெட
மதுரைகொண்ட தோள்வலிபாடிய ''

பாணனொருவனுக்குப் பாண்டியன் என்னும் பட்டஞ் சூட்டினன் என்றொரு செய்தியையும் இவன் மெய்க்கீர்த்தி கூறுகின்றது. இவ்விஷயம்—

'' ஒன்னார் தேஎம் அவர்கட் டாகவும்
நினதெனப் பாண்கடன் இறுக்கும் வள்ளியோய் ''
(புறம்)

என்று முன்னோர் புகழ்ந்துள்ள பெருவீரத்திறத்தை

ஞாபகப்படுத்துகின்றது. பகைவர் நாடு அவரிடத்தில் இருக்கும்போதே, அதனை 'உன்னது' என்று தன்னைப் பாடிய பாணனுக்கு அளித்துதவும் வள்ளல் என்பது இதன் கருத்து. பாண்டியனைப் பேர் மாற்றிப் பாணனுக்குப் பட்டஞ் சூட்டிய இச்செயலை, தன் சாமந்தருள் ஒருவனான வாணகோவரையனைக்கொண்டு இவ்வரசன் நடத்தினான் என்று தெரியவருகிறது. இது, அச் சாமந்தனைப்பற்றிக் கூறுமிடத்து விளக்கப்படும்.

இனி, முன்பு விசயமாமுடியையும் வீரமாமுடியையும் சூடிய குலோத்துங்கன் தன் நோக்கங்கள் யாவும் பூர்த்தியானதற்கு மகிழ்ந்த, அம்மதுரைமா நகரிலேயே விஜயாபிஷேகமும் வீராபிஷேகமும் செய்து விளங்கினான். இவ்விரண்டு அபிஷேகங்களும் நடத்தப்பெற்ற நகரம் மதுரையே என்று புதுக்கோட்டைச் சீமைச் சாஸனங்கள் குறிப்பிடுகின்றன. இதனால், விசயமுடி வீரமுடிகள் சூடிய நகரங்கள் வேறாயினும், அவ்வபிஷேகங்கள் நடைபெற்ற தலம் ஒன்றே என்பதில் ஐயமில்லை. பிற்காலத்தில், வீரபாண்டியன் என்பவனும் இவ்விரண்டு அபிஷேகங்களையும் தில்லையில் நடத்திக் கொண்டான் என்று கூறப்படுதல் இதனுடன் ஒப்பிடத் தக்கது.

குலோத்துங்கனது இம் மதுரா விஜயம், பாண்டியருடன் மூன்றும் முறை பொருது பெற்றதாகும். இச் சோழனது 24-ம் ஆண்டில் அமைந்த திருவாரூர்ச் சாஸனத்தில், மதுரையில் இவன் பெற்ற திரிபுவனவீர தேவன் என்ற சிறப்புப் பெயர் காணப்படுவதனால், அவ் வாட்சிக் காலத்துக்கு முன்பு— அஃதாவது கி. பி. 1202-க்குச் சிறிது முன்பு— மேற்குறித்த அபிஷேகங்களைப் புரிந்து கொண்டான் நம் வேந்தன் என்பது தெரியலாகும். இதுவரையில் கூறிவந்த வீரச்செயல்க

ளால், தன் 24-வருஷ ஆளுகையில் குலோத்துங்கன் அடைந்த வெற்றிகளை அடியில் வருமாறு குறிப்பிடலாம் :—

(1) முதலாம் ஆட்சியாண்டுக்கு முன் வீரபாண்டியனை வென்று மதுரை கொண்டது. கி. பி. 1178–9.

(2) இரண்டாம் ஆண்டுக்குமுன் இரண்டாம் முறை, அவ் வீரபாண்டியனை வென்று அவன் முடித்தலை கொண்டது. கி. பி. 1180–1.

(3) பத்தாம் ஆண்டுக்குமுன் ஈழங்கொண்டது. கி. பி. 1188–9.

(4) பதினாறும் ஆண்டுக்குமுன் கருவூர் கொண்டது. கி. பி. 1194–5.

(5) பத்தொன்பதாம் ஆண்டுக்குமுன் கச்சி கொண்டது. கி. பி. 1197–8.

(6) இருபத்து நான்காம் ஆண்டுக்கு முன் மதுரையில் வீராபிஷேகம், விஜயாபிஷேகம் புரிந்து கொண்டது. கி. பி. 1202–3.

## அத்தியாயம் 6

# கலை வளர்ச்சி

நமது குலோத்துங்கனது சாஸனங்களாக இது வரையில் கிடைத்துள்ளவற்றிலிருந்து, இவன் நாற்பது ஆண்டுகள்வரை ஆட்சிபுரிந்து வாழ்ந்தான் என்று தெரிய வருகின்றது. மேற்கூறியபடி, 24 வருஷங்களாக அடைந்த வெற்றிகளுக்குப் பின்பு, இவன் புரிந்த வீரச் செயல்களாக எதனையும், இவனது பின்வாழ்வில் அமைந்த சாஸனங்கள் குறிப்பிடவில்லை. அதனால், நம் சோழனது ஆட்சியின் பிற்பகுதியில்—அதாவது 16 வருஷகாலம் வரை—இவனது அறிவாற்றல்களால் சோழ ஏகாதிபத்தியம் யாதொரு குழப்பமும் இல்லாமல் அமைதி பெற்றிருந்தது என்பது அறியலாகும். இக் காலத்தில், கலைத்துறைகளை அறிந்து வளர்ப்பதிலும் பெரும்புலவர்களுடன் அளவளாவி இன்புறுவதிலும், நீதிமுறைகளை நிலைநிறுத்துவதிலும், அறச்செயல்கள் புரிவதிலும் தன் சிறந்த காலத்தின் பெரும்பகுதியைச் செலவிட்டவன் இவன் என்றே சொல்லலாம். இனி, இவன் காலத்தில் வாழ்ந்த பெரும்புலவர்களையும் அவர்கள் இவனைப்பற்றிக் கூறியுள்ள செய்திகளையும் நோக்குவோம்.

### 1. குலோத்துங்கன் கோவையாசிரியர்

நம் சோழன்பேரில் அழகான கோவைப்பிரபந்த மொன்று பாடப்பட்டுள்ளது. இதனை இயற்றிய ஆசிரியர் இன்னார் என்று தெரியவில்லை. ஆயினும், இச்சோழனால் பெரிதும் அபிமானிக்கப்பட்ட புலவர்களுள் ஒருவராகவே இவரைக் கொள்ளலாகும். இக்கோவையை இயற்றியவர்

ஒட்டக்கூத்தரே என்று சில காலத்துக்கு முன்வரை கருதப்பட்டது. ஆனால், நூல் அச்சேறிவெளிவந்த பின், இதன் பாட்டுடைத்தலைவனான சோழன், நம் குலோத்துங்கனேயன்றி வேறெவனுமல்லன் என்பது தெளிவாயிற்று. இக்கோவையிலிருந்து, நம் சோழர் பெருமானது கலைவளர்ச்சித் திறம் நன்கு விளங்குகின்றது. முத்தமிழ்த் துறையிலும் பிற கலைகளிலும் சிறு பருவத்திலிருந்தே நல்ல பயிற்சி பெற்றுத் தேர்ந்தவன் இவன் என்பது தெளிவாகின்றது. இதனை,

"எண்ணெண்கலையே தெரியுங் குலோத்துங்கசோழன்" (57)
"கலைவாரி" (56).
"பலநூற் புலவோர்க்குத்தாபரன்" (125).

என்ற இக்கோவையடிகளால் அறியலாகும். இதற்கேற்பச் சிற்பக்கலையில் இவனுக்கிருந்த விருப்பம், திரிபுவனம் என்ற ஊரில் இவனால் கட்டப்பட்ட சிவாலயத்தின் மாதிரியிலிருந்து நன்கு தெரியக்கூடும். இராஜேந்திரசோழ ஆசாரியன் என்ற சிற்பியொருவனுக்கு இவ்வரசன் நிலம் விட்டு ஆதரித்திருப்பது, தொழில்துறைகளில் இவனுக்கிருந்த அபிமானத்தைக் காட்டுகின்றது. நாட்டியக்கலை வளர்ச்சியிலும் இவனுக்குப் பெருவிருப்பம் உண்டு. திருவிடைமருதூர்க்கோயிலில் ஆடுதற்காக நிருத்தம் வல்ல கூத்தர்களை இவன் அதிகப்படுத்தியதோடு, தன்னிடமிருந்த கூத்தன் ஒருவனை அக்கோயிலுக்கு அளித்திருப்பதினாலும், தன் ஆஸ்தானக் கூத்தனான குலோத்துங்க சோழ நிருத்தப் பேரரையன் என்பவனுக்கு வேண்டியன உதவி அபிமானித்திருப்பதனாலும், இவ்வாறே கலாவிநோத நிருத்தப்பேரரையன் என்பவனும் இவனால் சம்மானிக்கப்பட்டிருப்பதனாலும் இது விளங்குகின்றது.

நம் சோழனுக்குமுன்பு மூன்று தலைமுறைகளாக ஆண்ட சோழர் ஆட்சிகளிலே, தமிழ் வளர்ச்சி செழித்தோங்கியது. **செயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, சேக்கிழார்** முதலிய பெரும்புலவர்கள் அக்காலத்தில் விளங்கினர். சோழ அரசர்களும் தமிழை நன்கு கற்றும் ஆதரித்தும் வந்தார்கள். அத்தகைய பயிற்சியும் ஆதரவும் நம் சோழனுக்கும் பரம்பரையுரிமையாகவே கிடைத்திருந்தன. இது பற்றியே தமிழ்க்கலையில் இவனுக்கிருந்த அபிமானத்தையும், அத்துறையை இவன் வளர்த்து வந்ததையும், இக்கோவையாசிரியர் எல்லாவற்றினும் அதிகமாகவே கூறிப் புகழ்கின்றார். இக்குலோத்துங்கனது பேரத்தாணியைத் தமிழ்வாணர் பலர் அலங்கரித்து வந்தார்கள். அப்புலவர் பெருமக்களால் இவன் வாடாப்புகழ்மாலைகள் பல சூடினான். தன்பால் வரும் புலவர்களிடம் பொதுநோக்கொழிந்து அவர்கள் புலமையையும் கவித்திறமையையும் அளந்து மதித்தே அவர்களை ஆதரித்து வந்தவன் இவன். பாவாணர் மட்டுமின்றி, உரைவாணர்களும் இவன் அவையை அணுகி உரைத்திறத்தால் தங்கள் பெரும் புலமையைக் காட்டி வந்தனர். அவர் உரையையுஞ் சோதித்து மதிப்பிட்டவன் இவன். இவ்வாறு, நூலிலும் உரையிலும் ஆராய்ச்சி மிக்கவனாய்த் தமிழருமை அறிந்தவனாதலால், உண்மைப் புலவர்களே இவனவையில் விளங்கி ஆதரவு பெறலாயினர்.

## 2. வீராந்தப் பல்லவராயர்

இங்ஙனம் கோவையாசிரியர் கூறியபடி இவனது நாளோலக்கத்தைச் சிறப்பித்து வந்த பெரும் புலவர்களுள், நம் சோழனால் அபிமானிக்கப்பட்ட ஆஸ்தான

கவியொருவர், சாஸனமூலம் நமக்குத் தெரியவருகின்றார். இவர்பெயர், வீராந்தப் பல்லவராயர் என்பது. நம் குலோத்துங்கன், 23-ஆவது ஆட்சி வருஷத்தில் தன் வாயிற்புலவரான இப்புலவர் கேட்டுக்கொண்டபடி, 'கலாவிநோத நிருத்தப் பேரரையன் பாரசவன் பொன்னன்' என்பானுக்கு, அவ்வூர்ச் சிவாலயத்தில் "நட்டுவ நிலை" என்ற விருத்தி நடத்தும்படி ஆணையளித்தான் என்று திருக்கடவூர்க் கல்வெட்டுக் கூறுகின்றது. ஆலயங்களிலும் அரசாது ஓலக்கங்களிலும் நிருத்தமாடி மகிழ்விப்போர், பெண் பாலார்மட்டுமன்றி ஆண்மக்களும் பலர் இருந்தனர். இவர்கள் எல்லாரும் நாட்டிய சாஸ்திரத்திலும் அலங்கார நூல்களிலும் தக்க பயிற்சி வாய்ந்தவர்கள். இச்செய்தி பின்பு விவரிக்கப்படும். ஆஸ்தான கவியான இவ்வீராந்தப் பல்லவராயரால் அபிமானிக்கப்பட்ட நிருத்தப் பேரரையனும் இத்தகைய கலைகளில் வல்லவனாயிருந்தமை பற்றியே, இப்புலவரும் அரசனும் அக்கூத்தனை ஆதரித்தனர் என்று சொல்லலாம். மேற்கூறிய குலோத்துங்கன் கோவையில், பாட்டுடைத் தலைவனான நம் சோழனது குணஞ்செயல்களும் அறிவாற்றல்களும் பலபடப் பாராட்டிக் கூறப்பட்டிருப்பதை நோக்கும்போது, அவனது அன்பிற்குரியவராகச் சாஸனங்கள் கூறிய இவ்வீராந்தப் பல்லவராயர்போன்ற ஆஸ்தான கவியினால், அக்கோவை இயற்றப்பட்டிருக்குமோ என ஐயம் நிகழ்கின்றது.

## 3. சங்கரசோழனுலா ஆசிரியர்

சங்கரசோழனுலாவின் ஆசிரியரும் நம் சோழன் காலத்தில் வாழ்ந்திருந்தவரே. இவர் பெயரும் இன்ன

தென்று தெரியவில்லை. இவரால் பாடப்பெற்ற சங்கர சோழன் என்பவன் நம் குலோத்துங்கனுடைய இளைய சகோதரனாவான். இவன், இரண்டாம் இராஜராஜன் இறந்த சில வாண்டுகளுக்குப்பின் சங்கமராசனுக்குப் பிறந்தவன் என்றும், தன் தமையன் காலத்தில் சோணாட்டின் ஒரு பகுதிக்குப் பிரதிநிதியாய் ஆண்டு வந்தவனென்றும் தோன்றுகின்றன. சங்கரனுடைய மூத்த சகோதரர்களாக இவர் குறித்த நல்லமனும் குமார மகீதரனும் முறையே இராஜாதிராஜனும் குலோத்துங்கனுமே யாவர். இவருள் பின்னவன், குமார குலோத்துங்கன் என்று சாஸனங்களிலும் வழங்கப் படுவன். இவனும் இவன் சகோதரர் இருவரும் சங்கமராஜன் என்பவனுடைய தவப்புதல்வர் என்று இவ்வுலாவாசிரியர் குறித்தபடியே,

"சங்கமராச குலோத்துங்கன்"
"சங்கமராச வரோதயன்"

என்றும் 'சங்கரன் முன்னோன் குலோத்துங்கன்' என சங்கரராசனுக்குத் தமையனே இவன் என்றும் குலோத்துங்கன் கோவையாசிரியர் கூறுதல் நோக்கத் தக்கது. இவ்வாறு சங்கம ராசன் புதல்வராகத் தெரிந்த மூவரும், இரண்டாம் இராஜராஜனை அடுத்துச் சோணாட்டை ஆண்டவர்கள் என்ற விஷயம் இவருலாவினால் தெளியப்படும். இரண்டாம் இராஜராஜன், தன்மேற் கூத்தர் பாடிய உலாக்கண்ணி ஒவ்வொன்றற்கும் பொன்னாயிரஞ் சொரிந்தான் என்பதும், அவன் தந்தையான இரண்டாங் குலோத்துங்கன் உலாவோடு பிள்ளைத்தமிழொன்றாலும் அப் புலவராற் பாடப் பெற்றனன் என்பதும் இவ்வுலாவாசிரியர் வாக்கிலிருந்தே முதன் முதல் நமக்குத்

தெரியவந்தன. இரண்டாம் இராஜராஜனுக்குப் பின்பு ஆண்டவர்களாக இவ்வுலாப்புலவர் குறிப்பிட்ட சகோதரர் மூவர்களிலே, குமாரமகீதரன் அல்லது குமார-குலோத்துங்கன் என்ற நம் சோழனை வீரப் பெருமையாற் பெரிதும் புகழ்கின்றார் இப்புலவர். இதனால், நம் சோழனது வெற்றிச் செயல்களை நேரில் அறிந்தவர் இவ்வுலாவாசிரியர் என்றே சொல்லலாம்.

## 4. கம்பநாடர்

நம் சோழனால் ஆதரிக்கப்பெற்று அவனது அவையை அலங்கரித்த பெரும்புலவர்களிலே, கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பநாடரும் சேர்ந்தவராயிருத்தல், இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இப்புலவர் பெருமான் தம் பெருங்காவியத்திலே,

'' புவிபுகழ் சென்னிபோ ரமலன் தோள்புகழ்
கவிகள்தம் மனையெனக் கனகராசியும் '' (கம்பரா. கிட். பிலநீங்கு. 53.)

'' சென்னிநாள் தெரியல் வீரன்
தியாக விநோதன் தெய்வப் பொன்னி நாடு ''
(ஷை யுத். மருத்து. 358)

என இரண்டிடங்களில் புகழப்பட்ட சோழவேந்தன் நம் குலோத்துங்கனேயாவன். திரிபுவனவீரன், வீரராஜேந்திரன் என்பவை இச்சோழன் தரித்த பிரபல நாமங்களாதலால், 'வீரன்' 'போரமலன்' என்றும், இவ்விசேடணம் இவன் முன்னோர் சிலர்க்கும் சொல்லக்கூடியதாதலால், இவ்வரசனுக்கே உரிய சிறப்புப் பெயரால் **தியாக விநோதன்** என்றும் குறிப்பிடலாயினர் கம்பநாடர். தியாகவிநோதன் என்ற பெயர் நம் சோழனுக்கே உரிய

தென்பது பின்பு தெளிவாக விளக்கப்படும். இவன் முன்னோன விக்கிரமசோழன் தியாகசமுத்திரம் என்றும், இரண்டாம் இராஜராஜன் தியாகமேகம் என்றும் வழங்கப்பட்டனர். தெய்வக் கவியாகிய கம்பரால் பாடப்பெற்ற சிறப்புடைமை பற்றிப் போலும்,

"தமிழ்வாணர் தெய்வக் கவியாபரணன்"

என்றார் கோவையாசிரியரும். "மும்மணிக்கோவை" என்ற நூல் ஒன்று கம்பரால் இயற்றப்பட்ட தென்றும், அதனைச் சோழன் முன் அவர் அரங்கேற்றிய காலத்தில் அவர்க்குப் பகைவனாயிருந்த வாணியன்தாதன் என்பான், அந்நூலின் முதற்சீரில் குற்றங்கூறினான் என்றும் தமிழ் நாவலர் சரிதை கூறுகின்றது. இம் மும்மணிக்கோவை நம் சோழன்மேற் பாடப்பட்டதாக வேண்டும். இவற்றால் முதற் குலோத்துங்கனது அரசவையைச் சயங்கொண்டாரும், இரண்டாம் குலோத்துங்கனது நாளோலக்கத்தைக் கூத்தரும், மூன்றும் குலோத்துங்கனது அத்தாணியைக் கம்பநாடரும் ஆக, கவிச் சக்கரவர்த்திகள் மூவர், புவிச்சக்கரவர்த்திகளான குலோத்துங்கர் மூவர்களின் பேரவைகளை அலங்கரித்து வந்தார்கள் என்பது, சரித்திரங்களினின்று நாம் தெளியலாம்.

கம்பநாடரது காலம்பற்றி வெவ்வேறு வகையான கருத்துக்கள் கூறப்படுகின்றன. ஆயினும், பலவாண்டுகளுக்கு முன்பே, அவ்விஷயமாக, மகாவித்வான் ரா. இராகவையங்கார் அவர்கள் செந்தமிழ் 3-ஆம் தொகுதி 6-ஆம் பகுதியில் ஆராய்ச்சி நிரம்பிய கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். புலவர் பெருமானான கம்பரை 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கொள்வதற்கு ஆதாரமே இல்லை யென்பதும், ஒட்டக்கூத்தரை

இவர்க்கு முழு விரோதியாக்கி வழங்குங் கதைக ளெல்லாம் வெறுங் கற்பனைகளே என்பதும், இவர்க்குப் பகைவனாயிருந்த புலவன் **வாணியன் தாதன்** என்பான் என்பதும், கூத்தர்க்கு 35, 40-வருஷங்களுக்குப் பின்பே கம்பர் பிரசித்தரானவர் என்பதும் இராமாயணத்தை இவர் பாடியகாலம் கி. பி. 1178-1185-க்குள் ஆக வேண்டும் என்பதும் ஓரங்கல் (Warrangal) ராஜ்யத்தைத் தன்னாற்றலால் ஓங்கச்செய்த முதற் பிரதாபருத்திரனிடம் (கி. பி. 1162-1197) இப்புலவர் சென்று அவனை வசப்படுத்தி அவனால் பெரிதும் அபிமானிக்கப் பட்டவர் என்பதும், முதலில் இக்குலோத்துங்கனால் ஆதரிக்கப் பெற்றுவந்த இவர், இவனாட்சி இறுதியிலோ அல்லது இவன் பின்னோன் காலத்திலோ இராஜகோபத் துக்குள்ளாகி அவன் அம்பால் எய்யப்பட்டு உயிர் துறந் தார் என்பதும், அவ்வாறு துறக்கும்போது சோழ வமிசம் அழியும்படி சபித்துப்பாடினார் என்பதும், இப் பெரும்பாதகத்தைப் பாண்டியன் அறிந்து சோழன்மேற் பழிகூறினான் என்பதும், மற்றும் பல அரிய செய்திகளும் தமிழ்நாவலர் சரிதை, தொண்டைமண்டல சோழ மண்டல சதகங்கள் முதலிய முன்னூற் பிரமாணங் களுடன் ஐயங்காரவர்கள் எழுதிய அக்கட்டுரையால் வெளியாகின்றன. பல நூற்றாண்டுகட்கு முற்பட்ட அந்நூல்களிற் கூறப்பட்ட வரலாறுகள், இக்காலத் தாரது புனைந்துரைச் செய்திகளிலும் சிறந்த பிரமா ணங்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

> '' ஆவின் கோடைச்சகர ராயிரத்து நூற்றேழித்துத்
> தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு—மூவலூர்ச்
> சீரார் குணாதித்தன் சேயமையப் பாடினான்,
> காரார்கா குத்தன் கதை ''

என்ற பழம்பாடலின்படி, கி. பி. 1178-ல் கம்பர் தம்

இராமாயணத்தைப் பாடத் தொடங்கி, 'எண்ணிய சகாத்த வெண்ணூற்றேழின்மேல்' என்றபடி கி. பி. 1185-ல் அஃதாவது ஏழாண்டுகளில் அப் பெருங்காப்பியத்தை முடித்தார் என்றும், நம் சோழன் காலத்தே-தான் அவர் வாழ்ந்தவர் என்றும் முடிவுகட்டி ஐயங்காரவர்கள் எழுதியவை பெரும்பாலும் ஆராய்ச்சி வல்ல அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளற்குரியன.

## 5. குணவீர பண்டிதர்

இவர் ஒரு ஜைனப் பெரியார்; களந்தை வச்சணந்தி முனிவரின் மாணாக்கர். இவரால் எழுத்துச் சொற்களின் இலக்கணங்களைப் பற்றி **நேமிநாதம்** என்ற சின்னூலும், யாப்பமைதிபற்றித் தம்மாசிரியர் பேரால் **வச்சணந்திமாலை** என்ற வெண்பாப் பாட்டியலும் இயற்றப்பட்டுள்ளன. பின்னதான பாட்டியலின் நூற்பாயிரத்தில், **திரிபுவனதேவன்** என்ற அரசனது அவைக்களத்தே தம் நூல் அரங்கேற்றப்பட்டதாக இக் குணவீரபண்டிதரே குறிப்பிட்டுள்ளார். இவர்கூறிய திரிபுவன தேவன் என்பான், நம் சோழனான திரிபுவன வீர தேவன் என்பதில் ஐயமில்லை. "உரைவாணர் தங்கள் நவை காணின் மாற்றுங் குலோத்துங்கன்" என்ற கோவையாசிரியர் கூற்று, வச்சணந்திமாலை போன்ற நூலுரைகள் இவ்வரசன் திருமுன்பு அரங்கேற்றப்பட்டதைக் குறிப்பதுபோலவே தோன்றுகிறது.

## 6. அரும்பாக்கத்து அருணிலை விசாகன்

சங்க காலத்தில் இயற்றப்பட்ட பாரதமொன்றும், தெள்ளாறெறிந்த நந்திவர்மன் (III) காலத்தில் இயற்றப்பட்ட பாரதமொன்றும் தவிர, நம் சோழவேந்தன்

காலத்திலும் தமிழ்ப்பாரதமொன்று இயற்றப்பட்டதென்பது, திருவாலங்காட்டுச் சாஸன மொன்றால் தெரியவருதல் குறிப்பிடத் தக்கதாகும். அக் கல்வெட்டில் "ஜயங்கொண்ட சோழமண்டலத்து மணவிற் கோட்டத்துத் திருப்பழையனூர் நாட்டுத் திருவாலங்காட்டுத் திருவரங்கில் அண்டமுற நிமிர்ந்தருளின நாயனார்க்கு திருநந்திவிளக்கொன்று, குன்றவத்தனக் கோட்டத்து இல்லத்தூர் நாட்டு அரும்பாக்க முடையானான அருணிலைவிசாகன் திரைலோக்ய மல்லன் வத்ஸராஜன்" என்பார் இக்குலோத்துங்கன் ஆட்சியின் 32-ஆம் வருஷத்திலே அமைத்தனர் என்றும் இவர் "பாரதந்தன்னை அருந்தமிழ்ப் படுத்திச் சிவநெறி கண்டவர்" என்றும் கூறப்பட்டுள்ளன. இக் குறிப்புக்களிலிருந்து, நம் வேந்தனது ஆட்சியின் பிற்பகுதியில் அதாவது கி. பி. 1210-க்குச் சிறிது முன்பு பாரதம் தமிழில் செய்யப்பட்டதென்பதும், அதனைச் செய்தவர் தமிழ்த்தலைவருள் ஒருவராய் அரசாங்கத்தில் மேம்பட்டிருந்தவர் என்பதும், சிவநெறிச் செல்வர் என்பதும் தெரியவருகின்றன. இப்பாரதம் நம் காலத்தில் வழக்கு வீழ்ந்தது வருந்தத் தக்கது.

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS No. 108760

## 7. திருவரங்கத்தமுதனார்

விசிஷ்டாத்வைத மதஸ்தாபகரான ஸ்ரீ இராமாநுஜாசாரியர்மேல் இராமாநுச நூற்றந்தாதி பாடியவர் திருவரங்கத்தமுதனார் என்ற பெரியார் ஆவார். இவ்வந்தாதி வைஷ்ணவ சமயத்தாரால் பெரிதும் போற்றப்பட்டும், நாலாயிரப் பிரபந்தத்தில் சேர்க்கப்பட்டும் வழங்கி வருவதென்பது பலரும் அறிக்

V2:1C F

ததே. இவ்வந்தாதியாசிரியர் நம் சோழர்பெருமான் காலத்திலும் வாழ்ந்தவர் என்பது, சாஸன வழியால் இப்போது அறியப்படுகின்றது. நடுநாட்டுத் திருக்கோவலூர்த் திருமால் கோயிலில், நம் குலோத்துங்கனது ஆட்சி மூன்றுமாண்டில் அமைந்த கல்வெட்டொன்றில்

> 'இராஜராஜ சேதியராயர் என்பார் ஆணைப்படி வன்னிய மலையமான் என்ற அதிகாரி, பெரியகோயில் நந்தவன மொன்றன் கைங்கரியத்தை நடத்தி வருவதற்காகச் சில நிலங்களை மூங்கிற்குடி திருவரங்கத்தமுதனார்க்கு அளித்தனர்''

என்று காணப்படுகின்றது. இதனால் இராமானுஜர் திருமுன்பு நூற்றந்தாதி பாடி அரங்கேற்றிய இவ்வமுதனார், நம் சோழன் ஆட்சித் தொடக்கம்வரை வாழ்ந்தவர் என்பது பெறப்படுகின்றது. இப்பெரியார் 80, 85-பிராயம் வாழ்ந்திருந்தவர் எனின், இது நம் வேந்தன் ஆட்சிக் காலத்துடன் பொருத்தமாகும்.

## 8. பவணந்தி முனிவர்

நம் சோழவேந்தனது ஆட்சிக் காலத்தில் **குவளால புரத்**திலிருந்து ஆண்டுவந்த கங்கவரசன், **சீயகங்கன் அமராபரணன்** என்பவன். இவன் இக்குலோத்துங்கன் ஆணைக் கடங்கியிருந்த சிற்றரசருள் ஒருவனாவான். இவ்வரசன் கன்னடம் பயிலும் நாட்டவனாயினும், தமிழபிமானம் மிகுதியும் உடையவனாய்த் தமிழ்ப்புலவர்களை ஆதரித்துவந்தனன். தன் நாட்டை யடுத்துள்ள கொங்கு மண்டலத்தில் சீனபுரம் என்ற சனகையில் வாழ்ந்தவரும், சைனப்பெரியாருமான பவணந்தி முனிவரைக் கொண்டு **நன்னூல்** என்ற அரிய இலக்கண நூலை இயற்றுவித்தவன் இவனே.

"முன்னூ லொழியப் பின்னூல் பலவினுள்
எந்நூலாரும் நன்னூ லாருக்கு
இணையோ வென்னும் துணிவே மன்னுக"

—இலக்கணக் கொத்து, 8, உரை.

என்று பிற்காலத்துச் சைவப்பெரியாரும் கொண்டாடும் படி இன்றுவரையிலும் எல்லாரும் கற்று வருவது இவ் விலக்கண நூல் என்பதை அறியாதார் இல்லை. இச் சீயகங்கனைப்போல, சைனப் பெரியாரான அமித சாகரரைத் தன்னூரில் இருக்கும்படி செய்து அவரால் **காரிகை** என்ற யாப்பிலக்கணத்தை இயற்றுவித்தவன், தொண்டை நாட்டுக் குளத்தூர்த்தலைவன் என்பதும், அதுபற்றி அவ்வூர்க்குக் **காரிகைக் குளத்தூர்** என்ற பெயர் நம் சோழன் காலத்துக்குச் சிறிது முன்வரை வழங்கிவந்த தென்பதும் ஒப்பிடத்தக்கன.

இப்பெரும் புலவர்களன்றிப் பாண்டிநாடு, தொண்டை நாடு முதலிய நாடுகளில் நம் சோழன் காலத்தும் அதனை ஒட்டியும் விளங்கிய புலவர்கள், பலர் உண்டு. இவர்களுள் மாறவர்மன் குலசேகர பாண்டியனது அவையில் தம் **அகப்பொருளை** அரங்கேற்றிய நாற் கவிராச நம்பியும், **புறப்பொருள் வெண்பாமாலை** உரையாசிரியரான சாமுண்டிதேவரும், தொல்காப் பியத்துக்கு உறையிட்ட பேராசிரியரும், **கப்பற் கோவை, தஞ்சைவாணன் கோவை**களின் ஆசிரியர் களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இக் குலோத்துங்கனைப்போலவே, இவன் காலத் துச் சிற்றரசர்களும் தலைவர்களும் தமிழறிவும் அபி மானமும் மிக்கவர்களாய்ப் புலமையைப் பெரிதும் போற்றி வந்தார்கள். இவற்றை யெல்லாம் இங்கு விரிப்பிற் பெருகும்.

அத்தியாயம் 7

## சமயநிலையும் அறச்செயல்களும்

நம் சோழர்பெருமான், தன் முன்னோர் போலவே வைதிகமார்க்கத்தை வளர்த்தும், சைவசமயத்தைக் கடைப்பிடித்தொழுகியும் வந்தான். சிவபிரானிடம் இவன் வைத்திருந்த பக்தியை

"காமாரிக் கன்பன்" (468)

"வெள்விடையோன் தன்னேயந்தன்னை மறவாதவன்"

"நாகாபரணனை யேத்துவோன்" (88)

என்று இவ்வாறு பலவிடங்களிலும் இவன் கோவை சிறப்பிக்கின்றது. திருவாரூர்ச் சிவபிரானே இக்குலோத்துங்கனை "நம் தோழன்" என்று கூறியதாக—தம் கோயில் ஸ்தானத்தார்க்கு அப்பெருமானே இடுங் கட்டளை முறையில்—24-ம் ஆண்டுச் சாஸனமொன்று குறிப்பிடுகின்றது. இதனால், சிவபக்தியின் சிறப்புத் தெளிவாகக் கூடியது. 'நம் தோழன்' என்றது, சுந்தரமூர்த்திநாயனாரைத் **தம்பிரான்தோழர்** என்ற வழக்குப் போன்றதாகும்.

இக்குலோத்துங்கனது முன்னோர்களிலே, முதல் இராஜராஜசோழன், அவன் மகன் இராஜேந்திரன் முதலியோர் வடதேசத்திலிருந்து சைவாசாரியர்களை வரவழைத்து, அவர்களைத் தங்கள் இராஜகுருக்களாகக் கொண்டு உபதேசம் பெற்றவர்கள். சமய விஷயங்களில் இவ்வாசாரியர்கட்குச் சோழராஜ்யத்திலிருந்த செல்வாக்கு மிக அதிகம். அம்முன்னோர் முறைமைப்படியே, இவனுக்கு ஞானாசாரியராக இருந்தவர் **ஈசுவர சிவன்** என்ற சைவப் பெரியார். இவர் ராதா (லாட) தேசத்த

வரும், சாண்டில்ய கோத்திரத்தவருமான ஸ்ரீ கண்டசம்பு என்பாரின் புத்திரர் என்றும், திரிபுவனம் என்ற ஊரி லுள்ள கோயில் இவ்வாசாரியாரால் பிரதிஷ்டை பெற்றது என்றும் தெரியவருகின்றன.

இவனன்றி, **சுவாமி தேவர்** என்ற மடாதிபதி ஒருவரும் சோழராட்சியில் பிரசித்தராய் விளங்கினர். நம் அரசனுடைய தமையன் காலத்தே, தம் தபோமகிமையால் ஈழப்படைகளை நாட்டை விட்டு ஓடும்படி செய்து புகழ்பெற்ற சுவாமிதேவர் இவர் என்றே தோன்றுகிறது. இப் பெரியார் பிரதிஷ்டித்த அச்சுத மங்கள சிவாலயத் துக்கும், நம் அரசன் தன் 5-ஆம் ஆண்டில் இறையிலி அளித்துள்ளான். திருக்கடவூர்க்கோயிலில் நம் சோழனுல் விதிக்கப்பட்டிருந்த ஒழுங்குகளை மாற்றி, இம் மடாதிபதி வேறு புதிய ஒழுங்குகளை ஏற்படுத்தினர் என்றும், அதனையறிந்த அரசன் அதற்குத் தன் சம்மத மளித்தனன் என்றும் ஒரு சாஸனம் கூறுகின்றது. இதனுல் சைவாசாரியர்களுக்கு இராஜாங்கத்திலிருந்த மதிப் பும். செல்வாக்கும் வெளியாகின்றன. இவற்றோடு, மகா விரதிகளான காளாமுகரின் கோமடமும், சதுரானன பண்டித மடமும் முறையே திருவானைக்கா, திருவொற்றி யூர்களிலும், வாரணசி பிக்ஷாமடம் என்பதொன்று பந் தணைநல்லூரிலும், வாரணசி லக்ஷாத்யாய இராவளரின் கொல்லாமடம் என்பது திருப்பாசூரிலும் நம் சோழன் காலத்தில் சைவாசாரிய பீடங்களாக விளங்கின.

இவ்வேந்தனது ஆட்சியில் தேவாலயங்களின் சொத்துக்களும், அறப்புறங்களும், நித்த நைமித்திக விழாக்களும் மிக ஒழுங்காகப் பரிபாலிக்கப்பட்டு வந்தன. நாடெங்கும் அமைந்த சிவாலயங்களில் நேருங் குறைகளைப் போக்கியும், அவற்றுக்குத் தீங்கிழைத்தோரைத் தண்டித்தும் நேரே கவனித்து வந்தவன் இவ்வரசன்.

அவ்வாலயங்களுக்கு வேண்டிய இறையிலிகளும் திருவாபரணங்களும் வேண்டியபடி இவனால் அளிக்கப்பட்டுள்ளன. இவன் செய்த அவ்வறச்செயல்களுட் சில வருமாறு:—

(1) 26-ஆம் ஆண்டில், திருவொற்றியூர்ச் சிவபிரானுக்கு அவ்வூர் அம்மையொருத்தியின் வேண்டுகோளின்படி திருவாபரணம் திருவாடுதண்டு முதலியன இருமுறை அளித்தது.

(2) 26-ஆம் ஆண்டில் உத்தரமேரூர்ப் பிடாரியார்க்கும் ஸப்தமாதர் ஸ்தானங்களுக்கும் பத்து வேலி நிலம் உதவியது.

(3) 12-ஆம் ஆண்டில் சிதம்பரப் பக்கத்திலே இருங்கோளன் என்ற தலைவன் இயற்றிய கோயிலொன்றுக்கு விட்ட பூமிகளை இறைநீக்கி உதவியது.

(4) கீழையூரில் சிவாலயத்துக்கும் பிராமணர் வேளாளர்கட்கும் கேடுகள் சூழ்ந்தும், அந்தணன் ஒருவன் வீட்டில் தீயிட்டும், மற்றும் கலகங்கள் விளைத்தும் வந்த இருவர்க்குத் தண்டனைகள் விதித்து அவர்கள் நிலங்களைப் பறிமுதல் செய்தது.

(5) 16-ஆம் ஆண்டில், கோவந்த புத்தூரில் மாடாபத்யம் பார்த்துவந்த உத்தியோகஸ்தன் ஒருவன், கோயில் சொத்துக்களைத் திருடியதற்காகச் 'சிவத்துரோகி' என்ற குற்றம் சாட்டப்பட்டதன்மேல் அவனது நிலமனைகளைப் பறிமுதல் செய்தது.

இவைபோல, மற்றும் அறப்புறங்களைக் காப்பதற்காக அரசனிட்ட கட்டளைகள் பலவாம். இவையன்றித் திருப்பணிகளும் திருவிழாவும் திருவீதிகளும் இவனால் அளிக்கப்பட்டவை பலவுண்டு. அவை:—இராசாக்கணையன் திருநாள், இராசாக்கள் தம்பிரான்திருவீதி,

முடித்தலைகொண்டபெருமாள் திருவீதி என்றிவ்வாறு இவ்வரசன் பெயர்கள் பெற்று விளங்கின.

முதல் இராஜராஜ சோழன், தன் பகைவரிடமிருந்து செயித்துக் கவர்ந்த பொருள்களைச் சிவபிரானுக்குப் பெருவாரியாக வழங்கியதுபோல, நம் வேந்தனும், மதுரையில் வீராபிஷேகமும் விஜயாபிஷேகமுஞ் செய்து கொண்ட காலத்திலே மதுரைமாநகரை அழகுபடுத்தினன். அன்றியும், அம்மதுரா விஜயத்தில் சேர பாண்டியரிடம் திறைகொண்ட பொன்களையும் பூமிகளையும், தன் முன்னோர் வழிபட்ட தில்லை, திருவாரூர், திரிபுவனங்களில் உள்ள கோவில்களுக்கு அளித்தும் மகிழ்ந்தான். இவ்வரிய செய்திகள் யாவும் இவனது புதுக்கோட்டை மெய்க்கீர்த்திகளிற் காணலாம்.

இனி, திரிபுவனங் கோயிலிற்கண்ட வடமொழிக் கல்வெட்டிலிருந்து நம் சோழனுக்குச் சிவாலயங்கள் எடுப்பதில் இருந்த சிரத்தையும் பக்தியும் நன்கு விளங்கக்கூடியன. இவைபற்றி, ஆசிரியர் **ஸ்ரீ நீலகண்ட சாஸ்திரிகள்** எழுதிய குறிப்பு கீழ் வருமாறு :—

"மூன்றாங் குலோத்துங்கனை ஒரு பெரிய கட்டட நிர்மாணி என்றே மதிக்கலாம். சோழ சிற்பமுறையில், இவன் செய்வித்த சிற்பங்கள் பேர்போனவை. இவன் காலத்தில் அமைக்கப்பட்ட கட்டடங்களும் சிறப்பாகக் கோயில்களும் புதுகோட்டை சாஸனங்களிலும், திரிபுவனம் என்ற ஊரிலுள்ள கம்பாஹரேசுவரர் என்ற திரிபுவனேசுவரர் ஆலயத்தின் கர்ப்பக்கிருகத்துள்ள வடமொழிக் கல்வெட்டிலும் விரித்துக் கூறப்பட்டுள்ளன. மேற்படி திரிபுவனேசுவரர்கோயில், குலோத்துங்கன் ஆட்சியின் ஒரு சிறந்த ஞாபக சின்னமாக விளங்குகிறது. இந்த அற்புதமான ஆலயம், ஆராய்ச்சியாளர்களால் போதுமானவளவு கவனிக்கப்படவில்லை.

பொதுவமைப்பில் தஞ்சைப் பெரிய கோயிலை இது நமக்கு நினைப்பூட்டினாலும், இதற்கெனச் சில தனிப்பெருமைகள் உண்டு. இதன் திருமதில்கள் முழுதும் அழகிய சிற்ப வேலைகளாலும் சித்திரங்களாலும் நிரப்பப்பட்டுள்ளன. இங்கே உள்ள இராமாயணக்கதை யமைந்த சிற்பங்கள் மிகவும் புகழத்தக்கவை. சித்தாந்த ரத்நாகரத்தின் ஆசிரியரும், ஸ்ரீ கண்டசம்புவின் புதல்வரும் சோழ வேந்தன் குருவுமான **ஈசுவர சிவனால்** இவ்வாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகும்.

"இத்தகைய சிறப்புவாய்ந்த திரிபுவனேசுவரர் ஆலயத்தைத் தவிர, மூன்றும் குலோத்துங்கன் தில்லை நடராஜப்பெருமானது திருமுக மண்டபத்தையும் கிரீந்திரஜை (சிவகாமி) அம்மனின் கோபுரத்தையும், சிதம்பரப் பிராகாரத்தையும் கட்டுவித்தான் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், காஞ்சி, மதுரைகளில் உள்ள சிவபிரான் கோயில்களுக்கும் அருமையான திருப்பணிகள் செய்துள்ளான். திருவிடைமருதூரிலும் திருவாரூரிலும் தாராசுரத்திலுமுள்ள சிவாலயங்களிடத்தும் இவன் அபிமானம் மிக்கவன். திருவாரூர்ச் சபாமண்டபமும் பெரிய கோபுரமும் இவன் முயற்சியால் அமைக்கப்பட்டவையே."

நம் சோழன், சைவாபிமானி யாயினும், மற்ற வைதிக சமயக் கடவுளர்க்கும், சைன சமயக் கடவுளர்க்கும் நித்யநைமித்திகங்கட்கு வேண்டிய அறப்புறங்கள் அமைத்து, தனக்குள்ள பொது நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளான். வேலூர்த் திருமால் கோயிலுக்கு மூன்று கிராமங்களை ஒன்றுக்கிக் **குலோத்துங்க சோழ நல்லூர்** என்று தன் பேரிட்டு அளித்ததோடு, அக்கோயிலுக்கும் **குலோத்துங்க சோழ விண்ணகர்** என்று தன் நாமத்தைத் தன் ஆட்சி

3-ஆம் ஆண்டில் வழங்கினன் என்றும், விக்கிரமசோழ புரத்திலுள்ள தன் அரண்மனையிலிருந்து, வில்லவராயர் என்ற உடன் கூட்டத்ததிகாரி மூலம் அவற்றுக்கு வேண்டிய கட்டளைப் பிறப்பித்தான் என்றும் அவ்வூர்க் கல்வெட்டுக் கூறுகின்றது. இவ்வாறே, இவன் அதிகாரிகளான திருக்கோவலூர் மலையமான் முதலிய விஷ்ணு பக்தர்கள் திருமால் கோயில்களுக்கும் மடங்களுக்கும் அரசன் அனுமதியுடன் செய்த அறப்புறங்களும் உள்ளன. இவ்வாலயங்களோடு பிடாரியார் கோயிலுக்கும், ஸப்தமாதர் ஸ்தானங்களுக்கும் உத்தரமேரூரில் இச் சோழன் நிலங்கள் அளித்து ஆதரித்துள்ளான்.

இம்மட்டோ! புறச்சமயத்தவரான சைனரிடமும் இவன் அபிமானம் வைத்து ஆதரித்திருக்கின்றான். இவனுடைய பெரிய அதிகாரிகளுள், **மண்டியங்கிழான் குலோத்துங்க சோழக் காடுவெட்டி** என்ற சைன சமயத்தவர் ஒருவரும் விளங்கினர். இவர்—

> "ராஜகாரியஞ் செய்து நாயனாரைத் திருவடித் தொழ 'உனக்கு வேண்டுவன வேண்டிக்கோள்' என்று திருவுள்ளமாய் அருள...கோயிலுக்கு 20-வேலி நிலம் திருவுள்ளமாடித்தருளவேணும்"

என்றும், 'தம் குரு சந்திரகிரிதேவர்க்குக் கொட்டையூர் ஆசிரியப்பட்டம் கொடுத்தருளி அம்பையிலே 20-வேலி அளிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ள, அவ் வேண்டுகோட்படியே திருமுகம் பிரசாதித்தான் நம் சோழன் என்று, திருப்பருத்திக்குன்றுக் கல்வெட்டொன்று கூறுகின்றது. மேலும் தன் 3-ஆம் ஆண்டில் திருநறுங்குன்றைச் சைனப் பெரும்பள்ளிக்கு வேண்டும் நிபந்தங்களுக்கும், "அமணபிடாரர்களுக்

கும்" இறுப்பதாகப் பதிற்றுவேலி நிலவருவாயை இறையிலி செய்து—"இந் நிலத்துக்கு அமணபிடாரர்கள் சொன்னபடிசெய்வது ; இவர்கள் வசம் கடமை இறுக்க" என்று திருவாணையும் இட்டான். இன்னும் (அப்பள்ளியிற் கோயில்கொண்ட) "அப்பாண்டார்க்குமுன்பிலாண்டு எழுந்தருளுகிற திருவைகாசித் திருநாளுடனே நம்பேராலேயும் ஒரு திருநாள் எழுந்தருளவேண்டும் என்று" அப் பள்ளிக்குரிய பெரியார்கள் கேட்டுக்கொண்டபடி வேண்டிய நிலமளித்ததுடன்,

> "ஆறுவதுமுதல் நம்பேராலே இராசாக்கணயன் திருநாள் என்று தைம்மாதத்து அத்தத்திலே தீர்த்தமாகத் திருநாள் எழுந்தருளுவிப்பதாகச் சொன்ேனம். இப்படிக்குச் சந்திராதித்தவரை செல்வதாக, கல்லும் வெட்டிக்கொண்டு இம்முதல்கொண்டு திருநாள் எழுந்தருளுவித்துப் போதுக."

என்று தன்னாணை யிட்டுள்ளான், நம் வேந்தர் பெருந்தகை.

இவற்றால், நம்சோழன் தன் சமயத்தில்மட்டுமன்றி, அந்நிய மதங்களிடத்தும் தன் அன்பையும் ஆதரவையும் செலுத்திப் பொது நோக்கோடு ஆட்சி புரிந்துவந்தவன் என்பது மிகத்தெளிவாகும்.

## அத்தியாயம் VIII

### சாமந்தர்கள்

சோழ சாம்ராஜ்யத்தின் அரசாங்க உள்துறைகளை அமைச்சரும் உடன் கூட்டத்து அதிகாரிகளும் மகா சபையார்களும் தலைமையாக நின்று நிர்வகித்து வந்தார்கள். ஆனால் வெளிநாட்டுப் படையெடுப்பு, உள்நாட்டுக் கலகம் முதலியவற்றைத் தடுத்துத் தேச அமைதியைக் காத்துவந்தவர்கள் மண்டல மாக்களும் தண்டத் தலைவர்களுமான சாமந்தர்களே யாவர். இன்னோரின் ஒற்றுமையான பேருதவிகளே சோழ ஏகாதிபத்யத்தைப் பல தலைமுறைகளாகக் காத்து வந்தன. நம் சோழன் காலத்திலும் இத்தகைய தலைவர் பலர் இருந்தனர். இவரெல்லாரும், தம் சக்கரவர்த்தியிடம் உண்மையான பக்தியும், ஏகாதிபத்யத்தின் பழம்பெருமையைக் காப்பதில் உறுதியும் உடையவர்கள். இவர்களுட் பலர் தங்களுக்குப் பழமையாக உரியனவும், அரசனால் அளிக்கப்பட்டனவுமான நாடுகளை ஆண்டு, பெரும்படைகளைக் கொண்டவர்களாய், வேண்டியபோது தாங்களே படைத்தலைமை பூண்டு அரசனுக்கு உற்றுழியெல்லாம் உதவிவந்தார்கள். நம் சோழர்பெருமான் காலத்தில் விளங்கினவருட் சிறந்தவர்கள்—சேதியராயர் என்ற மலையமான்கள், சம்புவராயர், காடவராயர், அதிகமான்கள், வாண கோவரையர், கங்கர், தெலுங்குச்சோடர்கள் முதலியோர்.

**சேதியராயர் என்ற மலையமான்கள் :—**இவர்கள் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு **மலாடு** என்ற நடுநாட்டைப் பழங்காலமுதலே ஆண்டு வந்த

வர்கள். சங்க காலத்தில், கடை யெழுவள்ளல்களுள் ஒருவனுய் விளங்கிய மலையமான் திருமுடிக்காரி இக்குலத்து முன்னேன் ஆவன். சேதிராஜ குலத்தவ ராதலால் சேதிராயர் என்றும், கோவலூர் அதிபர்க ளாதலால் கோவலராயர் என்றும், மலாட்டுக் குரியவ ராதலால் மலையர், மலையரயர், மலயகுலராயர் என்றும் இவர்கள் வழங்கப் பெற்றனர். இவர்கள் பெரும்பாலும் விஷ்ணு பக்தியுடையவர்கள். "பொற்புடைய மலை யரையன் பணிய நின்ற பூங்கோவலூர் தொழுதும்" என்று திருமங்கையாழ்வாரும் இவர்களைச் சிறப்பித்துள் ளார். சோழ ஏகாதிபத்தியத்தில் இவர்கள் நெடுங் காலமாகத் தலைமை வகித்து வந்ததோடு, அச் சோழ வேந்தர்க்கு மகட்கொடுத்துச் சம்பந்தம் புரிந்தும், சங்ககாலத்திற்போலவே போர்க்காலங்களில் உதவியும் வந்தனர். முதல் இராஜராஜனுடைய தாய் இம் மலையர்குலத்துதித்தவள் என்று திருக்கோவலூர்ச் சாஸனங் கூறுகின்றது. பிற்காலத்தில் கிளியூர், ஆடையூர் முதலியவை இவர்களுக்குத் தலைநகர்களா யிருந்தன. நம் சோழன் ஆட்சியில் விளங்கிய இம் மலையர் குலத்தவர்களுள்,

1. மலைமான் பெரியுடையானை
   இராஜராஜச்சேதியராயர்,
2. மலையன் நரசிம்மவர்மன் கரிகாலசோழ
   ஆடையூர் நாடாள்வார்

என்ற இருவரும் சிறந்தவர்களாகவும், மற்றச் சாமந்தர்களால் பெரிதும் மதிக்கப் பெற்ற தலைவர் களாகவும் தெரிகின்றனர். இவருள், இராஜராஜச் சேதியராயர்க்குச் 'சேனைமீகாமன்' என்ற சிறப்புப்

பெயர் வழங்கியிருப்பதனுல், சோழ ஏகாதிபத்தியத்தில் படைத்தலைமை வகித்துவந்தவர் இவர் என்று தோன்றுகின்றது. பின்னவரான நரசிங்கவன்மர் ஆடையூர் நாடாள்வார் என்பவர் நம் அரசனுடைய தமையன் காலத்தில் பெருமானம்பிப் பல்லவராயருடன் சேனைத்தலைமை பூண்டு பாண்டிநாடுசென்று ஈழப் படையோடு பொருது வெற்றி பெற்றவர் என்பது, இலங்கைச் சரித்திரமான மகாவமிசத்தினுல் தெரியவருகிறது. இவரன்றி,

மலையமான் சூரியன் நீரேற்றுன்,
ராஜராஜமலையகுலராயன்,
இராஜராஜ கோவலராயன்,

முதலியோரும் நம்வேந்தன் காலத்தில் வாழ்ந்த சேதியரசர்களே.

**சம்புவராயர்**:—பழைய பல்லவ வமிசத்தவர் என்றும், செங்கேணிக் குடியினர் என்றும் கூறப்படும் இவர்கள், முதற்குலோத்துங்க சோழன் காலத்திலிருந்தே சோழசாம்ராஜ்யத்தில் தலைமை அதிகாரம் வகித்துவந்தனர்; வட ஆர்க்காடு, தென்னுர்க்காடு ஜில்லாக்களடங்கிய பிரதேசங்களில் இன்னேர் சோழர் பிரதிநிதிகளாய் இருந்து ஆண்டு வந்தனர். பின்பு, அப்பிரதேசங்களின் தலைமையும் உரிமையும் இவர்களுக்கே சொந்தம் ஆயின. நம் சோழன் ஆட்சியின் முற்பகுதியில் இவ்வமிசத்தவனுன "செங்கேணி அம்மையப்பன் பாண்டிநாடு கொண்டான் கண்டர் சூரியன் **இராஜ ராஜ சம்புவராயன்**" என்பான் அரசியலில் தலைமை வகித்து விளங்கிய சாமந்தனுகத் தெரிகின்றுன். இவன் பெயரி

னின்று, பாண்டிய நாட்டுப் போரொன்றில் வெற்றி பெற்றவன் இவன் என்பது தெரியலாகும். இவனன்றி,

சேங்கேணி மிண்டன் அத்திமல்லன்
சம்புவராயன்,
சேங்கேணி அம்மையப்பன்
கண்ணுடைப்பெருமாள்,
வீரசோழன் அத்திமல்லன்,
குலோத்துங்க சோழச் சம்புவராயன்

ஆளப்பிறந்தான் எதிரிலி **சோழச் சம்புவராயன்** என்போரும் இம் மரபினராய் நம் சோழன் ஆட்சியில் அதிகாரம் வகித்தவர்களே.

**காடவராயர்** :—பல்லவ வமிசத்தவருள் ஒரு கிளையினரே இவர். திருமுனைப்பாடி நாட்டுக் கூடலூர் சேந்தமங்கலங்களிலிருந்து, சோழர்களின் கீழ்த் தலைமை வகித்துவந்த இவர்கள் தங்கள் அதிகாரத்தை அப் பிரதேசத்தில் பின்பு நிலைநாட்டிக் கொண்டனர். இவர்களுடைய ஆதிக்கத்தின் மிகுதியால், பிற்காலத்தில் சோழசாம்ராஜ்யத்துக்கே கேடுவிளைந்ததாயினும், நம் சோழன் ஆட்சியில் இன்னோர் உண்மையான ராஜாபிமானிகளாய்த் தம்மரசனுக்கு உழைத்தவர்கள் எனலாம். இத்தகையவருள் சிறந்தவர்களாகத் தெரிய வருவோர்—

ஆளப்பிறந்தான் வீரசேகரன்,
வானிலை கண்டான் இராஜராஜக் காடவராயன்,

என்போர். இவர்கள் வழியில் வந்தவனே நம் அரசனுக்கு அடுத்த தலைமுறையில் சோழ ஏகாதிபத்தியத்தைச் சிதைத்துத் தன் ஆதிக்கத்தை நாட்டிய கோப்பெருஞ் சிங்கன்.

**அதிகமான்கள் :**—இவர்களும் சங்ககாலமுதலே பிரபலம் பெற்றவர்கள். கடையெழு வள்ளல்களுள் ஒருவனான அதிகமானஞ்சி என்பான் இவர் குலத்து முன்னோன் ஆவன். இன்னோர், **தகடூர்** என்ற தலைநகரிலிருந்து ஆண்டுவந்த சேரர்மரபினராவர். அதியேந்திரர், தகடாதி ராயர் என்பன இவர் பட்டப்பெயர்கள். இவர்கள் தலைநகரான தகடூர் சேலம் ஜில்லாவிலுள்ள தர்மபுரி ஆகும். நம் சோழன்காலத்து வாழ்ந்த அதிகமான்கள் :—

அதிகமான் இராஜராஜ தேவன்,
அவன்மகன் விடுகாதழகிய பெருமாள்,
குலோத்துங்க சோழ தகடாதிராயன்,
சாமந்தன் அதியமான்

என்பவர். இவர்களுள் விடுகாதழகிய பெருமானின் சாஸனங்கள் திருமலைக்குன்றில் உள்ளன. இவற்றில், "சேரமான் வமிசத்து அதிகமான் எழினி" "வஞ்சியர் குலபதி," "அஞ்சிதன் வழிவருமவன்" என்று கூறி, தன்னை வள்ளலான அதிகமானஞ்சியின் மரபினன் என்று பாராட்டிக்கொள்ளுதல் காணலாம். இவன் கரிகால்சோழ ஆடையூர் நாடாழ்வான், செங்கேணி அம்மையப்பன் அத்திமல்லன் என்ற இருவருடன் செய்துகொண்ட உடன்படிக்கை யொன்றிலிருந்து, இம்மூவரும் நம் சோழவேந்தனுக்கு அந்தரங்கமாய் ஒத்துழைத்து வந்தவர்கள் என்பது வெளியாகின்றது.

**வாணகோவரையன் :**—மகாபலியின் வமிசத்தவர்களாக வழங்கப்பட்ட இவர்கள், சங்ககாலமுதலே பலம் பெற்ற சிற்றரசராயிருந்தவர்கள். அக்காலத்தில் சோணாடாண்ட கிள்ளிவளவனது பட்டத்துத்தேவி 'சீர்த்தி' என்பவளை "மாவலி மருமான் சீர்கெழு திருமகள்"

என்று மணிமேகலை கூறுதலும் காண்க. பிற்காலத்தில், இன்னோர் நடுநாடான மகதை மண்டலத்தின் தலைவர்களாய், ஆறகழூர் அல்லது ஆறை என்ற நகரிலிருந்து ஆட்சி செய்து, சோழ ஏகாதிபத்தியத்தின் பெருமையைத் தாங்கிவந்தார்கள். நம் சோழனது ஆட்சிக் காலத்தின் பெரும்பகுதியில் விளங்கிய வாணவரசன் 'ஏகவாசகன் குலோத்துங்க சோழ வாணகோவரசன்' என்பவன். இவன் சாஸனங்கள் சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சை ஜில்லாக்களில் அமைந்துள்ளன. இவனன்றி, இக்காலத்தில் மிகவும் பிரபலனாக விளங்கியவன்,

> " ஆறகளூருடைய மகதேசன் ராஜராஜதேவன்
> பொன்பரப்பினான் வாணகோ வரையன் "

எனப்பட்டவன். திருவண்ணாமலைக் கோயிலிலும் பிறவிடங்களிலும் வரைந்துள்ள கல்வெட்டுக்களில் இவ்வாணனைப்பற்றிய பாடல்கள் பல உள்ளன. அவை யாவும் சொற்செறிவும் பொருட்பொலிவும் பெற்று விளங்குவன. அவற்றிலிருந்து பெருந்தமிழ்ப் புலவர்களது புகழ்மாலை சூடியவன் இவன் என்பது தெரியலாம். இவனது வீரச்சிறப்பும் வெற்றிகளும் அறச்செயல்களும் அப்பாடல்களில் மிக அழகாகச் சிறப்பிக்கப்படுகின்றன. இவன் திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலைப் பொன் வேய்ந்தவனாதலால், 'பொன் பரப்பினான்' என்ற பெயர் இவனுக்கு வழங்கியது.

**கங்கர்கள்** :—இவர்கள் மைசூர்ச் சீமை முதலியன அடங்கிய கங்கபாடியை ஆண்ட அரச மரபினர். 'பங்களர் கங்கர் பல்வேற்கட்டியர்' என்று அப்பக்கத்து அரசர் கூட்டத்தில் ஒருவராக இவரை இளங்கோவடிகளும் குறிப்பிட்டனர். இவர்களது இராஜதானி தங்கச்

சுரங்கமுள்ள **குவளாலபுரம்** என்ற கோலார் ஆகும். இது கொங்கு நாட்டின் பக்கத்தில் உளது. இந்நகரத்தை நம் சோழன் காலத்தே ஆண்டவர்களுள்

அமராபரணன் சீயகங்கன்

என்பான் முக்கியமானவன் எனத் தெரிகின்றது. இவனுக்கு 'வீரகங்கன்,' 'வெட்டும் அமராபரணன்' என்ற வேறு பெயர்களும் உண்டு. இவன் தேவி **அரிய பிள்ளை** என்பாள். நம் சோழனது 3-ஆம் ஆண்டுமுதல் 36-ம் ஆண்டுவரை இச் சீயகங்கன் விளங்கினான். இவன் தன் கங்கநாட்டுக்கு உரிய கன்னடமொழியில் அபிமானம் செலுத்தியவனாகத் தெரியவில்லை. ஆனால், தமிழபிமானம் மிகப் படைத்து, தமிழ்ப் பெரும் புலவர்களை ஆதரித்து வந்திருக்கின்றான். இச் சீயகங்கனுக்கு வழங்கிய சிறப்புப் பெயர்களும், இவன் தேவியின் பெயரும், இவனது தமிழ்ச்சாஸனங்களும், தமிழ் நாட்டுத் தலங்களுக்கு இவன் செய்த அறச்செயல்களும் இவனைச் சிறந்த தமிழன் என்றே சொல்லும்படி உள்ளன. தனது கங்கநாட்டுக் கடுத்துள்ள சீனாபுரம் என்ற சனகையில் சைனப் பெரியாராய் வாழ்ந்த பவணந்தி முனிவரைக்கொண்டு, **நன்னூல்** என்னுஞ் சிறந்த இலக்கணநூலை ஆக்குவித்தனன் இவ் வருங்கலை விநோதன். இவ்வாறு இவன் படைத்த பெருந் தமிழபிமானம் தியாகவிநோதனை நம் தமிழ்ச் சக்கரவர்த்தியின் சம்பந்தத்தால் உண்டானது என்றே சொல்லலாம். இச் சீயகங்கனை யன்றி,

"பங்களநாட்டுப் பிருதி கங்கன் அழகிய சோழன்"

"உத்தம சோழகங்கன்"

என்பவர்களும் நமது அரசன் காலத்து வாழ்ந்த கங்கர்களாகத் தெரிகின்றனர்.

**தெலுங்குச் சோடர்:**—இவர்கள் தெலுங்கு நாட்டின் வட பகுதிகளிலும், நெல்லூர் கடப்பை சித்தூர் வடதென்னார்க்காடு ஜில்லாக்களிலும் நம் சோழன் காலத்துக்கு முன்பே ஆதிக்கம் பெற்றிருந்தவர்கள். இச்சோடர், தங்களைச் சூரியகுலத்தவர் என்றும், கரிகாற்சோழன் வழியினர் என்றும், காசிப கோத்திரத்தவர் என்றும் கூறிக்கொள்வர். நம் குலோத்துங்கன் ஆட்சித் தொடக்கத்தில், இவர்களுட் சிலர் இவனுக்குப் பகைவராயினர். ஆயினும், இவ்வரசனது கச்சிப் படை யெடுப்பின் பின்னர், இவர்கள் அடங்கி இவனது ஆணையை ஏற்றுக்கொண்டதோடு, தக்க சமயங்களில் உதவி புரிந்தும் வந்திருக்கின்றனர். இத் தெலுங்குச் சோடருள், மதுராந்தக பொத்தப்பிச் சோழன் என்னும் பெயர் நம் சோழன்காலத்துச் சாஸனங்களில் அடிக்கடி பயில்கின்றது. பொத்தப்பி என்பது கடப்பை ஜில்லாவில் உள்ளதாகும். இந் நகரையும் நெல்லூரையும் தலைமை யிடங்களாகக் கொண்டு ஆண்டவர்களுள், 12-ஆம் ஆண்டில் மதுராந்தகபொத்தப்பிச்சோழன் என்பானும், 19-ஆம் ஆண்டில் நல்ல சித்தரசரும், 26-ஆம் ஆண்டில் மேற்படி சோடன் மகனான சித்தரசனும், 36-ஆம் ஆண்டில் சோடன் திருக்காளத்தி தேவன் என்பானும் சிறந்தவர்களாகக் கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றனர். இவரெல்லாரும் நம் வேந்தர் பெருமானது ஏகாதிபத்தியத்துக்கு நல்லுதவி புரிந்த மண்டலிகர் ஆவர். இவரன்றி, சளுக்கிய வமிசத்தவருள், "சசிகுலச்சளுக்கி தனி நின்று வென்ற வீரநரசிங்கதேவயாதவராயர்" என்பாரும் நம் வேந்தனது ஆணையை யேற்றுவந்த அரசருள் ஒருவர் என்று அறியப்படுகின்றார்.

மேற்கூறிய சிற்றரசர்களும் தலைவர்களும் தத்தம் நாடுகளில் சுதந்தரம் பெற்று ஆண்டுவந்தவர்களே. இவர்கள், சிற்சில சமயங்களில் தங்களுக்குள் மாறுபாடு கொண்டு சோழ ஏகாதிபத்தியத்துக்கு இடையூறு விளைத்ததும் உண்டு. அக்காலங்களில் அவ்வேகாதிபத்தியத்தின் நன்மையின் பொருட்டும், தம் சக்கரவர்த்தியின் கௌரவம் சிதையாமைப் பொருட்டும், இவரெல்லாரும் ஒருங்கு கூடி அரசனுக்கு அடங்கி நடப்பதாக உடன்படிக்கைப் பிரமாணம்(நிலைமைத் தீட்டு)எழுதி ஒற்றுமைப்பட்டும், ஆணைக்கடங்காதாரை அடக்கியும் வந்திருக்கின்றனர். உதாரணமாக, நம் சோழனது 27-ஆம் ஆண்டில்,

1. பாண்டியநாடு கொண்டானான சம்புவராயன்
2. செங்கேணி அத்திமல்லன் வீராண்டனான எதிரிலி சோழ சம்புவராயன்
3. கிளியூர் மலையமான் பெரியுடையானான இராஜ ராஜச் சேதியராயன்
4. கிளியூர் மலையமான் ஆகார சூரனான இராஜ கம்பீரச் சேதியராயன்
5. குந்தன் நம்பூரலான இராஜராஜ நீலகங் கரையன்
6. அம்மையப்பன் மருதனான இராஜராஜ மூவேந்தரையன்
7. பாவந்தீர்த்தானான இராஜேந்திர சோழச் சம்புவராயன்
8. நரசிங்கபன்மனான கரிகால் சோழ ஆடையூர் நாடாழ்வான்
9. சோமன் திருவண்ணாமலை யுடையானான குலோத்துங்க சோழ பிருதிகங்கன்

10. சோமன் வரந்தருவானான சோளேந்திர சிங்கப் பிருதிகங்கன்

என்ற நாட்டுத்தலைவர்கள் பதின்மர் கூடி, இராஜத் துரோகிகளான தலைவர் சிலர்க்கு விரோதமாகச் செய்து கொண்ட ஒப்பந்தம் இங்கே குறிப்பிடத்தக்கது. இது பின்னர் உரிய இடத்தில் விளக்கப்படும்.

## அத்தியாயம் 9

# நாட்டுச் செய்திகளும் வழக்குகளும்

நெடுங்காலம் ஆண்ட சோழ சக்கரவர்த்திகளுள் நம் வேந்தனும் ஒருவன். நாற்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட இவனது வாழ்நாளில் பெரிய போர்களைத் தவிர, வேறு எத்தனையோ அரிய சம்பவங்கள் நடந்திருக்கக் கூடியனவே. அவற்றுள் சாஸனங்கள் மூலம் நமக்குத் தெரியவந்துள்ள நாட்டுச் செய்திகளும் வழக்குக்களும் அடியில் வருவன :—

1. **வெள்ளப்பஞ்சம் :—** நம் சோழனது 12, 13-ஆம் ஆண்டுகளில் பெருமழையினால் தொண்டை நாடு வருந்தியதென இவனது 14-ஆம் ஆண்டுச் சாஸனமொன்று கூறுகின்றது. ஆனால், இவ்வாறு நேர்ந்த வெள்ளப் பஞ்சம் வேறு நாடுகளில் பரவியிருந்ததாகச் சாஸனத்தால் தெரியவில்லை.

2. **வறட்பஞ்சம் :—** நம் அரசனது 23, 24-ஆம் ஆண்டுகளில் நேர்ந்த மழையின்மையாகிய அநாவிருஷ்டி நாடெங்கும் கொடுமை விளைத்த செய்தி திருப்பாம்புரம், திருவண்ணாமலை இவ்வூர்க் கல்வெட்டுக்களால் வெளியாகின்றது. இவற்றுள் 23-ஆம் ஆண்டுப் பஞ்சத்தில் காசுக்கு முந்நாழி நெல் விற்றதென்றும், வேளாளன்

ஒருவன் தன் மக்கள் இருவருடன் 110-காசுக்குக் கோயில் மடத்துக்கு விலைப்பட்டு அடிமை புகுந்தனன் என்றும் தெரிகிறது. இனி,

“இருபத்து நாலாவது பஞ்சத்திலே காசுக்கு உழக்கு அரிசி விற்கச் செய்தே, பூண்டபோன்னும் தேடின அர்த்தமும் நெல்லும் அடைய இட்டுத் திருநதியைக் கட்டி ஏரி கண்டும் காடுவெட்டிக் கட்டைபறித்து நிலம் ஒக்கக் கழனி திருத்தியும்”

பஞ்ச நிவாரண வேலைகளிட்டுக் குடிமக்களைக் காப் பாற்றிய புண்ணிய சீலர்கள் அருங்குன்றங் கிழார், மங்கையர்க்கரசியார் என்ற இருவர். இவர்களின் பேருத வியைப் பாராட்டிக் கோயிலதிகாரிகள் இவர்களுக்கு முற்றாட்டாகச் சில நிலங்களை ‘ஏரிப்பட்டி’ என்று பின்பு அளித்தனர் என்று திருவண்ணுமலைச் சாஸனம் கூறுகின்றது.

இக் கொடிய காலங்களில் அரசாங்கத்தார் குடிக ளுக்குச் செய்த உதவி இன்னதென்று தெரியவில்லை. ஆயினும், தருமசிந்தை மிக்கவர்களும் கோயில் தலைவர் களும் இயன்ற உதவிகளைப் புரிந்து குடிமக்களைக் காப் பாற்றிவந்தனர் என்றே தோன்றுகின்றது.

3. **ஆற்றுப் பெருக்கால் அழிவு**:—நம் வேந்த னது 6-ஆம் ஆண்டில், காவிரி என்னும் விக்கிரம சோழப் பேராறு பெரும்பெருக் கெடுத்து, பற்பல கோயில்களுக்கும் மக்களுக்கும் சொந்தமாயிருந்த நிலங்களை அழித்ததென்றும், அழிபட்ட அந் நிலங்களைப் புதிதாக அளந்தும், இறை நீங்கிக் குடிமக்களுக்கு அவற்றைப் பங்கிட்டும், அரசாங்கத்தார் புதிய திட்டங் களைச் செய்யலாயினர் என்றும் சோணாட்டுத் திருமங்

கலம் சாஸனங் கூறுகின்றது. காவிரிப் பெருக்கு அடங்கும்படி கம்பநாடர் ஒருசமயம் பாடியதாகக் கூறப்படும் வெண்பா இதுபோன்ற பெருவெள்ளம் பற்றியது போலும்.

4. **சூறாவளிப் புயல்**:—மேற்படி ஆண்டிலேயே செம்பொனார் கோயிலில் திருவாசல் ஒன்றும், வடக்குத் திருமதிலும், தேரேற்றுகூடமும், பெரும்புயலால் விழுந்தழிந்தன வென்றும், இவை ஆக்கூர் நாடாள்வான் என்பவரால் திரும்பக் கட்டப்பட்டன என்றும் மேற்படியூர்ச் சாஸனம் கூறுகின்றது.

5. **படையேறு குழப்பம்**:—மேற்படி செம்பொனார் கோயில் பிரதானமூர்த்தியும் நாயன்மார் விக்கிரகங்களும் இராஜாதிராஜசோழனது 11-வது ஆட்சி வருஷம் "துரிதகாலமாய்ப் படையேறிய" படியால், திருவிடைகழிப் பிள்ளையார்கோயிலுக்குக் கொண்டு போகப்பட்டன என்றும், அவை நம்மரசனது 6-ஆம் ஆண்டில் உரிய தலங்களில் மீளப் பிரதிஷ்டிக்கப் பெற்று உற்சவங்களும் நடத்தப்பட்டன என்றும் அச் செம்பொனார்கோயிற் கல்வெட்டிற் காணப்படுகின்றது. "துரிதகாலமாய்ப் படையேறிய" என்றது, ஈழப் படைகள் பாண்டிய நாட்டுப்போரில் இழைத்தது போன்று சோழநாட்டிலும் புகுந்து சில அதிக்கிரமங்கள் செய்ததைக் குறிப்பிடுவது போலும்.

6. **குகையிடி கலகம்** :— நம் சோழனது 22-ஆம் ஆண்டில் மேற்கண்ட கலகமொன்று நாட்டில் நடந்ததென்றும், அப்போது பல குகைகள் அழிக்கப்பட்டன வென்றும், அவற்றுள் திருத்தருப்பூண்டியிலிருந்த குகையொன்று அதன் சொத்துக்களுடன் பாழ்படுத்தப்பட்டது என்றும், நம் அரசனுக்குப் பிற்பட்ட

சோழன் சாஸனம் ஒன்றால் அறியப்படுகிறது. குகை என்பது துறவிகள் வாழும்மடம் ஆகும்.

திருமுறைத் தேவாரச் செல்வன் குகை

(M. E. R. 10 of 1918)

திருத்தொண்டத் தொகையான் குகை ஷை

என்று, இத்தகைய மடங்கள் சாஸனங்கள் மூலம் அறியப்படுகின்றன. **குகை நமச்சிவாய தேசிகர், குகை ஈசுவர சாமியார்** என்ற பிரசித்தரான துறவிகள் குகைத்தலைவர்களாய், ஞானச்செல்வமும் உபதேசத் திறமும் பெற்று விளக்கினவர்கள். இம்முனிவர் மடங்களின்மேல் தொடுக்கப்பட்ட கலகம் இன்ன காரணம் பற்றியது என்று தெரியவில்லை. முதல் இராஜராஜன் இராஜேந்திரன் முதலிய சோழவேந்தர்க்கு "ராஜ குரு"க்களாய் இருந்தவர்கள் இலாடம், காசி, காசுமீரம் முதலிய வடநாடுகளிலிருந்து அவரால் வரவழைக்கப் பட்டவர்கள். இன்னோர் கோளகிமடம், லக்ஷாத்யாய மடம், பிக்ஷாமடம் முதலிய சைவாதீனங்களின் தலைவர் களாய் அரசாங்கத்தில் மிக்க செலவாக்குப் பெற்று விளங்கினர். நம் சோழன் காலத்தில் ராஜகுருவா யிருந்தவர் இலாட தேசத்தவரே. இவனது ஆட்சியிலும் அவ்வாசாரியர்களின் செல்வாக்கு அதிகமே. மேற் கூறிய குகைமடங்களில் வாழ்ந்த துறவிகள் தங்கள் ஞான சீலங்களாலும் உபதேசங்களாலும் நாட்டு மக்களால் நன்கு மதிக்கப்பட்டுப் பிரபலம் பெற்று வந்ததைக் கண்டு பொறாத இவ்வடதேசத்துக் குருமார்களால் இக் கலகம் ஏற்பட்டதோ என்று ஐயம் நிகழ்கின்றது. நம் அரசனுடைய ஆட்சியில் உண்டான இக்கலகம், அவனால் அடக்கப்பட்டதாகத் தெரியவில்லையாயினும், பின் வந்த மூன்றாம் இராஜராஜன் ஆட்சியில், இக் குகைகள் மீண்டும் தோன்றித் திகழ்ந்தன என்று தெரிகின்றது.

**7. சககமனம் அல்லது உடன்கட்டை யேறல் :—** நம் சோழன் ஆட்சியில், இராஜராஜ மலயகுலராயன் என்ற சிற்றரசனுடைய மனைவி யொருத்தி சககமனஞ் செய்வதற்குமுன், தன் கணவனுக்குப்பின் தான் உயிர் வாழ்வளாயின், உடனொத்த சக்களத்தியர்க்கு அடிமை யாவேன் என்றும், தன்னைத் தீப்பாய வேண்டாவென்று தடுப்பவன் தன் மனைவியைப் பிறர்க்களிக்கும் பாவத்திற் படுவான் என்றும், தன்னைக் கட்டி அக்கினியில் இட்டுத் தன்னுயிர்போகச் செய்யாதவரும் அத்தகைய கொடுஞ் செயல் புரிந்தோராவர் என்றும் கூறியிருத்தல் குறிப் பிடத்தக்கது. இவள் 'தேவப்பெருமாள்' என்ற பெய ருடையா ளென்றும், அத் தலைவனுடைய வேலைக்காரி என்றும் எலுவனூர்க் கல்வெட்டுக் கூறுகின்றது. இத்தனை சபதங்கள் கூறியவள் முடிவில் தீப்பாய்ந்து உயிர்விட்டிருப்பாள் என்றே கருதலாம். இச் சபதம், பூதப் பாண்டியன்தேவி தீப்பாயும்போது கூறிய "பல் சான் றீரே, பல்சான் றீரே" என்ற புறப்பாட்டை (246) ஞாபகப்படுத்துகின்றது. பொதுவாக, சோழர் ஆட்சியில் உடன்கட்டை யேறும் வழக்கு அருகியே காணப்படுகிறது. முதல் இராஜராஜ சோழன்தாய், இருக்குவேளின் தேவி போன்ற சிலர் தீப்பாய்ந்த செய்தி கேட்கப்படுவது தவிர, வேறு தெரியவரவில்லை. ஆதலால், மலயகுலராயன் மனைவியின் இச் செயலும் அக்காலத்தில் நடந்த அரியதொரு நிகழ்ச்சியே என்னலாம்.

**8. ஆண்மக்களின் நிருத்தம் :—** தேவரடியாரான பெண்மக்கள் ஆலயங்களிலும் அரசரோலக்கங்களிலும் கூத்து நிகழ்த்திவந்ததுபோலவே, நாட்டியக் கலையில் வல்ல ஆண்மக்களும் தெய்வசந்நிதிகளிலும் அரசர் ஆஸ்தானங்களிலும் தங்கள் ஆடல்வன்மையைக் காட்டி

வந்தனர். இவ் வாடல்வல்ல கூத்தர்கள் நிருத்தப் பேரரையர், நிருத்தமானராயன் என்ற சிறப்புப் பெயர் களும், நட்டுவநிலை, நட்டுவக்காணி என்ற உரிமை நிலங் களும் அரசனால் பெற்றிருக்கின்றனர். நம் சோழன் ஆஸ்தானத்தில் இவை பெற்றிருந்தவன் குலோத்துங்க சோழ நிருத்தப்பேரரையன் என்பதை முன்பே குறித் துள்ளேன். இவன் தேவன் உடையநாயகன் என்ற நிருத்தவரையனிடமிருந்து நட்டுவக்காணியை விலைக் குப் பெற்று அதனைத் தன் மகளுக்கு ஸ்த்ரீதனமாக அளித்தான் என்றும், அம் மகள் கணவன் இக் காணி யுரிமை யடைந்து, மற்றப் பதியிலார்போலக் கோயிலில் நம் அரசன் உத்தரவு பெற்றுக் கூத்து நடத்திவந்தான் என்றும் கூறப்பட்டுள்ளன. இவர்களன்றி, திருவிடை மருதூரில் நட்டுவத்தலைவர் பலர் இவ் விருத்தியை நடத்துவதற்கு அரசனால் நியமிக்கப்பட்டிருந்தனர். இக் கூத்தர்களுள் சாக்கையர் என்பார் ஒரு பிரிவினர். இவர்கள் சங்ககாலம் முதலே நாட்டியக்கலையில் பேர் பெற்றவர் என்பது சிலப்பதிகாரத்தாலும் சாஸனங் களாலும் தெரிகின்றது. இவர்களெல்லாரும் வடமொழி தென்மொழிகளில் வன்மையும் அலங்கார நூற்பயிற்சி யும் பெற்றிருந்தார்கள். தமிழ்த் தண்டியாசிரியரும் இக் கூத்தருள் ஒருவரே என்பது,

மன்றத்து நாடக நவிற்றும்
வடநூ லுணர்ந்த தமிழ்நூற் புலவன்...தண்டி''

என்று அவர் பாயிரங் கூறுதலால் அறியப்படுகின்றது.

9. **வியாகரணதான வியாக்யான மண்டபம்:—** திருவொற்றியூர்ச் சிவபிரானுக்கு வியாகரணதானப் பெருமாள் என்று ஒரு திருநாமம் வழங்கியுள்ளது. பாணினி முனிவர்க்கு மாகேசுவர சூத்திரங்கள் அருளிச்

செய்தவ ராதலால், அப்பிரான் இப்பெயர் பெற்றார். இதற்கேற்ப, அக் கோயிலில் மாணவர் வியாகரணப் பயிற்சி பெறுவதற்காக, சாஸ்திரசாலையொன்று அமைந்திருந்தது. இச்சாலை நன்கு நடைபெறவேண்டி, நம் அரசனது 38-ஆம் ஆண்டில், நெல்லூரை ஆண்ட சிற்றரசனுடைய அதிகாரியொருவர் 'வியாகரணதான வியாக்யான மண்டபம்' ஒன்றை நிருமித்து உதவியுள்ளார். இவர், குலோத்துங்க சோழன் காவனூர் என்ற கிராமமொன்றையும் அதற்காக உதவினார் என்றும், அதனை நம் வேந்தன் இறையிலியாக்க உத்தரவிட்டான் என்றும் திருவொற்றியூர்ச் சாஸனங் கூறுகின்றது.

10. **முன்னோர் கல்வெட்டுக்களையும் அவற்றில் கண்ட அறங்களையும் பாதுகாத்தல் :—**முன்னோரான அரசரும் பிறரும் செய்த அறங்கள் கோயில் முதலிய பொது விடங்களில் யாவரும் அறியக் கற்களில் பொறிக்கப்படும். திருப்பணி புரிதற்காக அக் கற்களைப் பிரிக்க நேரிடும்போது, அக் கல்வெட்டுகளுக்குப் பிரதி யெடுத்துக் கொண்டு, திருப்பணி முடிந்த பின்பு உரிய இடங்களில் அவற்றை வரைந்துவிடுவது வழக்கம். இது 'கற்படிமாற்று' அல்லது 'படியெடுத்தல்' எனப்படும். நம் சோழனது 20-ஆம் ஆண்டில், சீயமங்கலக் கோயில் கற்றளியாகச் செய்யப்பட்டபோது கற்படிமாற்றுச் செய்யப்பட்டது என்று தெரிகிறது. இவ்வாறே, அக்கல்வெட்டுக்களின்படி முன்னோர் அமைத்த அறங்கள் ஒழுங்காக நடைபெற்றுவரவும் மிக்க கவனம் செலுத்தி வரப்பட்டது. நம் சோழனது 37-ஆம் ஆண்டில், திருப்புலிவனங் கோயிலுக்குப் பழமையாக நடந்துவந்த உற்சவங்களையும் திருநந்தா விளக்குக்களையும் பழைய கல்வெட்டுக்களின்படி மகாசபையோர் நடத்தியதையும், அவற்றுள் திருவிளக்குக்கள் பல்லவ வேந்தனை அபராஜி

தனுலும் இரட்டவரசனுன கன்னரதேவனுலும் மதுரை கொண்ட சோழனுன கோப்பரகேசரியாலும் நம் அரசனுலும் முன்னரே அமைந்ததையும் அச்சாஸனம் குறிப்பிடுதல் காணலாம்.

11. **அரசனுக்கு நன்மை வேண்டிச் செய்யும் அறம் :—** நம் சோழ வேந்தனிடமும் அவன் அரசினிடமும் அபிமானம் மிக்க தலைவர்களும் மேன்மக்களும் அவனது நல்வாழ்வை விரும்பி, கோயில் முதலியவற்றிற்கு அறங்கள் புரிந்து வந்தனர். இவனது 16-ஆம் ஆண்டில், அதிகாரியான அரையன் இராஜராஜ தேவன் வாணுதிராயர் திருக்கடையூர்க் கோயிலுக்குத் தம் அரசனது நன்மையின் பொருட்டு இறையிலியும், 35-ஆம் ஆண்டில் எதிரிலி சோழக் கடம்பராயர் என்பார் தம்மரசனுன ''உலகுடைய நாயனுர்'' மதுரைக்கு எழுந்தருளின நாளில் திருமேனிக்கு நன்மை உண்டாகத் தம்மூர்க்கோயிலுக்கு நிலங்களும் அளித்துதவிய செய்திகள் சாஸனங்களால் தெரிய வருகின்றன. இவற்றை நோக்குமிடத்து, தம் வேந்தனுக்கு உடம்பு அசௌக்கியமோ பிறதுன்பங்களோ நேர்ந்தவிடத்து, அவை நீங்கவேண்டித் தம் அபிமான தேவதைகளுக்கு அரசனைச் சார்ந்தவர்கள் பிரார்த்தனை புரியும் வழக்கம் இருந்தமை அறியலாகும். இப்பிரார்த்தனைகள் தலைவர்களுக்கும் அவரைச் சார்ந்தோரால் நடத்தப்பட்டன.

12. **சூளுறவுகள் :—** அறங்களோ, உடன்படிக்கைகளோ செய்பவர், அவற்றுக்குக் கேடு விளைவிப்போர்—

'' கங்கையிடைக் குமரியிடைச் செய்தார் செய்த
பாவத்திற்படுவோ ராகவும் ''
'' ஏழாநரகிற் கீழாநரகம் புகுவா ராகவும் ''

என்றும், செய்துகொண்ட ஒப்பந்தம் மீறுவோர்

"இப்படித் தப்பினேனாகில் எனக்கின்னாத சரிமாழ்
வான்-செருப்பு மெடுத்துத் தம்பலமுந்
தின்றேனாவேன்"

"இப்படித் தப்பினேனாகில் என்னோட்டை யானே
எடுத்துத் தம்பலமும் கலச்சோறும் தின்றேனாவேன்"

"இப்படித் தப்பினோமாகில், (பகைவனுக்குக்) கடை [காக்கும்
பறையர்க்குச் செருப்பு எடுக்கிறோம்"

என்றும் இவ்வாறு கடுமையான முறையில் சபதம் கூறுதல் பெரிய தலைவர்களுக்குள்ளும் வழக்கமாயிருந்தது என்று தெரிகிறது.

13. **நாட்டுத்தலைவர்களின் உடன்படிக்கைகள்:—** சோழ ஏகாதிபத்தியத்தில் தலைவர்கள் பலர் தத்தம் நாடுகளில் சுதந்திரமாக ஆண்டுவந்தனர் என்றும், அவரெல்லாரும் தம் சக்கரவர்த்தியின் திருவாணைக்கு அடங்கி உற்ற காலங்களில் உதவிவந்தனர் என்றும் மேலே கூறியுள்ளோம். இவர்கள் சில சமயங்களில் தங்களுக்குள் மாற்சரியத்தாலோ, எல்லை வழக்குப்பற்றியோ மாறுபட்டுக் கலகம் விளைத்து அரசன் ஆணையை மீறி நடந்ததும் உண்டு. இவ்வாறு மீறி நடந்தபோது, சக்கரவர்த்தியிடம் மிகுந்த அபிமானம் உடையவரெல்லாரும் திரண்டு, பகைத்த தலைவரிடம் விரோதம் கொண்டு அவரை அடியோடு அழித்துவந்தனர்.

14. **அரசகுலத்து முதிய பெண்மக்கள் :—** நம் குலோத்துங்கனது 5-ஆம் ஆண்டில் முதற் குலோத்துங்கன் மகள் அம்மங்கை என்பாள் ஜீவந்தையா யிருந்தாள் என்பது சிதம்பரம் கல்வெட்டொன்றால் தெரியவருகின்றது. அதில், "சுங்கந் தவிர்த்த ஸ்ரீ குலோத்துங்க சோழ

தேவரின் திருமகளார் பெரியநாச்சியாரான அம்மங்கை யாழ்வார்'' என்று இவள் வழங்கப்பட்டுள்ளாள். முதற்குலோத்துங்கன் இறுதிநாளில் இவள் 15-வய துடையவளா யிருந்தவள் என்று கொண்டா லும், நம் சோழனது 5-ஆம் ஆண்டில் 76 வய துள்ளவளாய் இருந்திருக்க வேண்டும். இவ்வயதி னும் சிறிது அதிகமாக இருந்திருத்தலும்கூடி யதே. எவ்வாறாயினும், நான்கு தலைமுறைக்கு முன்பு ஆண்ட அரசன் ஒருவனுடைய மகளின் பிரஸ்தாபம் இவன் சாஸனத்திற் பயிலுதல் குறிப்பிடத் தக்கதே யாகும்.

15. **குலோத்துங்கனது சிறப்புப் பெயர்கள் :**—நம் சோழ வேந்தனுக்கு நாட்டில் வழங்கிவந்த சிறப்புப் பெயர்கள் பல. அவற்றுள், பரம்பரைப் பெயர்களான **பரகேசரி, திரிபுவன சக்கரவர்த்திகள்** என்பவை எல்லாச் சாஸனங்களிலும் பயில்வன. இவையன்றி, குலோத் துங்கன் என்பதும் **வீரராஜேந்திரன்** என்பதும் 36-ஆண்டுகளுக்கு மேற்பட்டுப் பொதுவாய் வழங்கிவந்த பெயர்களாகும். இளமையில் இச்சோழன் **குமார குலோத்துங்கன்** என்றும் வழங்கப்பட்டான். கருவூர் வெற்றிக்குப்பின் **முடிவழங்குசோழன், சோழகேரளன்** என்ற நாமங்கள் இவனுக்கு அமைந்தன. இவன் பெய ரால் அக் கருவூரும் 'முடிவழங்கு சோழபுரம்' என்ற பெயர் பெறலாயிற்று. கொங்குச் சேரர்க்குத் தான் வென்ற சேரவரசை யளித்து, அவர்முடியை வழங்கின மையால் இப்பெயர் வந்ததென்று தோன்றுகிறது. இக் குலோத்துங்கனது 24-ஆம் ஆண்டுக்குப்பின் இறுதி வரையிலும் இவனது பிரபல நாமமாக வழங்கி வந்தது **திரிபுவனவீரதேவன்** என்பது. 'தமிழ்நாடு மூன்றனையும் வென்றாளும் வீரன்' என்பது இதன் உட்கருத்தாகக்

கொள்ளலாகும். இந்தச் சிறப்புப் பெயர் மதுராவிஜயத்தில் இவன் தரித்ததென்பது முன்னரே விளக்கப்பட்டது. இது திரிபுவன வீரசோழதேவன், திரிபுவன சோழதேவன், திரிபுவனதேவன் என்றும் பயில்கிறது. அம் மதுரை வெற்றியில், **முடித்தலை கொண்ட பெருமாள்** என்ற பெயரும் இவனுக்குக் கிடைத்தது என்று தெரியவருகிறது. **கோனேரின்மை கொண்டான்** என்றதொரு நாமமும் பிரபலமாக இவனுக்கு வழங்கியதே. "கோனேரின்மை கொண்டான் வீரராஜேந்திரன் திரிபுவன வீரதேவன்" என்பது இவன் சாஸனம். இஃது இவன் முன்னோனான முதல் வீரராஜேந்திரனுக்கு வழங்கியதாதலால், அவனுடைய அப்பெயர்கள் இரண்டையும் இவனும் கொண்டனன் போலும்.

இவையன்றி, **உலகுடைய நாயனார், உலகுடைய பெருமாள், உலகுய்யவந்த நாயனார், இராசராசாக்கள் தம்பிரான், இராசாக்கணயன்** என்றும் இவனைச் சாஸனங்கள் வழங்கும். இவற்றுள் பின்னவை இரண்டின் பெயரால் இராஜாக்கள் தம்பிரான் திருவீதி,' இராசாக்கணயன் திருவிழா' என்று வீதியும் விழாவும் பெயர் பெற்றுள்ளன. இதனோடு, **தனிநாயகன்** என்ற பெயரும் இவனுக்கு உண்டு. இவையன்றி, **தியாக விநோதன்** என்ற சிறப்புப் பெயரும் நம் சோழன் பெற்றிருந்தான்.

இது, தியாக விநோத மூவேந்தவேளான், தியாக விநோதன், தியாகவிநோதப்பட்டன் என்று இவன் காலத்து மக்களும், தியாகவிநோத நல்லூர், தியாக விநோதன் ஆற்றூர், தியாகவிநோத திருமடம் என்று ஊர்களும் மடமும் பெயர் பெற்றிருத்தலால் வெளியாகின்றது. இச் சோழனது ஆட்சிக்கு முன்பு வழங்காமல், இவன் காலத்திலேயே தியாகவிநோதப் பெயர்

மிருதியும் பயின்றிருத்தல் குறிப்பிடத் தக்கது. தியாக சமுத்திரம் என்று விக்கிரம சோழனும், தியாகமேகம் என்று இராஜராஜனும் வழங்கப் பெற்றது போலவே நம் குலோத்துங்கனும் **தியாக விநோதன்** எனக் கூறப் பட்டான் என்பதே நன்கு பொருந்தும். ஆகவே திரி புவன வீரனான இச் சோழனையே "சென்னிநாட் டெரியல் **வீரன்** தியாக விநோதன்" என்று கம்பநாடர் தம் பெருங் காப்பியத்தில் குறிப்பிடலாயினர் என்க. 'சென்னி போரமலன்' என அப்புலவர் பெருமானே 'அமலன்' என்ற பெயராலும் இச்சோழனைக் கூறுவர். அகளகன், அனங்கன் என்று சோழ முன்னோர் பெயர் பெற்றவாறே, 'அமலன்' என்று இக் குலோத்துங்கன் பெயர் பெற்றனன்போலும். இவற்றால், 40 வருஷ ஆட்சியில் நம் வேந்தன் தரித்த சிறப்புப் பெயர்கள் பல என்பது தெரியலாம்.

16. **முன்னவரான அரசர் அரசியரை நாட்டார் வழங்கியுள்ள முறை:**—இறந்த தந்தை, பாட்டன், முன்னோன்-இவரைப் 'பெரிய தேவர்' என்பது அக்கால வழக்கு. நாட்டவரெல்லாரும் தங்கள் அரசனைத் தேவர், பெருமாள், நாயனார் என்றும், அவன் தேவியை நம்பி ராட்டியார் என்றும் பெரும்பாலும் வழங்குவர். அத் தேவியரும், அரசகுலத்துப் பெண்மக்களும் 'ஆழ்வார், நாச்சியார்' என்று வழங்கப்படுவதுமுண்டு.

17. **தலைவர்களுக்கு வழங்கிய சிறப்புப் பெயர் கள்:**—மேலே பலவிடங்களிலும் கூறப்பட்ட அரசியல் அதிகாரிகளுக்கும், நாட்டுத்தலைவர்களுக்கும், மற்றத் தலைமக்களுக்கும் வழங்கிய பெயர்களை நோக்குமிடத்து, அவர் தம்முடைய இயற்பெயர்களுடன், தாம் இன்ன அரசனது அபிமானத்திற்கு உரியவர் என்பது தெரியும் படி, அவ்வரசன் பெயர்களுள் ஒன்றையும், ஊர் வமிசங்

களுக்குரிய பெயரையும், வீரச்செயல் முதலியவற்றாற் பெற்ற பட்டப்பெயரையும் தரித்திருந்தமை பலவிடங்களிலும் காணலாகும்.

| | | |
|---|---|---|
| ராஜர் | அதிராஜர் | பிள்ளை |
| ராயர் | அதியரையர் | முதலி |
| அரையர் | பேரரையர் | நாடாள்வான் |

முதலிய சிறப்புச் சொற்கள் இணைந்திருந்தல் காணலாம். இவற்றுள், பிள்ளை என்பது பிள்ளை-முனையதரையர் பிள்ளை-சேந்தமங்கல முடையான் பிள்ளை-ஜயதரப்பல்லவரையர் என்பனபோல முன் வருஞ் சிறப்புப் பெயர்களாகும். இச்சொல் பிராமண ஆசாரியர்களுக்கும் அக்காலத்து வழங்கியது உண்டு. 'பிள்ளை அமுதனார்', 'பிள்ளை லோகாசாரியர்' என்பன காண்க.

சில தலைவர்களுடைய சிறப்புப் பெயர்களிலிருந்து அவர்கள் செய்த காரியமும், வகித்த நிலைமையும் தெரியலாகும். சேனைமீகாமன் இராஜராஜ சேதியராயன் என்பவன் சோழசேனாதிபதியா யிருந்தவன் என்பதும், பாண்டியநாடு கொண்டான் இராஜராஜ சம்புவராயன் என்பான் பாண்டிய நாட்டுப் போரில் வென்றவன் என்பதும், அத்திமல்லன் குலோத்துங்க சோழன் என்பவன் யானைப் படைத்தலைவன் என்பதும், தன்ம பரிபாலன இராஜாதிராஜ மலையரையன் என்பான் தர்ம காரியங்களைக் கண்காணித்து வந்தவன் என்பதும் அறியக்கூடியன. போரில் வீரங் காட்டிய தலைவர்கள்—

| | |
|---|---|
| கண்டர்சூரியன் | வீரமழகியான் |
| தனிநின்று வென்றவன் | வீரபயங்கரன் |
| அமராபரணன் | வாணிலைகண்டான் |
| வீரராக்ஷஸன் | சூரநாயகன் |

என்னும் இத்தகைய பட்டங்கள் பெற்றுள்ள செய்தியும்

அத் தலைவர்கள் பெயர்களினின்று தெரியவருகின்றன. தமிழகத்திற்குப் புறம்பான வடுகு கன்னட நாட்டுத் தலைவர்களும் அரசர்களும் தமிழியற்பெயர், சிறப்புப் பெயர்களைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தகுந்தது.

18. **வலங்கை இடங்கைப் பிரிவினர்**:—இப் பிரிவினர் எக்காலத்தில் உண்டாயினர், எப்படி ஏற்பட்டனர் என்று உறுதியாகச் சொல்லப் போதுமான ஆதாரமில்லை. இடங்கைப் பிரிவினரைப் பற்றி நம் மன்னன் காலத்துக் கல்வெட்டு ஒன்று சில முக்கியமான செய்திகளை வெளியிடுகின்றது.

அஃதாவது: முற்காலத்தில், காசியப முனிவரின் யாகத்தைக் காப்பாற்றும் பொருட்டு நெருப்புக் குண்டத்திலிருந்து பிறந்தவர்கள் இடங்கை வகுப்பினர். அரிந்தம சோழன் அரசு புரியுங் காலத்தில் ஒரு பெரும் பிராமணக் கூட்டமும் அவர்களுடன் இவ்வகுப்பினரும் சோழதேசத்தில் குடியேறினார்கள். சுமார் கி. பி. 1128-ல் திருச்சி ஜில்லாவிலிருந்த இவர்கள், தாங்கள் ஒரே இனத்தவரென்றும், தங்கள் சுய வுரிமைகளைக் காப்பாற்ற ஒத்துழைக்க வேண்டுமென்றும், தங்களுக்குப் பரம்பரையாக ஏற்பட்ட விருது மரியாதைகளைக் காட்டாதவர்களைத் தம் விரோதிகளாகவே கருத வேண்டுமென்றும் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். இச் சமூகத்தைச் சேர்ந்தவர்களே ‘சுருதிமான்கள்’ என்போர். மேற்கூறிய ஒழுங்குகளை மீறி நடப்பவர்கள் ஜாதி பஹிஷ்காரம் செய்யப்படுவார்கள் என்பதும் அவர் தீர்மானம். ஆடுதுறையில் கண்டெடுக்கப்பட்ட மற்றொரு சாஸனத்தால் இக் கூட்டத்தார் 98 உட்பிரிவினராவர் என்றும், இவர்களுக்கும் மற்றப் பிரிவினர்களுக்கும் அடிக்கடி சச்சரவு நடந்து வந்ததென்றும் தெரியவருகிறது.

## அத்தியாயம் 10

# அரசியல்

**சோழ ஏகாதிபத்தியம் :—** தமிழகத்தில் பேரரசர்களாய் ஆண்டவர்களைக் 'கோ' என்ற சொல்லால் முன்னோர் வழங்கிவந்தனர். கோப்பெருஞ்சோழன், கோ நெடுமாறன் என்ற பெயர்களைக் காண்க. மன்னர் பலருக்குத் தலைவனான சக்ரவர்த்தி என்பது இதன் பொருள். 'கோக்கண்டு மன்னர் குறைகடற்புக்கிலர்,' என இதே கருத்தில் பாடப்பட்டிருத்தல் காணலாம். தமிழ் நாடுகளிலும் அதனைச் சூழ்ந்த தெலுங்கு கன்னட தேசங்களிலும், தங்கள் தனியாணை செல்லும்படி சக்கராதிபத்தியத்தை நிலைநாட்டிய தமிழ்க் கோவேந்தர்களுள் விஜயாலயன் வமிசத்துச் சோழமன்னரே தலைமை வாய்ந்தவர்கள். இவர்களது ஏகாதிபத்தியம், முதலாம் இராஜராஜன் காலத்திலிருந்து, வடக்கே கலிங்கமும் தெற்கே கன்னியாகுமரியும் கிழக்கும் மேற்கும் கடல்களும் எல்லைகளாகப் பெருகியது. இந்தச் சாம்ராஜ்யத்தின் தனிநாயகம் வகித்த அரசர் பெருமக்களை இராஜகேசரி வர்மன், பரகேசரி வர்மன் என்ற பட்டங்களுடன் 'கோ' என்றதைச் சேர்த்து, கோராஜகேசரி வர்மன், கோப் பரகேசரி வர்மன் என்று முன்னோர் வழங்கிவந்தனர். தந்தை ராஜகேசரி யாயின், மகன் பரகேசரி என்னும் பட்டம் உடையவனாவான் என்னுஞ் செய்தி முன்பே கூறப்பட்டுள்ளது.

**நாடுகள் :—** இத்தகைய சோழசக்கரவர்த்திகளால் பரிபாலிக்கப்பட்டு வந்த ஏகாதிபத்தியம் பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சோணாடு, பாண்டிய நாடு, மலைநாடு, கொங்குநாடு, தொண்டைநாடு, கங்க

பாடி, நுளம்பபாடி, வேங்கைநாடு, இலங்கை என்பவை இவ் வேகாதிபத்தியத்தில் அடங்கிய மண்டலங்களே. முதல் இராஜராஜ சோழன் இவற்றுட் பலவற்றை வென்று கொண்டவனுதலால், அவன் பெயரால் ஜயங் கொண்ட சோழ மண்டலம் (தொண்டைநாடு), மும்முடிச் சோழ மண்டலம் (இலங்கை), முடிகொண்ட சோழ மண்டலம் (கங்கபாடி) என்று இவ்வாறுக அவை வழங்கப்பட்டன. நம் குலோத்துங்கன் காலத்திலும் இப் பெயர்களே பெரும்பான்மை வழக்கில் இருந்தன.

இவ்வேகாதிபத்தியத்துள் தலைமையான நாடு சோழமண்டலம். இது 9 வளநாடுகளாகவும் 79 நாடு களாகவும் வகுக்கப்பட்டிருந்தது. இம்மண்டலம் பெரிய நாடு எனவும் பெயர் பெறும். "இப்படிக்குக் கல் வெட்டினேம் எழுபத்தொன்பது பெரிய நாட்டோம்" என்பது சாஸனத் தொடர். "நாமே நாட்கவி பாடு நாட்போ லிருப்பது பெரிய நாடே" என்றார் கூத்தரும்.

**நகரங்கள் :**—சங்க காலத்தில் சோழவேந்தர்க்குத் தலைநகரங்களாய் இருந்தவை **கோழி** என்ற உறையூரும் புகார் என்ற காவிரிப்பூம் பட்டினமுமாகும். விஜ யாலயன் வழியில் வந்த சோழர் காலங்களில் ஆயிரத் தளி, தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம், இராஜ ராஜபுரம் என்பவை இராஜஸ்தலங்களா யிருந்தன. நம் சோழன் காலத்தில் தலைநகரமாய் இருந்தது கும்ப கோணத்தை அடுத்துள்ள ஆயிரத்தளியே யாகும். நந்திபுரம், பழையாறை, முடிகொண்ட சோழபுரம் என்றும் இது வழங்கப்பட்டது. இச் சோழன், பாண்டியனது தலைநகரான மதுரையில் அவனுக்குச் செய்த பரிபவங்களையும், அங்கே செய்துகொண்ட விஜயாபிஷேகத்தையும், ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் என்பவன் பின்பு சோழர் தலைநகரான இவ்வாயிரத்

தளியில் பழிவாங்கவேண்டித் திருப்பிச் செய்தான் என்பது அப் பாண்டியன் மெய்க்கீர்த்தியால் தெரிய வருகின்றது. இதிலிருந்து, நம் சோழன் அமர்ந்து ஆட்சி செய்த தலைநகர் ஆயிரத்தளியே என்பது தெளியப்படும். இரண்டாம் இராஜராஜன் தனக்குப் பின் ஆள்வதற்கு இராஜாதிராஜனை யுவராஜனாக்கி அன்றே இறந்த இடமும் இவ்வாயிரத்தளிப் படை வீடே. இராஜராஜனால் அபிமானிக்கப்பட்ட வேறு தலை நகரம் **இராஜராஜபுரம்** என்பது. இதனைத் **தாராசுரம்** என இக்காலத்தார் வழங்குவர். அளகை என்னும் நகரை நம் சோழனுக்கு உரியதாகக் குலோத்துங்கன் கோவை பலவிடத்தும் கூறுகின்றது. இது இராஜராஜபுரம் ஆகலாம். காவிரிப்பூம்பட்டினத்தைக் காட்டிலும் நாக பட்டினம் இச் சோழன் காலத்தில் சிறந்த கடற்றுறை நகரமாய் இருந்ததென்று அக்கோவையால் (105) தெரியவருகின்றது.

**அரசியல் தலைவர்கள்:**—அரசனுக்குத் தலைமை யமைச்சன் ஒருவன் உண்டு. இம் மந்திரியே அவனால் விபவங்கள் பலவும் பெற்று, எல்லா அரசியல் துறைகளுக் குந் தலைவனாய் விளங்குபவன். நம் அரசனாட்சிக் காலத்தில் தலைமை மந்திரியா யிருந்தவர் எவரென்று தெரியவில்லை. இனி, தலைமை யமைச்சனை யடுத்த அரசாங்க அதிகாரி கள் 'உடன் கூட்டத்துப் பெருமக்கள்' எனப்படுவர். இவர்களை 'முதலிகள்' என்றும் வழங்குவர். தலைமை மந்திரியைப் போலவே அரசனால் வரிசைகள் பெற்று அவனுடன் இருந்து ஆலோசனை கூறியும், அரசியல் துறைகளை நிர்வகித்தும் வந்தவர்கள் இன்னோர். திரு மந்திரவோலை, விடையிலதிகாரி, வரிக்குக் கூறு செய் வார், நாட்டதிகாரி என இவர்கள் பலவகையினராய் இருந்தனர். இவருள், திருமந்திரவோலை என்பவன்

அரசன் திருவாய்மலர்ந்தருளும் ஆணைகளைக் கேட்டு எழுதியும், இன்னின்ன காலத்து இன்னின்ன நடத்தற் குரியன என்பதை அவனுக்கு நினைவூட்டியும், அவனால் நடத்தற்குரிய காரியங்களை நிர்வகித்துப் பார்த்தும் அவனது 'அந்தரங்கக் காரியதரிசி'யின் ஸ்தானத்திலிருந் தவன்.

"முறையிடத்திரு மந்திர வோலையான்
முன்வணங்கி முழுவதும் வேந்தர்தம்
திரையிடப்புற நின்றனர் என்றலும்
செய்த நோக்கில்வந் தேய்தி நெருக்கவே"

என்று, தம்மரசனான அபயன் காலத்தில் இவ்வதிகாரி நடத்திய காரிய முறையைச் செயங்கொண்டாரும் கூறு தல் காணலாம். நம் சோழர் பெருமான்கீழ் இவ்வுத்தி யோகம் வகித்தவர்களுள் முக்கியமானவர் பின்வரு வோர்:—

இராஜ நாராயண மூவேந்த வேளான்,
மீனவன் மூவேந்த வேளான்,
நெறியுடைச் சோழ மூவேந்த வேளான்.

இனி, அரசரிடமிருந்து பிறக்குங் கட்டளைகளை அவரவர்க்கு அனுப்பி உத்தரவிடுந் தலைவன் 'விடையிலதிகாரி' ஆவான். வாங்கப்பட்ட அரசிறை முதலிய வருவாய்களையும் செலவுகளையும் ஒழுங்காக வைப்பித்து மேற்பார்ப்போர் 'வரியிலார்' எனப்படு வர். அரசிறை முதலியன விதித்துத் திட்டஞ் செய்யும் அதிகாரிகள் 'வரிக்குக் கூறு செய்வார்' ஆவர். இவர் களன்றி, அரசிறை நீங்கிய ஊர்களின் கணக்குகளை மேற் பார்க்கும் புரவரிச்சீகரண நாயகமும், குத்தகை நிலங்

களின் கணக்கு வைக்கும் 'வரிப்பொத்தக' அதிகாரியும், நாட்டின் நிலைமைகளை ஆராய்ந்து ஒழுங்கு செய்யும் நாட்டதிகாரிகளும், அரசிறைகள் தண்டுவதை மேற்பார்க்கும் 'தண்டுவா'னும் இருந்தனர் என்பது நம் சோழன் சாஸனங்களால் தெரியவருகின்றது. இவ்வரசியல் துறைகளுக்கெல்லாம் நம் அரசன் கீழ் அதிகாரிகளாயிருந்தவர்கள் பலர். அவருள்—

| | |
|---|---|
| களப்பாளராசர் | வாணதிராசர் |
| தொண்டைமான் | வேசாலிப்பேரரையர் |
| நுளம்பாதிராசர் | காடுவெட்டிகள் |
| விழுப்பாதிராசர் | கொங்கராயர் |
| நந்தியராசர் | சித்தரசர் |
| வயிராதிராசர் | விழிஞத்தரையர் |

முதலியோர், இவன்காலத்துக் கல்வெட்டுக்களில் அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படுகின்றனர். இவருள் பலர் உடன் கூட்டத்துப் பெருமக்களாகவும் விளங்கியவர்கள் எனத் தோன்றுகின்றது. நாட்டுத் தலைவர்களான சாமந்தர்கள் சிலரும் இவ்வுடன் கூட்டத்தவர்களிற் சேர்ந்தவர்களே.

அரசனிடம் குறையோ, முறையோ, உரிமைகளோ பெற வேண்டியவர்கள் தங்கள் வேண்டுகோளை முதலில் இவ்வதிகாரிகளுள் ஒருவரிடம் அறிவிப்பர். அறிவித்தவற்றை விசாரித்து, அரசன் ஆணைபெறுவது அவசியமானால், அவ்வதிகாரியே அவ்வரசனிடம் நேரில் விண்ணப்பம் செய்வார். அதனைக் கேட்ட வேந்தன் காரியத்துக்கேற்றபடி உடன்கூட்டத்தவரோடு கலந்தோ தனியாகவோ முடிவுசெய்து, தன் ஆணையை வரிக்கூறு செய்வார் முதலிய அதிகாரிகளுக்கு வாய்

மொழியாக அருளிச்செய்வான். அவ் வருளிச்செயல் திருமந்திரவோலையதிகாரியால் பட்டோலை கொள்ளப் பட்டு, உடன் கூட்டத்து அதிகாரிகளின் கையொப்பத் துடன் உரிய கீழதிகாரிக்கு அனுப்பப்படும். இவ்வா றன்றி, அரசனுக்கு வேண்டியவர்கள் அவனிடம் நேரே தங்கள் குறைமுறைகளை விண்ணப்பித்து அவன் ஆணை யைப் பெறுவதும், சொந்தக் காரியமானவற்றை அரசனே பிறரோடு ஆலோசிக்காமல் ஆணையிடுவதும் உண்டு.

**மகா சபைகள் :—**அரசியல் துறைகள் மேற்கூறிய அதிகாரிகளின் மேற்பார்வைக்கு உட்பட்டிருந்தது போலவே, ஜனசமுதாயத்துக்குரிய பொதுக் காரியங் களும் நியாய பரிபாலனமும் நகரங்களிலும் கிராமங் களிலும் அமைந்த சபைகளால் நிர்வகிக்கப்பட்டு வந்தன. இச்சபையின் அங்கத்தினரெல்லாரும் பொது மக்களால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களே. அவ்வாறு தெரிந்தெடுப்பதற்கும், தெரிந்தெடுத்த அங்கத்தினர் செய்வதற்குரிய காரியாதிகளுக்கும் ஏற்ற விதிகள் செப்ப மாக அரசாங்கத்தாரால் அமைக்கப்பட்டிருந்தன. ஆயத்துறை, நியாயத்துறை, தேவதானம், திருவிடை யாட்டம், பள்ளிச் சந்தம், அகரப்பற்று, மடப்புறம் ஜீவிதப்பற்று, படைப்பற்று, வன்னியப்பற்று முதலிய பொதுவுரிமைகளெல்லாம் இவர்கள் மேற்பார்வையில் சிறிதும் குறைவில்லாமல் நடைபெற்றுவந்தன. இம் மகா சபையின் உட்பிரிவுகளான தர்மவாரியம், ஏரி வாரியம், தோட்ட வாரியம், ஊர்வாரியம், பொன் வாரியம் இவைபோன்ற கிளைச்சபைகளும் தாய்ச்சபை களுடன் ஒத்துழைத்து வந்தன.

நம் வேந்தன் காலத்தில் இந்த மகாசபைகள் ஆலய முதலிய அறப்புறங்களுக்கு இறைகழித்துக் கொடுத்தும்

நிலவரித் திட்டஞ்செய்தும் பூமிகள் உதவியும் பிறர் அளித்த நிலங்களையும் பொருள்களையும் ஏற்றுக் கண்காணித்தும் திருப்பணிகள் பல புரிவித்தும் இராஜத் துரோகம் சிவத்துரோகம் களவு முதலியவற்றுக்குத் தண்டம் விதித்தும் பொதுக் காரியங்களைத் திறமையுடனும் சிரத்தையுடனும் நிர்வகித்து வந்த செய்திகளைக் கல்வெட்டுக்கள் மூலம் பரக்கக் காணலாம். இம் மகா சபையேயன்றி, நாட்டாரும் நகரத்தாரும் திரண்டு சபை கூடிக் கொலை களவு முதலிய குற்றங்களை ஆராய்ந்து உரிய தண்டனைகளை விதிப்பதும் உண்டு. இத் தகைய மகாசபைக்கு அங்கத்தினரைத் தேர்ந்தெடுப்பதில் இருந்த பழைய விதிகளை நம் வேந்தன் சில நகரங்களில் திருத்தி யமைத்துள்ளான். இச் சோழனது ஏழாவது ஆட்சியாண்டில் உண்டான தலைநாயிறுக் கல்வெட்டில் இக் கூட்டத்தாரின் விதிகளாகக் காணும் விஷயங்களாவன :

1. இவ்வாண்டு முதல் சபைக்கூட்டத்துக்கு அங்கத்தினர்களாகத் தேர்ந்து எடுக்கப்படுவோர், அத் தேர்தலுக்குமுன் பத்து வருடங்கள் அக்கூட்டத்தின் அங்கத்தினராய் இருந்திருக்கக்கூடாது.
2. வித்வான்களாயும், சமபுத்தி உள்ளவர்களாயும், நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களாயும் உள்ளவர்களே தேர்தலுக்கு உரியவர்கள்.
3. இந்த ஏழாம் ஆண்டுக்கு முன்னும் பின்னும் ஐந்து வருடங்கள்வரை, கூட்டத்து அங்கத்தினர்களின் உறவினர்களும் தேர்தலுக்கு உரிமையில்லாதவர்கள்.

4. அரசிறை முதலிய கடமைகளைச் சரிவரச் செலுத்தாதவர்களும், இலஞ்சம் வாங்கின வர்களும், மற்ற வினைக்கேடு உள்ளவர்களும் சபை அங்கத்தினராய் இருக்க உரிமை யற்றவர்கள்

என்பன.

இம் மகாசபை அங்கத்தினரான பட்டர்கள் (வித்வான்கள்) நம் சோழன் காலத்தில் தம்மிற் கூடிச் செய்த குற்றத் தீர்ப்புக்கள் சில இங்கே குறிப்பிடத் தக்கவை :

ஒரு சமயம் இருவர் தங்கள் வயலில் ஒரு எருமை மாடு பயிர்களை மேய்வது கண்டு அதை நன்றாய் அடித்தார்கள். அதனால் எருமை இறந்து விட்டது. அச் செய்தியை அவர்கள் பட்டர் களுக்குத் தெரிவிக்க, பட்டர்கள், பக்கத்தில் இருக்கும் கோயிலுக்கு ஒரு தீபம் கொடுக்கும்படி சொல்ல, அவர்கள் அப்படியே செய்தார்கள்.

இனி, தேவாலயம் முதலியவற்றின் சொத்துரிமை பற்றி நேரும் பெரிய வழக்குக்களை அரசன் தன் உடன்கூட்டத்து அதிகாரிகளைக்கொண்டு விசாரிக்கச் செய்வதும், அவர்களது விசாரணை முடிவைப் பெரும்பாலும் அனுமதித்து உறுதி செய்வதும் வழக்கமாகும். உதாரணமாக :

நம் வேந்தனது 15-ஆம் ஆண்டில், திருவாவடு துறைக் கோயிலார்க்கும் திருவாலங்காட்டுக் கோயி லார்க்கும் தோட்டக் கூறான நிலங்கள் சிலவற்றின் உரிமைபற்றி விவாதம் நேர்ந்தபோது, அதனைத் தீர்த்துவைக்கும்படி நம் அரசனிடம் கொங்கராயர் என்பவர் வேண்டிக்கொண்டார். அரசன் தன்

அதிகாரிகளான வாணதிராசர், நுளம்பாதிராசர், வரிக்குக்கூறுசெய்வார் இவர்களுக்கு அவ்வழக்கை ஆராயும்படி உத்தரவிட்டான். அதன்படி அவர்கள் கூடிச் செய்த விசாரணையில், திருவாவடுதுறையார் கொண்டாடும் பாத்தியம் தவறு என்றும், திருவாலங் காட்டார்க்கே அஃது உரியதென்றும் முடிவு செய்யப் பட்டது. இத்தீர்மானத்தை அரசனுக்கு அறிவித்த தும், அவன் ஆணைப்படி அந் நிலவுரிமை திருவாலங் காட்டார்க்கே திருப்பி அளிக்கப்பட்டது.

இவ்வாறே நம் வேந்தனது 17-ஆம் ஆண்டில் திருமாகாளத்துக் கோயில்நிலத்தை 'விடுதீட்டுப்' பெற்றுத் தாம் அடைந்திருப்பதாக இராஜபவித்திரப் பல்லவராயர் என்ற அதிகாரி பாத்தியங்கொண்டாடினர். அப்போது வாணதிராசர், நுளம்பாதிராசர் என்ற வேறு அதிகாரிகள் இருவர் அந்நிலம் கோயிலுக்கு உரியதென்று கூற, அவ்வழக்கு வேசாலிப் பேரரையர் என்பவரால் விசாரிக்கப்பட்டு, பல்லவராயர் கொண் டாடிய பாத்தியத்துக்கு ஆதாரவில்லை யென்றும், கோயிலுக்கே அஃது உரியது என்றும் தீர்மானிக்கப் பட்டது.

மேற்கூறியவை போன்றவை மற்றும் பல உண்டு. இவற்றால், நகர கிராம மகாசபைகளும், நாட்டாரும், அரசனும், நாட்டு வழக்குக்களையும் குற்றங் குறை களையும் நன்கு ஆராய்ச்சி செய்து வந்தமையால் நீதிபரிபாலனம் நெறிமுறை பிறழாமல் நடந்துவர லாயிற்று என்பது அறியலாகும்.

இனி, அரசியலுக்குரிய துறைகளாக அமைந் தவை எத்தனையோ உள்ளன. குடிகளின் பாத்தியா பாத்தியங்களும், நிலங்களின் அளவைத்திட்டமும், அவற்றிற்கு ஏற்பட்ட அரசிறை முதலிய வரி விகிதங்

களும், நாணயங்களின் செலாவணியும், ஆலயங்கள் முதலிய அறப்புறங்களின் பரிபாலன முறைகளும் ஜாதி தர்மங்களின் வியவஸ்தையும், வியாபாரிகளின் கூட்ட ஒழுங்கும், நாட்டுமக்களின் வழக்கங்களுக்கேற்ப வழங்கி வந்தன. இவையாவும் பெரும்பாலும் முன்னோரான சோழமன்னர் மேற்கொண்ட முறைகளென்றே சொல்லலாம். இவற்றையெல்லாம் இங்கு விரிப்பின் இவ்வதிகாரம் அளவு கடந்துவிடும். ஆதலால், இவைகளை விடுத்து, நம் சோழன்காலத்து அரசியற் செய்திகளாக அறியப் பட்டவற்றைமட்டும் இங்கே குறிப்பிட்டோம்.

## அத்தியாயம் 11

## குணாதிசயங்கள்

இதுவரையில் கூறிவந்த செய்திகளால் மூன்றும் குலோத்துங்கனது வாழ்க்கை வரலாறுகளைத் தொடர்ச்சியாக நாம் ஒருவாறு அறிந்துகொள்ள இயலும். இவ் வேந்தன் முதற்குலோத்துங்க சோழனுக்குப்பின்பு, தௌகித்திர பரம்பரையில் வந்தவனாதலால், சோழகுலத்துப் பேரரசர்களின் வீர ரத்தம் இவன் நரம்புகளிலும் ததும்பி யோடுவதாயிற்று. இரண்டாம் இராஜராஜன் தன் வமிசவிருத்திக்காகக் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து கொணர்வித்த சிறுவர்கள் இருவருள், இவன் ஒருவன் என்று முன்பே அறிந்தோம். அவ்வாறு தருவிக்கப்பட்டதுமுதலே ஆயிரத்தளி யரண்மனையில் வளர்ந்து, தக்க அமைச்சர்களாலும் அறிஞர்களாலும் இவன் சிட்சைசெய்யப்பெற்று வந்தவன். அதனால், இராஜ்ய நிர்வாகத்துக்கு வேண்டிய அறிவாற்றல்களெல்லாம் இவனிடம் தாமாகவே நிரம்பலாயின. நிரம்பியிருந்த நிலையில், இவன் தமையன் ஆட்சியும்

முடிவுபெறவே, சோழ ராஜ்யபாரம் தன்னைத் தாங்க வல்ல இவன் தோள்களிலே சலனமின்றித் தங்கியது.

இச் சோழனை, இவன் முன்னோனான முதற் குலோத்துங்கனது அமிசாவதாரம் என்றே சொல்லலாம். பெயர் ஒற்றுமையும், அந்நிய மரபிலிருந்து புகுந்து அரசுக்கு உரிமை பூண்ட ஒப்புமையும் முன்பே தெரியவந்தவை. இதை தவிர, வீரம் நியாயம் தியாகம் என்ற மூன்று ராஜகுணங்களையும் மும்முரசங்களால் முழக்கிய தன்மையிலும் இவ்விருவரும் பெரும்பாலும் ஒத்தவர்களே.

(1) **வீரத்திறம் :**—நம் சோழர் பெருமானது வீரப் பெருமைகளை இன்னும் விவரித்தல் மிகையாகும். இவன் காலத்தும் இவன் தம்பியான சங்கரராஜன் காலத்தும் வாழ்ந்தவராக அறியப்படும் சங்கரசோழனுலா ஆசிரியர், மற்றெல்லாச் சோழரினும் அதிகமான வீரச் சிறப்பைப் பெற்றவன் குமார மகீதரன் எனப்பட்ட இக் குலோத்துங்கன் என்று கூறியிருத்தல் முன்பே குறிப்பிடப் பட்டது. அவர் கூறியவாறு, போரில் பல்லாயிரவரைக் கொன்று அவர் தலைகள் குருதிவெள்ளத்தில் மிதப்பப் பேய்கட்கு விருந்தளித்து, மாற்றரசரிடம் திறை கொண்டு, தனது புலிக்கொடியை அரசர் பலரும் அணியச்செய்த வெற்றிச் சிறப்பியல்பினாலேயே வீரராஜேந்திரன், திரிபுவன வீரன் என்ற பெயர்கள் இவனுக்கு வாய்த்தன. புலவர் பெருமானான கம்பரும்,

"புவிபுகழ் சென்னிபோ ரமலன்"
"சென்னிநாட் டேரியல் வீரன்"

என்று இக்குணப்பெயர்களால் இவனைக் குறிப்பிட்டிருத்தல் அறியத்தக்கது. இக் குலோத்துங்கன் பெரும்

போர்களிலே தன் அஞ்சாத் தறுகண்மையைக் காட்டி வந்தவனாயினும், பகைவர்கள் வந்து பணிந்தபின், அவர்கள் இழைத்த சூழ்ச்சிகளையும், தீமைகளையும் முற்றும் மறந்து, அன்பும் மரியாதையும் அவர்களிடம் காட்டிவந்தவன். 'போர் அமலன்' என்று கம்பநாடர் இவனுக்குப் பேர் வழங்கியதும் இப் பெருங்குணத்தைக் கண்டென்றே சொல்லலாம். ஆகவே "பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால், ஊராண்மை மற்றத னெஃகு" என்றவாறு அமைந்த நம் வேந்தனது மறக் கருணைத்திறம் விளக்கமாகும்.

இவ்வாறு மறக்கருணையுடையனாயினும், பணியாத பகைவரிடம் இவன் சிறிதும் மனமிரங்கியவன் அல்லன். இவனது மதுராவிஜயத்தில் பாண்டியநாட்டைப் பாழ் படுத்தியும், பாண்டியன் அரண்மனையுட் புகுந்து, அங் குள்ள அவன் மண்டபங்களை இடித்துக் கழுதை ஏர் கொண்டு உழுது கவடிவித்தியும், பாணனுக்குப் பாண்டி யப்பட்டஞ் சூட்டியும் இவன் புரிந்த செயல்கள் கொடுமை யானவையே. ஆனால் தானும் தன் முன்னோனும் தக்க சமயங்களில் புரிந்த நன்றிகளையும், செய்த உடன் படிக்கைகளையும் பாண்டியன் மறந்து, தனக்குக் கேடு சூழ்வதை அறிந்ததும் உண்டான பெருஞ்சீற்றத்தின் விளைவே இச்செயல்கள். நம் சோழன் உள்ளொன்றும் புறம்பொன்றும் உடையவன் அல்லன். அளித்த வாக் குறுதியை உலகம் பிறழினும் வழுவாது செய்பவன்.

அதனாற்றான், இக்குணங்கள் தவறிய பகைவரிடம் இவன் தன் கொடுமையைக் காட்ட நேர்ந்தது என்னலாம். இப்படிப்பட்ட வன்கண்மைகளை இவன் முன்னோரும் பகைவர் திறத்தில் காட்டியவர்களாயிருத்தலும், அது புறத்துறைகளுள் ஒன்றாகப் புகழப்படுதலும் இங்கு அறியத்தக்கவை.

நம் சோழன் சிறுபிராயமுதலே குதிரையேற்றம் யானையேற்றம் முதலிய போர்ப் பயிற்சிகளிலும், வேட்டையாடுதல் நீர்விளையாட்டு முதலியவற்றிலும் விருப்ப முடையவன் என்று தெரிகின்றது. 'வாசி நகுலன்' 'பரிவீரன்' என்று இவனைப் புகழ்வர் கோவை நூலார். மதுராவிஜயத்தின்பின் அந் நகர்ப் பக்கங்களில்,

"வெஞ்சிலை வாங்கி வேட்டையாடி நீர்விளையாடி
ஓடைமதக் களிறேறி ஆடல்வாம் பரிகடவித்
தண்டளவ மலர்மாலையில் வண்டாடச் சேண்டாடி"

மகிழ்ந்தான் என்று கூறுகின்றது இவனது மெய்க்கீர்த்தி. மகிழ்ச்சிக் காலங்களில் அரசர் முதலியோர் இத்தகைய விளையாட்டுக்கள் புரிதல் பண்டை வழக்கமே. சேரமான் பெருமாள் நாயனாரும் சுந்திரமூர்த்திகளும்,

சேண்டாடுந் தொழின் மகிழ்வும்
சிறுசோற்றுப் பெருஞ்சிறப்பும்
வண்டாடு மலர் வாவி
மருவியநீர் விளையாட்டும்"

(பெரியபுராண. சேரமான். 155)

புரிந்தனர் என்றும், "நிலைச்செண்டும் பரிச்செண்டும் வீசி மிக மகிழ்வெய்தி"னர் என்றும் சேக்கிழார் பாடுதலும், 'வாலுளைப் புரவியற் பொருவில் செண்டாடி" என்று கம்பர் கூறுதலும் (கம்ப ராமா. நகரம். 68) இங்கே ஒப்பிடத்தக்கன.

கி. பி. 1178-ல் எழுதிய சீன ஆசிரியரொருவர் சோழநாட்டையும் அதன் படைநிலையையும் பற்றிக் கூறுவதாவது :

" இத்தேசம் மேற்கு நாடுகளுடன் பகைகொண்டுள்ளது. அரசாங்கத்தில் 60,000 யானைகளடங்கிய

ஒரு மாபெரும்படை உளது. ஒவ்வொரு யானையும் 7, 8 அடி உயரம் உடையது. போரிடுஞ் சமயத்தில் இவ் யானைகளின் முதுகின்மேல் உள்ள அம்பாரிகளில் வீரர்கள் அநேகர் செல்கின்றனர்; இவ்வீரர்கள் கையில் ஈட்டியேந்தி யுத்தம் புரிகின்றார்கள். அம்புகளை வெகுதூரம் வரை செல்ல எய்கின்றனர். போரில் வெற்றியளிக்கும் யானைகளுக்குச் சிறப்புப் பெயரிட்டு வழங்குகின்றனர். சிலர் நேர்த்தியான மேல் விரிப்புக்களையும், பொன்னாலான முகபடாங்களையும் அதற்குப் பரிசாக அளிக்கின்றனர். தினந்தோறும் அரசன் சமுகத்தில் யானைப்படை கொணர்ந்து காட்சியாக நிறுத்தப்படும்.''

(2) **நியாயத்திறம்** :—பெருவீரனாகிய நம் சோழனிடத்தில் நியாயபரிபாலனம் நிரம்பியிருந்தது. இவன் ஆட்சியின் நேர்மை, மேலே கூறிவந்த பற்பல செய்திகளாலும் விளக்கமானதே. ''மாமனு நூல் ஆராயும் நீதிக் குலோத்துங்கன்'' என்றார் கோவை யாசிரியரும். வேற்றரசரது கொடுங்கோன்மையைக் களைந்து செங்கோலாட்சி நடைபெறுமாறு செய்தவன் இவன். பதின்மூன்றாவது நூற்றாண்டினரான சௌஜூ குவா என்னும் சீன ஆசிரியர் (Chau Ju-Kua) சோழர் நீதிமுறையைப் பற்றிச் சொல்லுவதாவது:

''குற்றம் புரிந்தோரை மந்திரிகள் தண்டிக்கின்றனர். குற்றம் அற்பமா யிருந்தால், குற்றவாளி ஒரு மரச்சட்டத்திற் கட்டப்பட்டுக் கோலால் 50, 70, அல்லது 100 அடிகள் அடிக்கப்படுவான். பெரும் பிழைகள் செய்தவர் சிரச்சேதம் செய்யப்படுவர்; அல்லது யானைக்காலால், தலை இடறப்படுவர்.''

(3) **தியாகச் சிறப்பு** :—வள்ளன்மையில் தன் முன்னோர் பலரினும் சிறந்து விளங்கியவன், இச் சோழர் பெருந்தகை. இவன் காலத்துப் பெரும் புலவர்களுள்

இவனல் ஆதரித்து அபிமானிக்கப்படாதவர் எவருமே இரார் என்று தோன்றுகிறது. தன்பால் வந்த கலை வாணர்க்கெல்லாம் கனக வருஷம் பொழிந்தவன் இவன்.

இவன் வழங்கிய பொன்களும் மற்றப் பொருள்களும் இவனைப் பாடிய கவிஞர் வீடுகளில் நிரம்பிக் கிடப்பதை நேரிற்கண்டு களித்தவர் போல,

> '' புவிபுகழ் சென்னிப்போ ரமலன் தோள்புகழ்
> கவிகள்தம் மனையெனக் கனக ராசியும்
> சவியுடைத் தூசுமேன் சாந்து மாலையும்
> அவிரிழைக் குப்பையு மளவி லாதது ''
>
> (கிஷ்கிந். பிலநீங்கு. 35)

என்று, தம் இராமாயணத்தில் உவமைமுகத்தால் கூறு கின்ருர், கவிச்சக்ரவர்த்தி கம்பநாடர்.

தமிழ்வாணர்க்கு இவ்வாறு உதவியது போலவே, வடமொழிவல்லவரான அந்தணர்க்கும் ஏனைக் கலைஞர்க் கும் அளித்தவன் நம் வேந்தன். திருவொற்றியூரி லிருந்த வியாகரண சாஸ்திர சாலைக்கு இவன் இறையிலி செய்துள்ளான். மதுரா விஜயத்தில்,

> '' அருமறை முழுதுணர்ந்த அந்தணர்க்கு அகரமேற்றி ''

ஆதரித்தான் என்று இவன் மெய்க்கீர்த்தியும் கூறு கின்றது.

(4) **சமயாபிமானம்** :—நம் வேந்தனது வைதிக மதப்பற்றையும் சிவபக்திச் சிறப்பையும் சமயநிலை கூறிய விடத்து விளக்கினேன். பொதுவாக, சிவாலயங்களில் இவனுக்குப் பத்தி சிரத்தை மிகுதியும் உண்டாயினும், தன் முன்னேர் வழிபட்டுவந்த தில்லையிலும் திருவாரூரி லும் இவனுக்கிருந்த அபிமானம் பெரிதாகும். தன்

மதுராவிஜயத்தில் சேர பாண்டியரிடமிருந்து பெற்ற அளவற்ற திரவியங்களை இத்தலங்களுக்கு வாரிவழங்கினான் இவ்வேந்தன். அவ்வெற்றியில் தான் பெற்ற பெயரால் 'முடித்தலைக்கொண்ட பெருமாள் திருவீதி' என்று சிதம்பரத்தில் மேற்குத் தெரு வொன்று எடுத்துச் சிறப்பித்தான். சிவபக்தியிற் சிறந்து நின்றானாயினும் அந்நிய மதத்தவரிடமும் அவர் தெய்வங்களிடமும் கொடுமையும் வெறுப்பும் சிறிதும் காட்டாமல் பொதுநோக்கத்துடன் தன் அன்பையும் ஆதரவையும் செலுத்தி வந்தனன், நம் அரசர் பெருந்தகை. சைனப் பெரும் பள்ளிகளும், அமண் பெரியார்களும், சைன பண்டிதர்களும் இவனாற் பேணி ஆதரிக்கப்பட்டிருப்பதும், உடன்கூட்டத்துப் பெருமக்களுள் சைன அதிகாரி ஒருவரை இவன் உடையனாயிருந்ததுமே மேற்கூறியவற்றிற்குத் தக்க சான்றுகளாகும்.

(5) **பிறந்த மாத நக்ஷத்திரங்கள் :—** நம் குலோத்துங்கன் பிறந்தநாள் தைமாதத்து அஸ்தநக்ஷத்திரமாகும். இது, தன்பேரால், திருநறுக்குன்றைப் பெரும் பள்ளி அருகதேவர்க்கு "ஆறுவது முதல் நம் பேராலே இராசாக்கணயன் திருநாள் என்று தைமீ அத்தத்திலே தீர்த்தமாகத் திருநாள் எழுந்தருளுவிப்பதாகச் சொன்னோம்" என்று இவன் கட்டளையிட்டிருப்பதனால் வெளியாகின்றது. அப்பெரும்பள்ளியின் தலைவர்கள் "முன்பிலாண்டு எழுந்தருளுகிற வைகாசித் திருநாளுடனே அரசன் பெயராலும் ஒரு விழா நடத்த வேண்டும்" என்று கேட்டுக்கொள்ள, அதற்கிணங்கிய நம் வேந்தன், அவ் விழாவிற்குத் தன் பெயர்களுள் ஒன்றையும், மாச நக்ஷத்திரங்களையும் தானே குறிப்பிட்டான். அக் குறிப்பிட்ட காலம், அவன் பேருக்கேற்றபடி அவன் பிறந்த மாத நக்ஷத்திரங்களாகவே

கொள்ளத்தக்க தன்றே? அரசர்கள் தாம் பிறந்த நாளில் கடவுளர்க்கு விழா நடத்த ஏற்பாடு செய்தல் பண்டை வழக்கமே. முதல் இராஜராஜன் மலைநாட்டுத் திருநந்திக்கரைச் சிவபிரானுக்கு, தான் பிறந்த சதய நாளில் திருவிழா நடத்திய செய்தியாலும் இது தெரியலாகும். "சதய நாள் விழா உதியர் மண்டலந் தன்னில் வைத்தவன்" என்று சயங்கொண்டாரும் இதனைக் குறிப்பிடலாயினர்.

(6) **தேவியர்:**—நம் வேந்தனுடைய பட்டமகிஷி, "புவனமுழுதுடையாள்" என வழங்கப்பட்டாள். சோழ மாதேவியர்கள் உலகமுழுதுடையாள், ஏழுலகு முடையாள் என்று இவ்வாறு பேர்பெற்று வந்தமுறையில், இப்பெயர் அவளுக்கு வழங்கியது. இவளே தலைமையரசி என்பது "புவன முழுதுடையாளோடும் செம்பொன் வீரசிம்மாசனத்து வீற்றிருந்தருளிய" என்று சாஸனங்களில் இவ்வரசன் விசேடிக்கப் படுதலால் அறியலாம். இத்தொடரால் அரசன் ஓலக்கமாய் இருக்கும் போதெல்லாம் சிங்காதனத்தில் உடனிருக்கும் உரிமை இப் பட்டமகிஷிக்கு உண்டென்பது விளங்கும். பட்டங் கட்டுங் காலத்தில் தலைமைத்தேவி சிங்காதனத்தில் அரசனுடனிருந்து அபிஷேகமும் முடியும் தரிக்கும் பெருமை உடையவள். நம் அரசனுடைய தமையன் சிறுவனாய் முடிசூடிய காலத்திலும் தேவியுடன் அமர்ந்தே முடி தரித்தான் என்று தெரிகின்றது.

இவ்வாறு, அறிவு திரு ஆற்றல் அழகு முதலிய உத்தம இலக்கணங்களெல்லாம் ஒருங்கமைந்து விளங்கினான் நம் சோழ சக்கரவர்த்தி. இவன் காலத்தில் சோழ சாம்ராஜ்யம் மலைமேலிட்ட தீபம்போலப் பிரகாசித்தது. வெற்றித்திரு இவன் திருப்புயங்களில் வீற்றிருந்து கொண்டு, எடுத்த காரியங்கள் எல்லாவற்றையும் இனிது

முடித்து வைத்தருளினான். அதனால், இவன் நேர்நின்று பரிபாலித்த 38-ஆண்டுகளிலும் சோழ ஏகாதிபத்தியம் எல்லாப் பெருமைகளுடனும் நிலவியது. நாற்பது ஆண்டுகள் (கி. பி. 1218) வரையில் இவ்வேந்தனது சாஸனங்கள் நாட்டில் கிடைத்துள்ளன. ஆனால், இவன் பின்னவனான மூன்றாம் இராஜராஜன் கி. பி. 1216-ல் முடி சூடியவன் என்று தெளியப்படுகின்றான். இதனால், நம் குலோத்துங்கன் தன் 38-ஆம் ஆண்டு முடிவில், தான் நிர்வகித்து வந்த ஆட்சி இராஜ்யபாரத்தைத் தன் வழித்தோன்றலிடம் சேர்த்துவிட்டு ஓய்வு பெற்றிருந்தான் என்றும், ஆயினும், இவன் சீவித்திருந்த அவ்விரண்டாண்டுகளிலும் இவன் பேராலேயே சாஸனங்கள் பயின்றன என்றும் தெரியவருகின்றன. இவ்வாறு இரண்டாண்டுகள் ஓய்வு பெற்றிருந்ததற்கு இவனது வயோதிகமும், இடைவிடாது உழைத்து வந்ததனால் தேகநிலை மனோதிடங்கள் குன்றியதுமே காரணமாக வேண்டும்.

இவ்வாறு மகாவீரனும் பெருவள்ளலுமாய்த் தென்னாடெங்கும் தன் புகழ்க்கதிர் பரப்பிய இக்குலோத்துங்கன், தன் அறுபதாம்வயதில் (அதாவது கி. பி. 1218-ல்) மேலோருலகம் எய்தினான்.



அத்தியாயம் 12

## முடிவுரை

இக் குலோத்துங்கன் தளர்ச்சியுற்று ஒடுங்கியது முதலே துரதிருஷ்டங்கள் சோழ ஏகாதிபத்தியத்தைச் சூழ்ந்துகொண்டன. இந்த அசுபமான வேளையில், இவன் பின்னவனுன மூன்றும் இராஜராஜன் முடி சூடினுன். இவன் முன்னவற்கு என்ன முறையிற் பட்டம் பெற்றவன் என்பது தெளியப்படவில்லை. ஒருகால், தம்பியான சங்கர சோழராசனுக்கு இவன் மகன் போலும். ஏகாதிபத்தியத்தை நிர்வகித்துத் தாங்க வல்ல அறிவும் ஆற்றலும் இவ் விராசராசனுக்கிருந்தன அல்ல. முடிசூடிய இவனது பலவீன நிலைமையும், பெருவீரனுயிருந்தவன் வலிகுன்றி ஒடுங்கியதும், நெடுங் காலம் சோழரால் அடர்ப்புண்டு கிடந்த அரசர்களின் எழுச்சிக்கு ஏற்ற சந்தர்ப்பங்களை அளித்தன. வடக்கிலும் தெற்கிலுமிருந்த அவரெல்லாம் தங்கள் சக்திகளைப் பெருக்கிக்கொண்டு ஆயத்தமானுர்கள். உள்நாட்டுச் சாமந்தர்களான நாட்டுத்தலைவர்கள் சிலரும் இராசத் துரோகிகளாகிச் சூழ்ச்சி செய்தனர். இந்நிலைமையில் பழிக்குப்பழி வாங்கக் காத்திருந்த பாண்டியன் தென் புறத்திலும், வடுகரசர் வடபுறத்திலும், காடவன் முதலிய சிற்றரசர் உள்நாட்டிலும் கலகமும் போரும் விளைக்கவே, சோழ சாம்ராஜ்யம் மூன்றும் இராஜராஜன் கால முதல் நிலைகுலையத் தொடங்கியது. திரிபுவன

வீரனுன சோழ சூரியனும் இப்போது அஸ்தமித்தான். இவன் மறைந்தபின் இராசராசனும் அவன் பின்னேரு மாகிய அரசரின் ஆளுகை, சூரியாஸ்தமனத்துக்குப் பின்எழும் அந்திமாலையின் அரசாட்சியாகவே முடிந்தது. ஆயினும், அம் மாலையின் மயக்கத்தைப் போக்கக்கூடிய பூர்ணசந்திரனது உதயவொளி தெற்கிலிருந்து மாறி, வடக்கே கண்ணுக்குப் புலப்படலாயிற்று. அதுவே விஜயநகர சாம்ராஜ்யம்.

# கும்மந்தான் கான்சாகிபு

நெல்லூர்ச் சுபேதார், ஈசப், யூசப், யூசப்கான், மகம்மது யூசப், கான்சாகிப், கும்மந்தான் என்று பலவேறு பெயர்களால் சுட்டப்பெறும் கும்மந்தான் கான்சாகிப் இராமநாதபுரத்துப் பனையூரில் இந்து வேளாளனாகப் பிறந்து, 'மருதநாயகம்பிள்ளை' என்ற பெயரைக் கொண்டிருந்தவன் என்று செவி வழிச் செய்திகள் கூறுகின்றன. இவன் இளைஞனாய் இருந்தபொழுதே பெற்றோருக்கு அடங்காப் பிள்ளையாய் இருந்தான். வீட்டைவிட்டு ஓடி இஸ்லாமிய சமயத்தைத் தழுவி, 'முகம்மது யூசப்' என்ற பெயர் தாங்கிப் புதுச்சேரிக்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே ஒரு படகோட்டியாகவும் தையல்காரனாகவும் இருந்தான் என்றும், ஓர் ஐரோப்பியனிடம் பணியாளனாய் அமர்ந்தான் என்றும் பெருந் தவறு ஒன்று செய்ததால் அவனிடமிருந்து விரட்டப்பட்டான் என்றும் கதைகள் கூறுகின்றன. இவை எந்த அளவுக்கு மெய்யானவை என்பது விளங்கவில்லை. ஆனால் புதுவையில் இருந்தபோது மார்ச்சந் என்ற ஒருவனோடு நட்புக் கொண்டான் என்பதும், அவன் நட்பே பிற்காலத்தில் அவன் நாசத்துக்குக் காரணமாயிற்று என்றும் கூறப்படும் செய்திகள் நம்பத்தக்கனவே.

கான்சாகிப் புதுவையை விட்டு அகன்றபின் பிரன்டன் என்ற ஐரோப்பியனிடம் வேலைக்கு அமர்ந்தான் என்றும், அவன் துணையால் கல்வியறிவு பெற்றான் என்றும் கூறுவர். கான்சாகிப் ஆங்கிலம், பிரெஞ்சு, போர்ச்சுகீஸ் ஆகிய அந்நிய மொழிகளிலும் தென்னிந்திய மொழிகள் சிலவற்றிலும் நல்ல பழக்கம் பெற்றிருந்தான். ஆனால், இம் மொழியறிவால் அவன் மனப்பண்பாடு எதுவும் அடையவில்லை. கிடைக்கும் குறிப்புக்களை ஆராய்ந்து பார்த்தால் கான்சாகிப் ஆரம்பத்தில் நவாபு படையில் சேர்ந்து, மெல்ல மெல்ல உயர்நிலைகளைப்பெற்று, இறுதியில் ஆங்கிலக் கும்பினியின் சேவகத்தில் ஈடுபட்டான் என்பதும் விளங்கும். கான் சாகிப்பின் மனைவியின் பெயர் மாசா; அவள் போர்ச்சுகீசியப் பெண்.

கும்மந்தான் கான்சாகிபின் இராணுவ வாழ்வு பற்றி நமக்குத் தெரியும் முதல் உண்மை, 'அவன் காவேரிப்பாக்கத்தில் நடந்த போருக்குப் பின்னால் கிளைவின்கீழ் நெல்லூரில் தான் உருவாக்கிய ஒரு சிப்பாய்ப் பட்டாளத்தோடு ஆங்கில இராணுவத்தில் சேவைக்கு அமர்ந்தான்' என்பதே. இந்த நிகழ்ச்சி நடந்த சந்தர்ப்பத்தில் ஐரோப்பாவில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில் அமைதி நிலவியது. ஆனால், இந்தியாவிலோ, ஆங்கிலக் கும்பினிக்கும் பிரஞ்சுக் கும்பினிக்கும் இடையே கடும் போர் நடந்தது. 'கர்நாடகத்தில் யார் கொடிகட்டி ஆள்வது?' என்பதே போருக்குக் காரணம். இதை உள்ளத்துக்குள்ளே வைத்து வெளிக்கு இரு

பொம்மைகளை இருகம்பெனிகளும் கையில் வைத்துக்கொண்டு, 'இதில் எந்தப் பொம்மை ஆர்க்காட்டு நவாப் ஆவது என்பதே எங்கள் போருக்குக் காரணம்' என்று கூறிக்கொண்டன. ஆங்கிலக் கம்பெனியின் கையில் இருந்த பொம்மை முகம்மது அலி; பிரெஞ்சுக் கம்பெனியின் கையில் இருந்த பொம்மை சந்தா சாகிபு.

முகம்மதுஅலி கிருஷ்ணாநதி முதல் கன்னியாகுமரிக் கடல்வரை தம் நாடு என்று வாயால் அளந்து காட்டினர். ஆனல், திருச்சிராப்பள்ளியில் தவிர வேறு ஓரிடத்தில் காலூன்றவும் முடியாத நிலை 1751 இல் அவருக்கு இருந்தது. தலைநகராகிய ஆர்க்காடு உட்பட வட பகுதிகள் யாவும் பிரெஞ்சுக் கும்பெனி ஆட்டுவித்தபடி ஆடும் சந்தாசாகிபுக்கு ஆட்பட்டிருந்தன. நாட்டின் பிற பகுதிகளிலெல்லாம் குட்டி அரசுகள் கோலோச்சின. முகம்மது அலி ஒண்டி ஒடுங்கிக்கிடந்த திருச்சிராப்பள்ளியே பிரஞ்சுப் படைகளால் எந்த நேரத்திலும் கைப்பற்றப்படும் நிலையில் இருந்தது. இந்நிலையில் முகம்மது அலிக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து அவர் பெயரைச் சொல்லி நாடாளும் நிலை பெற்றுப் பிரஞ்சுக் கம்பெனியை ஒழித்துக்கட்ட உறுதிகொண்டது ஆங்கிலக் கும்பினி. எனவே, திருச்சிக்கு வந்த ஆபத்தைத் தவிர்க்கக் கருநாடகத்தின் தலைநகராகிய ஆர்க்காட்டுக்குத் தீவைக்கும் இராஜதந்திர முயற்சியில் ஆங்கிலக் கும்பினி ஈடுபட்டது. அதற்கு ஏற்ற தளபதியையும் கண்டு பிடித்தது. அவர்தாம் இராபர்ட் கிளைவ். ஆங்கிலப் பேரரசை அமைப்பதற்கு

அடிகோலிய இராபர்ட் கிளைவ் அந்தத்திருப்பணியை வெற்றிகரமாக முடிப்பதற்கு மேற்கொண்ட முதல் நடவடிக்கை ஆர்க்காட்டுப் போர்தான். ஆம், ஆர்க்காட்டுப் போரில் அன்று இராபர்ட் கிளைவ் அடைந்த வெற்றியே ஆங்கிலப் பேரரசு கருநாடகத்தில் அமைய நிகழ்த்தப்பெற்ற கால்கோள்விழா. ஆர்க்காட்டு வெற்றிக்குப்பின் திருச்சியைக் காக்கக் கிளைவ் விரைந்தார். அவரை நிழல்போல் தொடர்ந்தான் கான்சாகிப். திருச்சிப்போரில் கிளைவுக்குத் துணைபுரிய வந்த வெள்ளைத் தளபதியின் பெயர் லாரென்ஸ். லாரென்ஸூம் கிளைவும் திருச்சியைக் கைப்பற்ற, சந்தா சாகிபின் பொருட்டு முற்றுகையிட்டிருந்த பிரஞ்சுப் படைகளை எதிர்த்து மேற்கொண்ட நடவடிக்கை ஒவ்வொன்றிலும் கான் சாகிப் தன் கைவரிசைகளைக் காட்டினான். ஆங்கில ஏகாதிபத்தியத்துக்குச் சரியான கையாள் கிடைத்தான் என்று வெள்ளை வர்க்கம் கொள்ளை மகிழ்ச்சி கொண்டது. கிளைவின் நெருங்கிய நண்பனான ஜான் டால்டன்,கான் சாகிப்பைப் புகழ்ந்து புகழ்ந்து மேலிடத்துக்குப் பற்பல கடிதங்கள் எழுதினான்.

1752-ஆம் ஆண்டு ஜூன் மாதம் மூன்றாம் தேதி சந்தா சாகிபு தஞ்சை மன்னன் கையில் சிக்கி அவனாலேயே கொலை செய்யப்பட்டான். ஆங்கிலக் கும்பினி கொடி போட்டு நாட்டு மக்களைக் கொள்ளையடித்தது. அக்கும்பினியால் அரச பதவிபெற்ற நெஞ்சுரமும் நேர்மைத் திறமும் இல்லா ஆர்க்காட்டு நவாபு கும்பினி உருட்டியபடி உருண்டார். இச்சமயத்தில் பிரஞ்சுக் கும்பினி ஆங்கிலக் கும்பினியை

ஒழித்துக் கட்ட இறுதி முயற்சி ஒன்றில் இறங்கியது. அம்முயற்சியை முறியடிக்க ஆங்கிலக் கம்பெனிக்குப் பெருந்துணை புரிந்தவன் கான்சாகிபே. இவ்வுண்மை அச்சமயத்தில் ஆங்கிலப் படைகளுக்குத் தலைமை தாங்கிய லாரென்ஸ் தம் கைப்பட எழுதியுள்ள பின்வரும் வாசகங்களால் விளங்கும்: "கான்சாகிப் சிறந்த தளபதி; நாட்டின் நிலையை நன்கு அறிந்தவன்; உறுதியும் வீரமும் நிறைந்தவன். போராட்டக் காலங்களில் அறிவோடும் அமைதியை இழக்காமலும் காரியங்களைச் சாதிப்பவன். ஒரு கணமும் ஓய்வு கொள்ளாமல் எல்லாப் பணிகளையும் தானே ஏற்றுச் செய்பவன். தன் கூர்த்த மதியால் எங்களுக்கு வேண்டும் உணவுப்பொருள்களைச் சேதமின்றிக் கொண்டுவந்து சேர்த்தவன்." கான்சாகிபைப்பற்றிய இந்தக் குறிப்பைத் தம் பெரிய புத்தகத்தில் மேற்கோளாக எடுத்துக் காட்டும் அறிஞர் ஹில், அதே லாரென்ஸ் கிளைவைப்பற்றி எழுதியுள்ள வாசகத்தையும் எடுத்துக் காட்டி, "கிளைவையும் கான்சாகிபையும் லாரென்ஸ் ஒரே மாதிரி வருணித்துள்ளாரே" என்று வியந்து பாராட்டுகின்றார். அது மட்டுமன்று. அறிஞர் ஹில், கிளைவையும் கான்சாகிபையும் உணர்வோடு ஒப்பிட்டுக் கூறும் வாசகங்கள் கல் நெஞ்சையும் கரைக்கும். இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு அடிக்கல் நாட்டிய இராபர்ட் கிளைவ் கடைசியில் தன் கழுத்தைத் தானே கத்தியால் அறுத்துக் கொண்டு செத்தான். ஏறத்தாழ அதே மாதிரியான முடிவே கான்சாகிப்புக்கும் ஏற்பட்டது. ஏகாதிபத்தியத்துக்கு அடிக்

கல் நாட்டியவனும், அவனுக்குக் கல்லும் கரண்டியும் கொத்தனைப்போல் எடுத்துக் கொடுத்த கான்சாகிபும் ஒரே மாதிரி செத்தார்களே என்று ஏங்குகிறது ஆங்கில எழுத்தாளனின் இருதயம்!

ஒருவாறாக 1755-ஆம் ஆண்டு ஜனவரியோடு பிரஞ்சுப் போர் முடிந்து ஒப்பந்தம் ஏற்பட்டது. கருநாடகத்தில் ஆங்கிலேயர் கையே உயர்ந்தது. அப்பொழுது மேஜர் லாரென்ஸ் சென்னையில் இருந்த கும்பெனியின் ஆட்சிக் குழுவுக்கு ஒரு கடிதம் வரைந்தான். அதன் வாசகம் வருமாறு:—"கனவான்களே, உங்கள் கவனத்துக்கு இன்னெருவரையும் கொண்டுவர அனுமதி வேண்டுகிறேன். அவர் பெயர் முகம்மது யூசுப். அவர் நம் சிப்பாய்களின் தலைவர். அவருடைய கூர்த்த அறிவையும் திறமையையும் மட்டுமன்றி — ஊழியம் செய்வதில் அவருக்குள்ள ஊக்கத்தையும் விழிப்பையும் எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். எதையும் நான் சொல்லுவதற்கு முன் அவரே முன்வந்து செய்ய வேண்டியதைச் செம்மையாகவும் விரைவாகவும் செய்து முடிக்கிறார். பயனுடைய அவ்வீரருக்குத் தாங்கள் ஒரு பாராட்டுக் கடிதமும் ஒரு சிறு பரிசும் அனுப்பினால், அவர் திறமைக்கு வெகுமதி அளிப்பது மட்டுமல்லாமல் அவருக்குப் பேருக்கத்தையும் அது தரும்."

லாரன்சின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு உடனே தீர்மானமும் செய்தது கிழக்கிந்தியக் கும்பினி. அச் செய்தியை லாரன்சுக்கும் தெரிவித்தது.

கிழக்கிந்தியக் கும்பினி லாரன்சுக்கு எழுதிய கடிதத்தில், 'நாங்கள் எப்போதும் திறமையைப் போற்றுவோம். வீரர்களுக்குச் சிறுசிறு வெகுமதிகளைத் தருவதைவிடப் பகிரங்கமான பாராட்டுதல்களை அளிப்பதே சிறந்ததாகும். இக் கண்ணோட்டத்தில் தான் நீங்கள் முகம்மது யூசுப்பைப்பற்றிக் கூறியுள்ள பாராட்டைக் கவனிக்கிறோம். மேலும் கும்பினியின் எல்லாச் சிப்பாய்களுக்கும் 'கமாண்ட'ராக அவரை நியமிக்கவும் முடிவு செய்துள்ளோம். அதே சமயத்தில் அவருக்குத் தங்கப் பதக்கம் அளிக்கவும் விரும்புகிறோம்,' என்று மகிழ்வுடன் தெரிவித்திருந்தது. இக் கடிதம் வந்த ஏழே நாளில் கான்சாகிபுக்குக் 'கமாண்டர்' (கும்மந்தான்) பட்டமும் அதிகாரமும் வழங்கப் பெற்றன. 'எல்லாச் சிப்பாய்களுக்கும் தளபதி' என்ற பொருள் தரும் இந்தப் பட்டத்தை ஆங்கிலக் கும்பினியின் ஊழியத்தில் இருந்த ஒரு சுதேசி அடைந்தது இதுவே முதல் முறை என்று அறிஞர் ஹில் தம் நூலில் ஆராய்ந்து கூறியுள்ளார்.

சந்தா சாகிபு கொலையுண்டதும் முகம்மது அலி ஆர்க்காட்டு நவாபு ஆனார். கருநாடகத்தில் தங்கள் பலத்தை அசைக்க முடியாத வகையில் நிலைநாட்ட ஆசை கொண்ட ஆங்கிலக் கும்பினி, ஆர்க்காட்டு நவாபின் உரிமைகளைப் பாதுகாக்கும் பெயரால் தென் பாண்டிப் பாளையங்களின்மேல் கர்னல் ஹீரானைப் படையெடுக்கும்படி செய்தது. அவனுக்குத் துணையாகக் கான் சாகிபையும் படை திரட்டிச் செல்லப் பணித்தது. கர்னல் ஹீரான் தலைமையில் 1755ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பத்தாம் தேதி

எழுந்த இப்படையெடுப்பே வீரத்தின் விளைநிலமான தென் பாண்டித் திருநாட்டின் மீது வெள்ளையர்கள் துணிந்து மேற்கொண்ட முதல் படையெடுப்பு. திருச்சியை விட்டுப் புறப்பட்ட ஏகாதிபத்தியப்படை மதுரை செல்லும் வழியிலுள்ள மணப்பாறையில் தன்னை எதிர்த்த ஒரு பாளையக்காரனை வாட்டி வதைத்துக் கப்பம் கட்டச் செய்தது. அந்தப் 'புனித'ச் செயலில் கான்சாகிபு தன் கைவரிசையைப் பூரணமாகக் காட்டினன்.

பின்பு கர்னல் ஹீரான் 1755 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் தேதி மதுரை போய்ச் சேர்ந்தான். அவ்வமயம் மதுரையைக் கைப்பற்றியிருந்த மியானு என்பவன் அஞ்சி நடுங்கிக் கோவில்குடிக் கோயிலுக்குள் ஓடி ஒளிந்தான். அவ்வாறே திருநெல்வேலியில் இருந்த முடேமியா, நபிகான் என்ற இருவரும் திருநெல்வேலி மாவட்டத்து மேற்குப் பாளையங்களின் பெருந்தலைவராகிய பூலித்தேவரிடம் சரண் புகுந்தனர். இராமநாதபுரம் மறவர் நாடுகளும் கர்னல் ஹீரான் படையெடுப்புக்குப் பணிந்தன. இப்படி வெற்றிமேல் வெற்றி பெற்ற ஆணவத்தோடு கர்னல் ஹீரான் கோவில்குடிக் கோயிலைத் தாக்கத் துணிந்தான். அந்தத் தாக்குதலுக்குக் கான்சாகிபையே முன்னேடியாக அனுப்பினன். எமன் போலக் கான்சாகிப் வரும் செய்தி கேட்டுக் கோவில் குடியில் ஒளிந்திருந்த மியானே தப்பி ஓடிவிட்டான். பகைவன் ஓடி ஒளிந்த நிலையிலும் பிரிட்டிஷ் தளபதியின் பேய் உள்ளத்தில் பொங்கி எழுந்த கோபத்தீ அடங்கவில்லை. கையில்

தீவட்டிகளை எடுத்துக்கொண்டு கோவில்குடிக் கோயில் கதவுகளுக்குத் தீயிட்டான். வெள்ளைத் தளபதியைச் 'சிரம'ப்படும்படி விட்டுவிட்டு நாம் சும்மா இருப்பதா என்று கான்சாகிபு ராணுவ விதிகளையெல்லாம் மீறிக் கையில் தீவட்டிகளை எடுத்துக்கொண்டு வெள்ளைத் தளபதியுடன் போட்டி போட்டுக் கொண்டு தீ மூட்டினான். என்னே அவனது கொடிய உள்ளம்! கோயில் கதவுகளைக் கொளுத்தியபின் ஏகாதிபத்தியப்படை ஆலயத்துக்குள் இருந்த அழகிய வெண்கலச் சிலைகளையெல்லாம் சூறையாடியது. அதைக்கண்டு கொதித்தெழுந்த அந்தணர்களுக்கு 5,000 ரூபாய் தருவதாகச் சமாதானம் பேசினான் ஹீரான். 'அழிவு வேறு, அவமானம் வேறா?' என்று அந்தணர்கள் ஆத்திரம் கொண்டனர். அதைப்பார்த்த கர்னல் ஹீரான், 'திருச்சிக்குத் திரும்பியதும் நம் பட்டாளத்துக்குப் பணமாக்கிக் கொடுக்க நாம் வைத்திருக்கும் ஓட்டை உடைசல் ஈயம் பித்தளைகளோடு இந்த விக்கிரகங்களையும் போடுங்கள்' என்று தெய்வச் சிலைகளைத் தூக்கி எறிந்தானாம்.

மதுரையில் தங்கள் படைகளை வைத்து விட்டுக் கர்னல் ஹீரானும், அவனுக்குத் துணையாக வந்த ஆர்க்காட்டு நவாபின் அண்ணன் மாபூஸ்கானும் 1755-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25-ஆம் தேதி திருநெல்வேலி போய்ச் சேர்ந்தனர். அங்கிருந்து நாற்பது கல் தொலைவில் இருந்த நிலக்கோட்டையைக் கைப்பற்றச் சாடினர். அந்த முயற்சியில் ஏகாதிபத்தியப்படை செய்த அட்டூழியங்கள் எழுத்தால்

வருணிக்க இயலாதவை. ஆடவர் என்றும் மகளிர் என்றும் படுகிழவர் என்றும் பச்சிளம் பாலகர் என்றும் பாராமல், கண்ணில் கண்ட உயிர்களையெல்லாம் வெட்டி வீழ்த்தி வேட்டையாடினர் வெள்ளை வெறியர்களும் அவர்களோடு வந்த புல்லியர்களும். ஏகாதிபத்தியத்தின் சார்பில் நடத்திய முதற்படையெடுப்பின் கொடுமையின் எல்லையைக் கண்டது இந்த இடந்தான். பிரிட்டிஷ் படையெடுப்பின் வன்மையைக் கண்டு நடுங்கினர் பாளையக்காரர் அனைவரும். அதன் பயனாக அவர்தம் கப்பத்தொகை கர்னல் ஹீரான் காலடியில் குவிந்தது. அச்சமே நிறைந்திருந்த அந்நிலையிலும் அந்நியப் படையெடுப்பை எதிர்க்க இரண்டு உள்ளங்கள் துள்ளின. ஒன்று பாஞ்சைத் தலைவனாகிய பொல்லாப் பாண்டியக் கட்ட பொம்முவின் உள்ளம். மற்றொன்று, மறவர் குல திலகமாகிய பூலித் தேவரின் பேருள்ளம். பொல்லாப் பாண்டிய கட்ட பொம்முவுக்கு ஆசை இருந்தது போல் ஆற்றல் இல்லை. அதனால் கர்னல் ஹீரானுக்குக் கப்பம் கட்டினார்; கருணையின்றித் தமக்கு வேண்டியவர்களையே ஆள் பிணையாகக் கொடுத்துத் தலை வணங்கிப் போனார். ஆனால், நெற்கட்டுஞ் செவ்வல் பாளையத் தலைவராகிய பூலித் தேவரோ, 'ஒரு ரூபாய் கூடக் கப்பம் தர முடியாது. உன்னால் ஆனதைப்பார்!' என்று சொல்லிக் கர்னல் ஹீரானை நிலை குலையச் செய்து, பல நாள் முற்றுகையிட்டும் ஒரு பயனும் காணமல் ஏமாற்றம் உற்ற நரி போல் மதுரைக்கு ஏகச் செய்தார்.

1755-இல் நிகழ்ந்த கர்னல் ஹீரான் படையெடுப்பில் தன் பங்கைத் தயக்கமின்றிச் செய்த கான் சாகிபு, கும்பினிக்கு மேலும் தன் ஆற்றலைக் காட்டி அரும்புகழ் எய்துவதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்தான். அந்நிலையில் தமிழகத்தின் வடக்கே வேலூரில் இருந்த மூர்த்தாஸ் அலி என்பவன், ஆர்க்காட்டு நவாபுக்குப் போட்டி நவாபாக உருவாகி வந்தான். அவனை அடக்க ஆர்க்காட்டு நவாபின் வேண்டுதலின் பேரில் கும்பினி அரசாங்கம் மேற்கொண்ட ராணுவ நடவடிக்கைகள் தோல்வியையே கண்டன. ஆனல், அந்த நடவடிக்கைகளில் பெரும் பங்கு கொண்ட கான்சாகிபின் வீரத்தை நேரில் கண்டவர் இராபர்ட் ஓர்ம். ஒரு சமயம் கான் சாகிபு, தன்னிடம் கும்பினிக்கு லட்சக் கணக்கில் கப்பம் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு பின் ஏமாற்றப் பார்த்ததோடு தன்னைப் பொய்யனாகவும் ஆக்க முனைந்த முசரத் அலியைக் கூர்வாளால் குத்தப் பாய்ந்தான். அவனை அப்பொழுது இராபர்ட் ஓர்மே தடுத்து நிறுத்தினர். இப்படி வெள்ளை வீரருக்காக வாளுருவியமையாலே கான் சாகிபை இராபர்ட் ஓர்ம், 'இந்திய முஸ்லீம்களுள் மிகப் பெரிய வீரன் யூசுப்கான்' என்று புகழ்ந்துள்ளார். தமிழகத்தின் வடவெல்லையின் நிலைமை இதுவாக, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் பூலித்தேவர் இட்டது சட்டமாய் இருந்தது. மாபூஸ் கானைப் பூலித்தேவரும் அவர் தலைமையில் உரிமைக் கொடி உயர்த்திய தென்பாண்டி நாட்டு மேற்றிசைப்

பாளையக்காரர்களும் ஒரு முறைக்கு இருமுறை போரில் முறியடித்தனர்.

இங்கிலையில், 'தென் பாண்டிப் பாளையங்களில் நிலைமையைச் சீர்ப்படுத்தக் கான்சாகிபு ஒருவனல் தான் முடியும்' என்று கும்பினி அரசாங்கம் கருதியது. அதன் விளைவாக 1756-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14-ஆம் தேதி பிறந்த உத்தரவின் வாயிலாக, கான் சாகிபு மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களின் பேரதிகாரியாக (கவர்னராக) நியமனம் பெற்ருன். கான் சாகிபு கையில் இம் மாவட்டங்களின் இராணுவ சிவில் அதிகாரங்கள் யாவும் ஒப்படைக்கப்பட்டன. 'வசூலிக்கும் கப்பத்தொகையை எல்லாம் திருச்சியில் உள்ள காப்டன் காலியாட்டுக்கு அனுப்பவேண்டும்' என்றும் கான்சாகிபுக்கு உத்தரவிடப்பட்டது. கான்சாகிபைப் பேரதிகாரியாக்கிக் கும்பினி அரசாங்கம் பிறப்பித்த இவ்வுத்தரவு ஆர்க்காட்டு நவாபாலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனல், கான் சாகிப் பேரதிகாரியானதால் நாடு ஒன்றும் சீர் பெறவில்லை. பாளையக்காரர்களுக்குக் கான் சாகிபு என்ருல் குலை நடுக்கம். ஆனல், வீரத் தலைவர் பூலித்தேவர் கொடுத்த தைரியத்தை வைத்துக் கொண்டு, நாட்டின் சீர்கேடான நிலைமையையும் பயன்படுத்திக்கொண்டு, பாளையக்காரர்கள் கான் சாகிபுக்குக் 'கண்ணும்பூச்சி' காட்டி வந்தார்கள். கான் சாகிபைக் கண்டால் பதுங்குவதும், அவன் அப்புறம் நகர்ந்தால் பாய்வதுமாக இருந்தனர்.

சுதந்திர உணர்வு படைத்த பாளையக்காரர்கள் தந்த தொல்லை ஒருபுறம் இருக்க, கான்சாகிபுக்கு அவன் நண்பர்களாலேயே பெரிய தலைவலி ஏற்பட்டது. கான்சாகிபு நாளுக்கு நாள் கும்பினியார் கண்களில் முக்கியத்துவம் பெறுவதை உணர்ந்து ஆர்க்காட்டு நவாபு முணுமுணுத்தான். கடனளித் தம்பி 'ஆர்க்காட்டு நவாபு' என்றாலும் அரைக் காசுக்குப் பயனில்லை, என்று அறிந்து மாபூஸ்கான் அவனுக்குத் 'துரோகி'யாகி விட்டான்; மணிக்கு மணி தங்கள் பலத்தைப் பூலித்தேவர் தலைமையில் பெருக்கி வந்த பாளையக்காரர்கள் பக்கம் சாய்ந்தான். இன்னும் இதுபோல் நாட்டில் அப்போது இருந்த குட்டிப் பிசாசுகள் பல ஆடுவதும் அடங்குவதுமாய் இருந்தன. இந்நிலையில் கான் சாகிபு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் எடுத்த காரியத்தைக் கும்பினியார் எண்ணி எண்ணி மகிழ ஆவன புரிந்துவந்தான். முக்கியமாக மதுரைமாநகர் பகைவர் கையில் சிக்கி விடாமல் இருக்கக் கும்பினியின் சார்பில் அவன் செய்த முயற்சிகள் கொஞ்சம் அல்ல. ஆனால், இவ்வளவு செய்தும் தென்பாண்டிப் பாளையப்பட்டுகளின் நிலைமை ஆர்க்காட்டு நவாபும் கும்பினி அரசாங்கமும் விரும்பியது போலக் கட்டுக்குள் அடங்குவதாய் இல்லை. 1755 அக்டோபர் 8-ஆம் தேதி தளபதி காலியாட்டின் அழைப்பின் பேரில் திருச்சி சேர்ந்தான் கான் சாகிபு. அவன் மதுரையைவிட்டு அகன்ற உடனே நாட்டின் நிலைமைகள் வியக்கத்தக்க அளவிற் சடுதியில் மாறின. பாளையங்கோட்டை தவிரத் தென்பாண்டி நாட்டின்

பிற பகுதிகள் யாவும் சுதந்சிர உணர்வு படைத்த பாளையக்காரர் வசம் ஆயின. அவர்களுக்குத் தலைமை தாங்கினர் பூலித்தேவர். அப்பாளையக்காரர்களுக்குக் கைப்பாவை ஆனான் மாபூஸ்கான். ஆம்; தம்பி ஆங்கிலேயர் கையில்; அண்ணன் பாளையக்காரர் கையில். இப்படி நடந்தது நவாபு தர்பார்!

தென்பாண்டிப் பாளையக்காரர்கள், கர்னல் ஹீரான் படையெடுப்பைக் கண்டது முதற் கொண்டே மைசூர் மாவீரன் ஹைதரோடு தொடர்பு கொண்டிருந்தனர். அத் தொடர்பு பயன் தரத் தொடங்கிற்று. ஹைதர் தமிழகத்தின் மீது படை செலுத்தி வந்தான். திண்டுக்கல்லைத் தன் வசமாக்கிக் கொண்ட அவன், சோழ வந்தானையும் பிடித்தான். செய்தியறிந்து திருச்சியிலிருந்து காற்றாய்ப் பறந்து வந்தான் கான் சாகிபு. ஹைதருக்கும் கான் சாகிபுக்கும் 'நத்தம்' என்ற இடத்தில் கடும்போர் நடந்தது. அப்போரில் ஹைதரை முறியடித்துத் திண்டுக்கல்லுக்குத் தலைதெறிக்க ஓடச் செய்தான் கான்சாகிபு. கும்மந்தான் நோக்கத்தில் நமக்கு வெறுப்பு இருப்பினும் ஹைதரையும் தோற்கடிக்கும் ஆற்றல் பெற்றிருந்த அத்தமிழ் மகனின் ஆற்றலை நாம் போற்றாமல் இருக்க முடியாது. ஹைதர் அலியைத் தோல்வியுறச் செய்த வெற்றி வேகத்தில் கான் சாகிபு திருநெல்வேலி போய்ச் சேர்ந்தான். 1757 நவம்பர் இறுதிக்குள் மாபூஸ்கானைப் பாளையக்காரரிடம் அகதியாய் வாழும்படி செய்தான். இப்பெரும் சாதனைக்குப் பின்பு மதுரைக்குத் திரும்பிய

O-18.K N60

கான்சாகிபு தனக்கு முன்னே அவ்வூரில் ஆட்சி புரிந்த பார்க்கத்துல்லா என்பவனால் ஹிந்து ஆலயங்களுக்கு ஏற்பட்டிருந்த சேதங்கள் பாதகங்களை யெல்லாம் நீக்கி, எல்லார் அன்பையும் பெற்றான்.

இங்கிலேயில் பிரஞ்சுக்காரர்களால் மறுபடியும் ஏற்பட்ட ஆபத்தினின்றும் கருநாடகத்தைக் காப்பாற்ற அவனை ஆங்கிலக் கும்பினி திருச்சிக்குப் பெருத்த படையைச் சேர்த்துக்கொண்டு வருமாறு கட்டளையிட்டது. பிரஞ்சுத் தளபதி லாலி 1757 மே மாதம் கடலூரையும், ஜூன் மாதம் ஆங்கிலேயரின் செயிண்ட் டேவிட் கோட்டையையும் கைப்பற்றினன். இவ்வாறு ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட ஆபத்தைப் போக்க, ஜூன் 16-ஆம் தேதி கான்சாகிபு இரண்டாயிரம் சிப்பாய்களுடன் திருச்சி வந்து சேர்ந்தான். திருச்சி வந்த தேதி முதல் கான் சாகிபு ஆங்கிலக் கும்பினியின் அழிவுக்காக-அயராது-உழைத்தான். ஏறத்தாழக் காலாண்டுக் காலம் படாத பாடு பட்டு ஆங்கிலக் கும்பினி வெற்றிக் கொடி உயர்த்தத் தன் வாழ்வை அர்ப்பணமாக்கினமைக்காகக் கும்பினியாரிடமிருந்து வைரம் பதித்த மோதிரம் உட்பட பரிசுகள் பல பெற்றான். 1759-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3-ஆம் தேதி அவன் செலவுகளுக்காகக் கும்பினி மூன்று லட்சு ரூபாய் தந்தது. அவன் சொந்த முறையில் அனுபவிக்க முந்நூறு பகோடா நாணயங்கள் பெறுமான பட்டு வெல்வெட் ஆடைகளையும் ஏராளமான படைக்கருவிகளையும் பரிசாக அளித்தது.

113495

இந்நிகழ்ச்சிகளை அடுத்துக் கான்சாகிபு தென் பாண்டிப் பாளையங்களை அடக்கிக் கப்பம் வசூலிக்கு மாறு மறுபடியும் கும்பினி அரசாங்கத்தால் 1759-ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டான். மதுரை திருநெல்வேலி மாவட்டங்களுக்கு மறுமுறையும் சர்வாதிகாரியான கான் சாகிபு செய்த முதல் வேலை மதுரைக்கு அருகில் இருந்த ஒரு பாளையக்காரனைக் கடுமையாகத் தாக்கி அவனையும் அவனுக்காகப் போரிட்ட ஐந்நூறு கள்ளர்களையும் ஒரே நாளில் தூக்கிலிட்டுக் கொன்றது தான். தன் பகைவர் நெஞ்சில் பெருந் திகிலை மூட்டக் கான்சாகிபு திட்டமிட்டுச் செய்த பெருஞ்செயலே அது. வீரம் நிறைந்த கள்ளர்களை அடக்கி ஒடுக்கிய பின்? கான்சாகிபு சுதந்திர உள்ளம் கொண்ட பாளையக்காரர்களை அடக்குவதில் கண்ணுங் கருத்துமாய் ஈடுபட்டான். எழுநூறு சிப்பாய்களும் மூந்நூறு குதிரை வீரர்களும் கொண்ட ஒரு பெரும் படையைக் கான்சாகிபு பூலித்தேவர் வசமாகியிருந்த பாளையங் கோட்டையைக் கைப்பற்றவும், மேற்கத்திய பாளையக்காரரான பூலித் தேவருடன் எட்டயபுரம் பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரர்கள் சேர்ந்து விடாதபடி பார்த்துக் கொள்ளவும் அனுப்பி வைத்தான். 1759-ஆம் ஆண்டு ஜூலை 2-ஆம் தேதி தானே 6400 சிப்பாய்களையும் 600 குதிரை வீரர்களையும் கொண்ட ஒரு பெரும்படையுடன் சுதந்திர வீரர்களை வாட்டி வதைக்கும் நோக்கத்துடன் ஏகாதிபத்தியக் கொடுங்கோலர்கள் சார்பில் புறப்பட்டான். முதலில், பூலித்தேவரும் வடகரைப் பாளையக்காரரும் கைப்

பற்றியிருந்த கொல்லங்கொண்டானைப் பிடித்தான். பின்னர் மூன்றே நாளில் கோலார்பட்டியைத் தன் வசமாக்கிக்கொண்டு திருநெல்வேலி போய்ச் சேர்ந்தான்.

இங்கேதான், பூலித்தேவரிடம் சிறைப்பட்டு இருந்த மாபூஸ்கான், 'கருநாடகத்தை விட்டே ஓடிப் போகிறேன்; வளமாக வாழ வழி காட்டினால் போதும்' என்று தன் பிறவிப் புத்தியைக் காட்டி எழுதிய கடிதத்தைக் கண்டு பூரித்தான் கான்சாகிபு. மாபூஸ்கான் வேண்டுகோளுக்கும் அவன் இசைந் தான். அடுத்து ஊற்றுமலை, சுரண்டை ஆகிய இடங்களையும் அடிமைப்படுத்தினான். இதற்கு இடை யில் வடகரைமேல் வன்மம் கொண்டும், கான் சாகிப்புக்குக் கைகொடுக்கும் வகையிலும் திருவாங் கூர் மன்னன் 10,000 பேர் கொண்ட படையோடு வடகரைப் பாளையத்தைத் தாக்கினான். அப் பெரும் படையின் சீற்றத்துக்கு ஆற்றாது வடகரை யார் பூலித்தேவரிடம் சரண்புகுந்தார். சிறிது காலத்துக்கு முன்பே சுரண்டையில் கான்சாகிபின் படைத்தலைவர்களுள் ஒருவனைத் தோற்கடித்து வெற்றி கண்டிருந்த பூலித்தேவர் கும்பினியின் ஆதரவால் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டுவரும் கான்சாகிபின் கொடிய பலம் கண்டு பெருமூச் செறிந்தார். எனினும் கலங்காது, கொள்கையைக் காற்றில் பறக்க விடாது, திருவாங்கூராரை வட கரையாரோடு ஒத்துப்போகும்படி வேண்டினார். ஆனால், திருவாங்கூராரோ, 'வடகரையைத் தாக் கியதன் வாயிலாகக் கான்சாகிபிடம் நல்ல பெயர்

வாங்கிக் களக்காட்டுச் சீமையைப் பரிசாகப் பெறுவதே எங்கள் நோக்கம்,' என்பதைச் சடுதியில் புலப்படுத்திவிட்டனர். கான்சாகிபும் கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தது போல் களக்காட்டுச் சீமையைத் திருவாங்கூராருக்குத் தாரைவார்த்துத் தந்தான். அதன் பயனாகத் திருவாங்கூராரின் படைப் பலத்தையும், தூத்துக்குடி, அஞ்சங்கோ முதலிய இடங்களில் இருந்துவந்த பீரங்கிகளையும் துணையாகக்கொண்டு 1759 டிசம்பர் 4 ஆம் தேதி பூலித்தேவரின் பலம் பொருந்திய கோட்டைகளில் ஒன்றாகிய வாசுதேவநல்லூரைக் கடுமையாகத் தாக்கினான் கான்சாகிபு.

சாவைக் கண்டு சிரிக்கும் சுதரந்திர வீரர்களைக் கொண்ட வாசுதேவநல்லூர்க் கோட்டை தாக்கப் பெற்றது பற்றிக் கான்சாகிபின் சிறப்புக்களை ஒன்றுவிடாமல் ஆராய்ந்து சொல்வதையே ஆராய்ச்சி அறிவின் பயனைப் பெற்றதாகக் கருதி 320 பக்கங்களில் நூல் எழுதியுள்ள அறிஞர் ஹில் சொல்வதைப் படிப்போம்:— 'கான்சாகிபிடம் பெரும்படை இருந்தாலும் அந்த நகரின் அமைப்பு, அவன் முகாமை வீரமறவர்கள் அடுத்தடுத்துத் தாக்குவதற்கு ஏற்றாற்போல் அமைந்திருந்தது. மேலும் கோட்டைக்குள் இருந்தவர்கள் அரும் பெரும் வீரர்கள். கான்சாகிபிடம் இருந்த ஒரு பெரும் பீரங்கியும் அது ஏற்றப்பட்ட மறுநாளே வெடித்து விட்டது. என்றாலும் கோட்டையைத் தாக்கக் கான்சாகிபு முடிவு செய்தான். அவன்

தன் ஆட்களில் 200 பேரை இழந்தான். திருவாங்கூராரும் ஏறத்தாழ இதே அளவு இழந்தனர். பகைவர்களுக்கு (பூலித்தேவருக்கு) இதைவிடச் சேதம் அதிகம். என்றாலும் கான்சாகிபின் தாக்குதலை முறியடித்தனர். போதிய போர்த்தளவாடங்களும் இல்லாமையால் கான்சாகிபு முற்றுகையைக் கைவிட்டான். 1760 ஜனவரி 28 ஆம் தேதி கான்சாகிபு தோல்வியுற்ற செய்தி சென்னைக்கு எட்டியது. திருவாங்கூரார் தங்கள் நாட்டுக்குத் திரும்பினர்; கான்சாகிபு திருநெல்வேலிக்குத் திரும்பினான். வாசுதேவநல்லூர்த் தோல்வி ஒன்றுதான் கான்காகிபு கண்ட தோல்வி.

வாசுதேவநல்லூரில் அடைந்த அவமானம் கான்சாகிபின் வாழ்வைத் திருத்தவில்லை. பழி வாங்கும் நாளை எண்ணிக் கறுவவே செய்தது. இதற்கிடையில் 1760 டிசம்பரில் மட்டும் திருச்சியில் இருந்த காப்டன் ஜோஸப் ஸ்மித்துக்குக் கும்பினிக்குக் கட்ட வேண்டிய கப்பத்தொகை ரூபாய் 2 லட்சத்தை அனுப்பினான். இதே சமயத்தில் மாபூஸ்கானும் பூலித்தேவர் பிடியினின்றும் நழுவி ஒடிப் புதுக்கோட்டைத் தொண்டைமான் நிழலில் இளைப்பாறி நவாபிடம் மன்னிப்புப் பெற்று உயிர் பிழைத்தான். கான்சாகிபு 1761 ஆம் ஆண்டுவரை போராடிப் போராடிப் பூலித் தேவரின் கோட்டைகளைப் பிடித்தான் என்று சில குறிப்புக்கள் கூறுகின்றன. இவ்வாறு இராணுவ வாழ்வு தொடங்கிய நாள் தொட்டு விடுதலை வீரர்களைத் தாக்கியும் அழித்தும், கோழைகளை வளர்த்தும் வாழ்வித்தும் நாசவேலைகளை நடத்தி

வந்த கான்சாகிபு, அதுவரை தான் விதைத்த விதை களையெல்லாம் தானே அறுவடை செய்ய ஆரம் பித்தான்.

ஆரம்ப முதல் கான்சாகிபு கும்பினியின் நல் லெண்ணத்தில் பெருநிலை பெற்றிருப்பது 'கடன் காரன்' ஆர்க்காட்டு நவாபுக்குப் பிடிக்கவில்லை. மேலும், தென் பாண்டிப் பாளையங்களை யெல்லாம் அழித்து ஒழித்து ஹைதரையும் கலக்கும் அளவுக்கு கான் சாகிபு வலிமை பெற்று வருவதும், தன் திறமை மிக்க ஆட்சியால் இந்துக்களும் வெள்ளைய ரும் போற்றப் புகழ் பெற்று வருவதும் வருங் காலத்தை மோப்பம் பிடிப்பதில் வல்ல ஆர்க்காட்டு நவாபுக்கு அணுவளவும் பிடிக்கவில்லை. கான் சாகி பைப் பற்றிக் கணத்துக்குக் கணம் கும்பினியிடம் புகார்கள் படித்த வண்ணம் இருந்தான். கரைப் பார் கரைத்தால் கல்லும் கரையும் அன்றோ? கும் பினியாருக்குச் சந்தேகமும் சஞ்சலமும் தோன்றின.

ஆர்க்காட்டு நவாபு தொடக்க முதல் தனக்குப் பகையாய் இருக்கும் உண்மையை உணர உணரக் கான்சாகிபுக்கு ஆத்திரம் பொங்கிற்று. கும்பினி தன்னால் பெற்ற நன்மைகளை மறந்து விட்டு நவாபின் பேச்சைக் கேட்பது அவன் ஆத்திரத்தை அதிகப் படுத்தியது. ஆத்திரம் பொங்கப் பொங்க அவன் அறிவு எவ்வெவ்வாறோ பாய்ந்து பதறியது. தனக்கு விரோதமாகக் கும்பினிக்குச் செய்தி சொல்பவர்கள் ஆர்க்காட்டு நவாபும் திருவாங்கூர் மன்னனும் திருச்சியில் இருந்த ஆங்கில அதிகாரிகளுமே

என அறிந்தான். பற்களை நற நற வென்று கடித்தான். என்ன பயன்? அத்தனை நாளும் பாம்புக்கு அல்லவோ பால் வார்த்தான் கான் சாகிபு! எந்தத் திருவாங்கூர் மன்னனுக்குக் களக் காட்டைக் காட்டிப் பூலித் தேவரையும் அவர் தோழர்களையும் தாக்கச் செய்தானோ அதே திருவாங்கூர் மன்னன் கான்சாகிபு ஆர்க்காட்டு நவாபின் பிடியிலிருந்தும் கும்பினியின் பிடியிலிருந் தும் விடுதலை பெற ஆசை கொண்டிருக்கும் செய்தி யைக் கண்ணும் மூக்கும் வைத்துத் கும்பினியின் காதுகளில் ஓதினான். செய்தி அறிந்த கான்சாகிபு பெரும்படை கொண்டு திருவாங்கூரை மோதப் புறப்பட்டான்; கும்பினி தடுத்தது. ஆனால் உத்தர வைப் புறக்கணித்துக் கான்சாகிபு போர்க்கோலம் பூண்டான். அவ்வமயம் மார்ச்சங் என்ற பிரெஞ்சுத் தளபதி கான்சாகிபுக்குத் துணையாக வந்து சேர்ந் தான்; அதனை அறிந்து நடுங்கிப் போனான் திருவாங் கூர் மன்னன். கொள்கை குறிக்கோள் எதுவும் இல்லாத அவன் கான்சாகிபு தந்த பரிசுகளைப் பெற்றுக்கொண்டு சமாதானப் பத்திரத்தில் கை யெழுத்திட்டு விட்டு நச்சரவெனத் தன் அரண்மனைக் குள் நுழைந்து கொண்டான்.

கான்சாகிபின் கண்கள் 'யாரெல்லாம் ஆர்க் காட்டு நவாபின் – கும்பெனியின்–பகைவர்கள்?'' என்று சுழன்று சுழன்று நாலு திசைகளிலும் பார்த்தன. அவன் படைத்திருந்த சுடுகாடே அவ னைப் பார்த்துச் சிரித்தது; அழைத்தது. கான்சாகி

பின் சதித்திட்டங்கள் நாளுக்கு நாள் உரம் பெற்றன. அவை ஒன்று விடாமல் ஆங்கிலக் கும்பினிக்கும் தெரிந்தன. கான்சாகிபின் பிரெஞ்சுத்தோழன் தளபதி மார்ச்சந் ஆங்கிலக் கும்பினிக் கொடியைக் கொளுத்திவிட்டுப் பிரெஞ்சுக் கொடியைக் கான்சாகிபின் அனுமதி பெற்றே கோட்டைகளின் மீது உயர்த்தியது முதற்கொண்டு எல்லாச் செய்திகளும் சென்னைக்கு எட்டின; கும்பினி அரசாங்கத்தின் கண்கள் சிவந்தன; எட்டுத் திசைகளிலும் இருந்த ஏகாதிபத்திய ஏஜெண்டுகளுக்கு எச்சரிக்கைச் செய்திகள் பறந்தன. எந்த விநாடியிலும் கான்சாகிபைத் தாக்கி முறியடிக்கக் கும்பினிப் படைகள் தயாராயின. இதற்கிடையில் கான்சாகிபைச் சென்னைக்கு வந்து சமாதானங்களைக் கூறவும் சந்தேகங்களை நீக்கவும் கும்பினி அரசாங்கம் அழைத்தது. ஒவ்வொரு முறையும் நொண்டிச் சமாதானங்கள் கூறி, வரமுடியாது என்றான் கான்சாகிப். அதைக் கேட்ட வெள்ளை வேந்தர்களின் வயிறு பற்றி எரிந்தது. ஏறத்தாழ இரண்டாண்டு காலமாகக் கான்சாகிபு தன்னைத் தென்பாண்டிப் பாளையங்களின் சக்கரவர்த்தியாக்கிக் கொள்ளச்செய்த சதிகள் யாவும் பல வாயில்களாலும் தெரிந்து விட்டன. எனவே, 'எல்லாக் கடமைகளிலும் பெருங்கடமை கான் சாகிபைக் கொல்லும் கடமையே' என்று கும்பினி வர்க்கம் குமுறியது.

கும்பினி அரசாங்கத்துக்கு 1763 மார்ச் 24-ஆம் தேதி வெள்ளைத் தளபதி லாரன்சிடமிருந்து கிடைத்த கடிதம் வருமாறு: 'கான் சாகிபு விசுவா

சத்தைக் கைவிட்டு விட்டான். உங்கள் உத்தரவு களை எல்லாம் உதறி எறிந்து விட்டான். தன்னைச் சுதந்திரப் புருஷனுகப் பிரகடனம் செய்து விட்டான். இந்த மனிதனின் மாமேதையையும் பேராசையையும் கருதும்போதும் தன்னிடமுள்ள பெரும் பட்டாளத்தை ஒரு பெரும்போருக்கு இவன் தயார் செய்வதைப் பார்க்கும்போதும் உடனடியாக இவனுடைய ஆக்கிரமிப்புகளை ஒழிப்பது மிகவும் அவசியமாகிறது. மேலும், இவன் நாளும் தரங்கம்பாடி, நாகப்பட்டினத்தில் உள்ள பிரஞ்சுக்காரர்களிட மிருந்தும், மைசூர் ஹைதர் அலியிடமிருந்தும் உதவிகள் பெற்ற வண்ணம் இருக்கிறுன். இவனை இப்படியே விட்டால் நம்மால் அடக்க முடியாத அளவுக்குப் பெரும் படைப்பலம் பெற்றவனுக ஆகி விடுவான். அதன் விளைவாக ஆர்க்காட்டு நவாபு நமக்குத் தரவேண்டிய கடன்களைத் தராமற் போவதோடு கம்பெனி மேலும் பெருத்த செலவுக்கு இரையாக நேரிடும்; கான்சாகிபை அழிக்கக் குறைந்தது 900 ஐரோப்பியர்களும் 5000 கம்பெனிச் சிப்பாய்களும், 2000 குதிரைப்படை வீரர்களும் ஏராளமான பாளையக்காரர் உதவியும் இன்ன பிறவும் தேவை.''

இவ்வாறு லாரென்ஸ் எழுதிய கடிதத்தாலும், கான்சாகிபைப் பற்றிய வேறு பல உண்மைகளை உணர்ந்தமையாலும் தீர ஆலோசித்துக் கும்பினி அரசாங்கம் கான்சாகிபைக் கசக்கி எறிய முடிவு செய்தது. வெள்ளைத் தளபதிகளாகிய பிரஸ்டன், லாரென்ஸ் முதலியவர்களைப் பெரும் படையுடன் கான்சாகிபை அழிக்கப் புறப்படுமாறு கட்டளையிட்

டது. அதுமட்டும் அன்று; கான்சாகிபை உயி ரோடு பிடித்து இன்ன செய்யவேண்டும் என்றும் கட்டளையிட்டது. கிழக்கிந்தியக் கம்பெனி அதுபற்றி லாரென்சுக்கு எழுதிய கடிதம் வருமாறு: 'ஆர்க் காட்டு நவாபு கான்சாகிபை அரசியல் கைதியாக உயிருடன் வைத்திருக்க விரும்புவானுனல் அது எவ்வளவு ஆபத்தானது என்பதை எண்ணி அஞ்சு கிறேம். ஆனல், கான்சாகிபைப் பார்த்தவுடன் அவனது பட்டாளமெல்லாம் பார்க்கும் வகையில் கண்ணுக்குத் தெரியும் முதல் மரத்தில் அவனைத் தூக்கிலிட்டுக் கொன்றால் அதுவே எங்களுக்குத் திருப்தி அளிக்கும்,'

இந்த உத்தரவோடு ஆரம்பமாகியது கான் சாகிபைத் தாக்கும்படலம். ஏறத்தாழ ஓர் ஆண் டும் மூன்று மாதங்களும் அவனைப் பிடிக்க ஓயாது முயன்றது கும்பினி அரசாங்கம்; பெருத்த பட்டா ளத்துடன் கான் சாகிபு கைப்பற்றியிருந்த மதுரை மாநகரைத் தாக்கியும் முற்றுகையிட்டும் அழிக்க முயன்றது. தாக்குதலின் கடுமை பயங்கரமாய் இருந்தது. எண்ணற்ற உயிர்ச்சேதங்கள் ஏற் பட்ட போதிலும் பிரிட்டிஷ் படைகளால் கோட் டையை நெருங்கக் கூட முடியவில்லை. கான்சாகி பின் படைகளுக்குத் தலைமை தாங்கிய பிரெஞ்சுத் தளபதியாகிய மார்ச்சந் மிகுந்த திறமையோடு போராடினன். கான்சாகிபும் அவனுடைய வீரர் களும் உயிரைத் துச்சமாக மதித்து உறுதி குலையா மல்சமர் புரிந்தனர். அதன் விளைவாகப் பெருத்த

O-;8,K
N60

# முன்னுரை

தமிழக வீரர்களுள் தனிச் சிறப்புக்கள் பல வாய்க்கப் பெற்ற பெருவீரன் கும்மந்தான் கான்சாகிபு. இலக்கியத்திலும் வரலாற்றிலும் இடம்பெற்ற அம் மாவீரனின் கதையை 'கலைமகளு'க்குக் காணிக்கையாக 1959-ஆம் ஆண்டு மே, ஜூன் திங்கள்களில் படைத்தேன். அப் படையலே இப்போது நூல்வடிவில் வெளிவருகிறது. அளவால் சிறியதே ஆயினும், முதன்முதலாகத் தமிழில் கும்மந்தான் கான்சாகிபைப் பற்றி வரலாற்று ஆராய்ச்சி நோக்குடன் வெளிவரும் நூல் என்னும் அருமைப்பாடு உடையது.

'கலைமகள்' கருணைக்கும் தமிழ் மக்களின் ஆதரவுக்கும் நன்றி செலுத்தி இந்நூலை வெளியிடுகிறேன்.

இந்நூல் அச்சாகும் காலத்துத் திருத்தங்கள் செய்துதவிய ஆசிரியர்—வித்துவான்—உயர்திரு—சி. அருணை வடிவேலு முதலியார் அவர்கட்கு எனது உளங் கனிந்த நன்றி உரித்து.

வாழ்க தமிழகம் !

ந. சஞ்சீவி

113485

★

இளமையிலேயே இறைவனடி எய்திவிட்ட

எனதருமைப் பள்ளித் தோழன்

**க. முகம்மதலியின்**

(புதுக்கோட்டைத் திவானாய் விளங்கிய

திரு. P. கலிபுல்லா அவர்கள் திருமகன்)

## அன்பு நினைவுக்கு

★

கொடிய வதந்திகளைக் கோட்டை முழுவதும் பரப்பி ஞன். 'நம்மையெல்லாம் ஆங்கிலச் சிப்பாய்களின் கைகளில் நாசமாகும்படி விட்டுவிட்டுக் கான்சாகிபு மட்டும் தப்பி ஓடிவிடப் பார்க்கிருன்' என்ற செய்தியைப் பரப்பிஞன்.

அதைக் கேள்வியுற்ற வீரர்களின் நெஞ்சம் கொதித்தது. இயற்கையாகவேபட்டினியால்கொதித்திருந்த அவர்களை மேலும் கொதிப்படையச் செய்வதில் வெற்றி கண்ட மார்ச்சந், 1764 அக்டோபர் திங்கள் 13 ஆம் நாள் மாலை 5 மணிக்குக் கான்சாகிபு மனம் உடைந்து போன நிலையில், மண்டியிட்டு ஆண்டவனைத் தொழுதுகொண்டிருக்கும் வேளையில் தேர்ந்தெடுத்த சிப்பாய்களின் உதவியுடன் அவன் இருக்கும் தனியிடம் சென்று சுற்றிச் சூழ்ந்து கீழே தள்ளி, அவன் தலையில் கட்டியிருந்த தலைப் பாகையைக் கொண்டே அவன் கைகால்களை எல்லாம் கட்டிப்போட்டான், ஆங்கில நாடோடிகளுக்குச் சற்றும் இளைக்காத பிரெஞ்சு நாடோடி. சதி வெற்றி பெற்றுவிட்டது என்பதை அறிந்த கான்சாகிபு, கொடியோனின் உள்நோக்கம் என்ன என்பதைக் கணப்போதில் உணர்ந்து கொண்டு தன்னைச்சுற்றியிருந்தோரைப் பார்த்து, 'பெரியோர்களே, காசுக்கும் வாழ்வுக்கும் ஆசைப்படும் நீங்கள் என்னை இங்கேயே உங்கள் கை வாள்களாலேயே கண்டதுண்டமாக வெட்டி எறிந்து விடுங்கள்; என் பகைவர்களாகிய ஆர்க்காட்டு நவாபிடமோ ஆங்கிலச் சிப்பாய்களிடமோ ஒப்படைத்து விடாதீர்கள்' என்று கைகூப்பி வேண்டிஞன்.

பிரஞ்சுத் தளபதி மார்ச்சந் சதிகாரர்களோடு சேர்ந்து கான்சாகிபைக் கொண்டுபோய் ஓர் அறையில் அடைத்தான். அதிகாரிகள் செய்தது கோட்டை யெங்கும் காட்டுத்தீப்போல் பரவிவிட்டது. கான்சாகிபின் மனைவியான பறங்கிப் பெண் மார்ச்சந்துக்கு ஒரு கடிதம் எழுதி, 'ஐயனே, நாட்டையும் கோட்டையும் அதில் இருக்கும் நானுவிதச் செல்வங்களையும் உனக்கே தந்துவிடுறேன்; என் நாயகனை மட்டும் விட்டுவிடு' என்று கண்ணீர் விட்டுக் கதறி அழுதாள். ஆனால், மார்ச்சந் கோரச் சிரிப்புச் சிரித்தான். அந்தப் பிரெஞ்சுத் தளபதியின் சதிகாரச் செயலைக் கேட்ட ஒரு முதலி, தாயை இழந்த சேய்போல் துடித்துப் புலம்பிக் கோட்டையெல்லாம் சுற்றி வந்து கூவினன். அவனைச் சுற்றி நூற்றுக்கணக்கான வீரர்கள், 'எங்கே எங்கள் கான்சாகிபு? எங்கே அந்த மார்ச்சந்?' என்று கேட்டவண்ணம் வாளையுருவி வலம் வந்தனர். நிலைமைய உணர்ந்த மார்ச்சந் முதலியின் மார்பில் குறிபார்த்துச் சுட்டுக் கீழே வீழ்த்தினன். தலைவன் சாயக்கண்டதும் ஆத்திரம் அடைந்த வீரர்கள் செய்வதறியாது திகைத்து ஓடி மறைந்தனர். மார்ச்சந் வெற்றிச் சிரிப்புச் சிரித்தான். தன் கையாட்களை அனுப்பி அதே அக்டோபர் 13-ஆம் தேதி நள்ளிரவில் ஆர்க்காட்டு நவாபிடமும் ஆங்கில நாடோடிகளிடமும் உறவு பேசினன்; ஒப்பந்தங்களைக் கூறினன். அஞ்சா நெஞ்சன் கான்சாகிபை, கைகால்களையும் அசைக்கமுடியாத நிலையில் பந்துபோல் சுருட்டிக் கட்டிப் பகைவர்களின்

# சாவித்திரி பாடம்

கடவுள் வணக்கம்.

அந்தமாம் பாரதத்தில் ஆரண்ய பர்வத்தில்
சுந்தரமாம் பாண்டவர்க்குத் தூயமுனிவர் உரைத்தார்
சத்தியவான் தேவி சாவித்திரி நற்கதையை
பக்தியுடன் நான் பாட பார்வதியே முன்னடவும்
தொப்பைக் கணபதியே தும்பிக்கை யுள்ளவரே
விக்கினங்கள் வாராதே விநாயகரே முன்னடவும்
பச்சரிசிவெல்லம் தேங்காய் பழத்துடனே
அப்பமுடன் எள்ளுருண்டை அதிரஸமும் மோதகமும்
பக்தியுடன் நான் படைப்பேன் பாலகணேசருக்கு
அன்புடனே வந்து அருள் செய்ய வேணுமய்யா.

---

## கதை வரலாறு.

வனத்திலந்தப் பாண்டவர்கள் வேட்டைக்குப் போயிருந் [தாள்
பர்ணசாலை தனிலே பாஞ்சாலி தானிருந்தாள்
சைத்திரதன் அங்குவந்து திரௌபதியை தேரில்வைத்து
கொண்டு சென்றுபோம்போது கூடிவந்து பாண்டவர்கள்
பஞ்சவர்கள் கோபமதாய் படைபண்ணித் தான் ஜயித்து
ஐங்குடுமிவைத்து அவனைத்துறத்திவிட்டாள்
சைத்திரதன் போனபின்பு சலித்துமந்தப் பாண்டவர்கள்
மிகவும் மனதுநொந்து வீரர் அங்கு வீற்றிருந்தாள்
தருமபுத்ரராஜா சலித்தே மனந்தளர்ந்து
தலைகுனிந்து சோகித்து தருமரங்கு வீற்றிருந்தார்.

## பாண்டவர்களிடம் மார்க்கண்டேயர் எழுந்தருளுதல்.

வந்தங்கு தோன்றிநின்றார் மார்க்கண்ட மாமுனியும்
எழுந்து நின்றுபாண்டவர்கள் எதிர்கொண்டடி பணிந்து
ஆஸனத்தில் வைத்து அருகிருந்து தருமர்சொல்வர்
கேளுமையா மார்க்கண்டரே எங்களுட கிலேசத்தை
எங்களைப்போல் கிலேசித்தோர் உண்டோ உலகதனில்
(என்)தம்பியர்போல் சோகித்தோர் உண்டோ தரணிதனில்
எந்தனுடசோகம் இருக்கட்டு மென்றாலும்
(என்)தம்பிமார்சோகம் சகித்திருந்தோ மானாலும்
எங்களுட திரௌபதியாள் எந்திழையாள் பட்ட துக்கம்
(என்)ஹிருதயம் பிளந்து எரிகிறது கண்டீரோ [நின்றாள்
(நாங்கள்)தாஸாளாய்ப்போனவுடன் தன்மானங்காத்து
எங்களையும் மீட்டுவிட்டாள் எந்திழையாள் திரௌபதியும்
இவளைப்போல் பதிவிரதை இவ்வுலகிற் கண்டதுண்டோ[டர்
(என்று)யுதிஷ்டிரர்உரைக்கலுமே எதுரைப்பார் மார்க்கண்
பதிவிரதை யானவர்கள் பிரபஞ்சத்தில் ரொம்ப உண்டு
உம்முடைய பத்தினியாள் உத்தமிதான் ஆனாலும்
இன்னம் பதிவிரதைகள் ஏற்றமுள்ளார் சற்கதையை [டர்.
இன்பமுடன் கேளுமென்று எடுத்துரைத்தார் மார்க்கண்

---

## மார்க்கண்டேயர் நளராஜன் சரிதமுரைத்தல்.

வீரசேனன் குமாரன் வீரியவான் நளனொருக்கால்
சூதுகளாடி ராஜ்யம் தோற்று மனந்தளர்ந்து
சொக்கட்டான் ஆட்டத்தால் தோற்றுத் தரணிவிட்டு
தமயந்தி தன்னுடனே தயங்கி வனத்தில் வந்து
ஏகவஸ்திரந்தரித்து இரண்டாகவே கிழித்து
நடுக்காட்டில் தன்னுடைய நாயகியைத் தான்பிரிந்து

கார்க்கோடகன் கடித்துக் கருகியவர் மேனியெல்லாம்
(அவர்)தேகம் தெரியாதே தேசாந்தரம் வசித்தார்

தமயந்தி நாயகரைத்தேடி வனந்திரிந்து
பதிவிரதை அக்கினியால் வேடனை நீருக்கி

நாயகரைக் காணுதே ராஜ்ஜியத்தில் வந்திருந்து
(தன்)பதிவிரதா தர்மத்தால் பர்த்தாவைத் தானடைந்தாள்

இன்னம் புதுமையுண்டு ஏற்றகுலபாண்டவர்காள்
இன்னேரிதிகாஸம் எடுத்துரைப்பேன் பஞ்சவர்காள்.

---

## மார்க்கண்டேயர் ஸ்ரீராமமூர்த்தி சரிதமுரைத்தல்.

தசரதபுத்திரனுர் ஸ்ரீராமச்சந்திரனுர்
கைகேயி வாக்கியத்தால் கானகத்திலே அலைந்து

வைதேகியைப் பிரிந்து மானையவர் பின்தொடர்ந்தார்
வாளரக்கன் வந்து மைதலியைக் கொண்டு செல்ல

திரும்பிவந்த ராகவரும் சீதையைக் காணுதே
சுக்ரீவன் என்னுமந்தத் தோழனுடன் கூடவந்து

அலைகடல் தன்னில் அணைபோட்டு லங்கை வந்து
தசமுகனைச் சம்ஹரித்து சீதை சிறை மீட்க

(அவள்)பதிவிரதா தருமத்தால் அக்கினிப் பிரவேசம் செய்ய
அதிக சுகிர்தத்துடனே அயோத்திதனை யாண்டிருந்தார்

இன்னம் புதுமையுண்டு ஏற்றகுல பாண்டவர்காள்
இன்னமொரு பதிவிரதை இதிகாசம் நானுரைப்பேன்.

---

## மார்க்கண்டேயர் சாவித்திரி சரிதமுரைத்தல்.

மத்திரதேசம் மகிமையுள்ள ராஜ்ஜியத்தில்
அசுவபதி யென்னும் அவருமொரு ராஜாவாம்

தருமம் தவருதே தரணி தன்னை ஆண்டிருந்தார்
புண்ணியங்கள் செய்து புவனங்கள் ஆண்டிருந்தார்

புத்திரனில்லை என்று புகழுடைய ராஜரப்போ
சந்தானமில்லை என்று தாபம் மிகவடைந்தார்

நாரதரங்கு மப்போ நலமாய் எழுந்தருள
கண்டுமந்த ராஜாவும் கைகூப்பியே பணிந்து

மைந்தரில்லாக் குறையைச் சொல்லி மனந்தளர்ந்தார்
கேட்டுமந்த நாரதரும் கிருபையுடனே ஏதுசொல்வார்

சாவித்திரி தேவியை நீர் சிந்தை தன்னிலே நினைந்து
ஓமங்கள் செய்து மிக நேமத்துடனிருந்தால்

(அந்த) தேவி கிருபையால் ஜயமுண்டு என்று சொல்லி
அக்கினியில் ஓமங்கள் பண்ணிவைத்தார் நாரதரும்

அந்தணர்க்கும் தேவர்கட்கும் அவிர்ப்பாகமுங்கொடுத்து
வந்தனங்கள் செய்து மகாராஜர் வீற்றிருந்தார்

அக்கினிகுண்டத்தின் நடுவிலொரு தேவிவந்தாள்
அறிவீரோ பண்டவர்காள் அவளுடைய ரூபத்தை

அதிகாலை தன்னில் பிரம்மமாய்த் தானிருப்பாள்
மத்தியான்ன காலத்தில் ஜகத் ஜோதியாயிருப்பாள்

சந்தியா காலத்தில் சந்திரகாந்த பட்டுடுத்தி
அனுஷ்டானஞ் செய்திருக்கும் அன்புடைய பக்தர்களின்

மகத்துக்கள் தங்களுட மனதில் விளங்கிடுவாள்
இப்படிப்பட்ட ஏற்றமுள்ள தேவியப்போ

மூர்த்திகரித்து அரசன் முன்னே விளங்கிநின்றாள்
கண்டுமந்த ராஜாவும் கையை உயரவெடுத்து

பக்தியுடன் துதித்துப் பாதங்களில் வணங்கி
(அம்மா) நீர் ஆத்மஸ்வரூபமோ அற்புத விக்ரஹமோ

பிரம்மஸ்வரூபமோ பேதமற்ற வஸ்துவோ
திக்குப்பால்கரோ திருமூர்த்தி நீர் தாமோ

நீர்யாரோ எனக்கு அறிய உரையுமென்றார்
கேட்டுமந்த சாவித்திரி கிருபையுடனே ஏதுரைப்பள்

நான்முகனார் அனுப்பநானும் வந்தேன் ராஜாவே
நான்முகர் சொன்னபடி நானுமிப்போ சொல்லுகிறேன்

புத்திரரும் இப்போதில்லை புகழுடைய ராஜாவே
இனிமேல் உண்டாகுமையா இப்பொழுது தானுமில்லை
இந்தத் தபஸுக்கு எற்ற பலனாக இப்போ
(உம்ம) கடுந்தபஸுக்கேற்ற கன்னிகையாய் நான் வரு
கன்னிகையாய் வந்து அவதரிப்போம் இப்பொழுதே[வேன்
என்று சொல்லி சாவித்திரி அந்தர்தானமடைந்தாள்

---

## சாவித்ரியம்மன் அவதாரம்.

அந்தர்த்தானமாய்அவள் மறைந்த பிற்பாடு
பட்டமஹிஷியராம் பாராளும் தேவியிடம்
மாளவி என்னும் மஹாராஜன் தேவியரின்
திருவயிற்றில் வந்து பிறந்தாளே தேவியரும்
வந்து பிறந்த அம்மன் வடிவழகை நீர்கேளும்
சந்திரன்போல் முகமும் தாமரைபூப்போல் நிறமும்
சிவந்த அதரமும் செம்பவழ வாயழகும்
வெள்ளை நிறமும் மேனியுட கட்டழகும்
கறுத்தகுழற் சுருளும் கண்மலரும் காதழகும்
பாதவடிவழகும் பாங்குடைய கைத்தலமும்
கோடிசூர்யர் வந்துகூடியுதித்தாப்போல்
சித்திரித்த பொம்மைபோல் தேவி பிறந்தாளே
அச்வபதி கேட்டு அதிக சந்தோஷமுடன்
சித்திரமாம் பொய்கைதனில் சடுதியாய் வந்திறங்கி
தீர்த்தங்களாடி செந்நெற்கள் கொண்டுவந்து
விரைதானஞ் செய்து வேதியர்கள் எல்லார்க்கும்
ஆயிரம் பால்பசுக்கள் அந்தணர்க்குத் தான் கொடுத்து
பூதானஞ் செய்தார் பூசுராளெல்லவர்க்கும்
அரண்மனைகள் வீதிகளும் அலங்காரம் செய்துவைத்து
ஆஸனத்தில் வீற்றிருந்தார் அச்வபதி ராஜாவும்

முத்திழைத்த கோவிலுக்கு மூப்பி என்னும் தாஸியவள்
பட்டு மடிப்பின்மேல் பாலகியைக் கொண்டுவந்து
அச்வபதி ராஜா அடிமடியில் வைத்திடவே
(ராஜா) உச்சிமுகந்து உள்ளங்கால் கண்ணிலொற்றி
பொன்னுரைத்து நாவிலிட்டார் புத்திரிக்கு அப்பொழுது
ஜாதகர்மம் நாமகர்மம் செய்துமந்த ராஜாவும்
கடுந்தவஸால் வந்திட்ட கட்டழகி தேவியரை
சாவித்திரி யம்மனென்று சந்தோஷமாயழைத்தார்
மாதாமனமகிழ வளர்ந்தாளே மங்கைநல்லாள்
தாயார்மகிழத் தவிழ்ந்து விளையாடினள்
தத்தடியிட்டு நடந்தாளே தையலரும்
சித்தாடைகட்டித் தெருவில் விளையாடிவந்தாள்
சுக்லபக்ஷச் சந்திரன்போல் சுந்தரியும் தான் வளர்ந்தாள்
மகாலக்ஷ்மியைப்போல வடிவழகாய் இருந்தாள்
இவளுடைய ரூபத்தைக் கண்டனந்தம் ராஜாக்கள்
(நமக்கு) கிட்டாது என்றெண்ணிக்கேட்காதிருந்தார்கள்
மாதாபிதாவும் அம்மன்வடிவழகைக் கண்டுகந்து
(இவள்) அழகுக்கிசைந்த பர்த்தா யாரைவரித்திடுவோம்
என்று எண்ணிராஜாவும் ஏக்கம் பெரிதாக
சாவித்திரியம்மனுடன் தானே தெடுத்துரைப்பார்
(இந்த) உலகமெல்லாந்திரிந்தேன் உன்னழகிற்கேற்றபர்த்தா
காணேமே எங்கும் என் கன்னிகையே நீயுமிப்போ
சதுரங்கசேனையுடன் தோழிமாரோடும் சென்று
(நீ) தானே வரித்துவா தார்குழலே என்று சொன்னர்
ஏதுபிதாவே இப்படியும் சொல்வீரோ
ஏற்குமோ தர்மமிது எங்கேயானுலுமுண்டோ
தந்தையன்றோ கன்னிகையைத் தானம் கொடுத்திடுவர்
தந்தையரும் இல்லாட்டால் சகோதரரும் செய்திடுவார்
சகோதரரும் இல்லாட்டால் தாயார் நடத்திவைப்பாள்
தாயாருமில்லாட்டால் தானே வரித்திடுவாள்

என்றுசொல்ல சாவித்திரி எதுசொல்வர் ராஜாவும்
உலகமெல்லாந் திரிந்தேன் உன் அழகுக்கேற்ற பர்த்தா
வையகமெல்லாந் திரிந்தேன் வடிவுக்கிசைந்த பர்த்தா
(உன்) அழகுக்கிசைந்த பர்த்தா காணேனே ஆரணங்கே
(நீ) தானே வரித்துவா தார்குழலே குற்றமில்லை
(என்று) அச்வபதிராஜா அவரும் விடையளிக்க.

---

## சாவித்திரியம்மன் கணவரை வரித்தல்.

அப்பொழுது சாவித்திரி அதிகலஜ்ஜை தன்னுடனே
மாதாவிடையளிக்க மனதொத்த தோழியுடன்
அநேகஞ் சேனையுடன் அந்தப்புரங் கடந்து
தேரின்மேல் ஏறி தேசமெல்லாம் ஆராய்ந்து
தேசமெல்லாங் காணமல் திகைத்து வனத்தில் வந்தாள்
(ஒரு) நந்தவனந்தனிலே ஞாயிறு உதித்தாப்போல்
நல்லமலரெடுக்கும் நாயகரைக் கண்டவுடன்
புஷ்பம் பறிக்கும் புண்ணியரைக் கண்டவுடன்
இவர்தாம் நமக்கேற்ற இஷ்டபர்த்தா என்றறிந்து
மனதுக்கிசைந்த பர்த்தா வரித்தே திரும்பி வந்தாள்
அப்பொழுது நாரதரும் அங்கே எழுந்தருளி
அசுவபதி கொலுவில் அவருமங்கு வீற்றிருந்தார்
நாரதர் பிதாவையும் நன்ருய் நமஸ்கரித்தாள்
நாரதர் பார்த்து ராஜனுடன் ஏதுரைப்பர்
கன்னிகைக்குத் தக்க கணவரை நீர் தேடாமல்
(நீர்) தாமிருக்க ராஜாவே (அவள்)தானே வரித்து வந்தாள்
(என்று)மங்கையந்த சாவித்திரிமதிமுகத்தைத் தான்பார்த்து
(அம்மாநீ) யாரைவரித்துவந்தாய் அன்னமே சொல்லு
(மென்ருர்
சாலுவதேசாதிபதி தன்பதியைத் தானிழந்து
காட்டினில் வந்து கடுந்தபசு செய்திருக்கும்

யவசேன ராஜருட ஏற்றமுள்ள புத்திரனர்
அவரை வரித்து வந்தேன் என்ருளே ஆரணங்கு

அப்பொழுது நாரதரும் அதிக கிலேசத்துடனே
இவள் மனதைத் தானறிய எண்ணியே நாரதரும்

கையைப் பிசைந்து கலங்கி யவர் சொல்லலுற்ருர்
(நீ) அறியாயோ பெண்ணே அவருடைய காரியத்தை

அதிககுண முள்ளவர்தாம் அந்தக்கரணசுத்தியுண்டு
சகலகுண சம்பன்னர் தருமிஷ்டர் தான் அவரும்

ஆனலொரு தோஷம் இருக்கிறதுகாணய் நீ
அந்தவொரு தோஷத்தை இப்பொழுதே சொல்லுகிறேன்

இன்றுமுதல் ஒருவருஷம் முன்னூற்றறுபதாநாள்
மத்தியான காலம் மரணம் வருமென்று சொன்னர்

மரணமவர்க் கென்று மகாத்மாவுஞ் சொன்னவுடன்
அசுவபதி கேட்டு அதிகம் மனங்கலங்கி

இதென்ன விசாரமென்று ஏக்கம் பிடித்தவரும்
சாவித்திரி யம்மா நீசந்தோஷ பார்த்தாவை

வேறே வரித்திடுவாய் மெல்லியரே என்றுரைக்க
வேறே வரியுமென்க விவேகமுள்ள கன்னிகையும்

பதிவிரதை யாவார்கள் பர்த்தா வரித்தபின்பு
பலபுருஷர் தேடுவரோ பதிவிரதா பங்கமன்ருே

அழகற்ருனனுலும் அதிமூடனனுலும்
குணமற்ருனனுலும் குரூபியேயானுலும்

அந்தமில்லானனுலும் ஆயுளில்லானனுலும்
அவரே எனக்கிசைந்த இஷ்டபர்த்தா என்றுரைத்தாள்

மனதுக்கிசைந்த பர்த்தா வரித்துவந்தேன் எந்தனையும்
கன்னிகாதானம் கொடுங்களென்ருள் கன்னிகையும்
நாரதரப்போ நன்மையுடன் ஏது சொல்வர்
(அவள்)தாலி பலத்தால் தருமராஜரையுந் தான்ஜயிப்பள்

(அவள்)மனதுதிடத்தாலே மிருத்யுவையும் ஜயிப்பள்
அசுவபதி ராஜாவே (உம்ம) அலங்காரக் கன்னிகையை

சத்தியவானுக்குத் தானங் கொடுங்களென்றார்
என்று சொல்லி நாரதரும் யதாஸ்தானம் போயடைந்தார்.

---

## சாவித்திரியம்மன் திருக்கல்யாணம்

சாவித்திரியம்மனுடன் தாயாருந் தோழிகளும்
பட்டமகிஷியரும் பல்லக்கில் ஏறிவந்தாள்
சதுரங்க சேனையுடன் தானுமந்த ராஜாவும்
தேரின் மேலேறிவந்தார் தீரமுள்ள அச்வபதி
பொன்னுடனே பூஷணமும் பெட்டகத்திற் றனெடுத்து
பலவிதமாம் பண்டங்கள் கொண்டுவந்தார் வண்டிகளில்
யானை குதிரைகள்மேற் கொண்டுவந்தாரங்கமணி
தானை வெள்ளஞ் சேனையுடன் தானும் வந்தார் அச்வபதி
நாகஸ்வரமுழங்க நான்கு வகைசேனையுடன்
வந்தாரே அச்வபதி வளமான காடுதன்னில்
இரண்டு கண்ணுமில்லாத யவசேன ராஜரங்கே
காட்டிலிருந்து கடுந்தபஸ்பண்ணுகிறார்
அச்வபதி ராஜா அவருடைய கிட்டவந்து
ஆலிங்கனம் செய்து அதிக சந்தோஷமுடன்
யவசேன ராஜருடன் ஏகாசனத்திருந்தார்
இஷ்டரைக்கண்டு யவசேனர் தான் மகிழ்ந்து
வந்தீரோ அச்வபதி வளமான காடுதன்னில்
காரணங்களுண்டோ உரையீர் கடுகவென்றார்
காரணங்கள் சொல்லுகிறேன் கற்பகமே நீர்கேளும்
(உம்) அம்ருத குமாரனுக்கு (என்) அழகுடைய கன்னி
கன்னிகாதானம் தருவேன் நான் என்றுரைத்தார் [கையை
அப்போ யவசேனர் அதிக சந்தோஷமுடன்
உமக்கும் நமக்குமிது உத்தம சப்பந்தம்
எப்போது கூடுமென்று இருந்தேனே ராஜாவே

(நான்) ராஜ்யப் பிரஷ்டனுய் நாடு விட்டுக் காட்டில்வந்து
காட்டினில் வந்தோம் கண்கள் தெரியவில்லை
காய் கிழங்குதான் புஜித்து கடுந்தபஸு பண்ணுகிறோம்
(இந்த) அருந்தபஸு செய்யஅறிவாளோ ஆரணங்கு
யவசேனர் தானுரைக்க ஏற்றமுள்ள அச்வபதி
அருந்தபஸு செய்யுமுங்கட் காதரவாய்த் தானிருப்பாள்
கலங்காதிருமென்று கலியாணம் நிச்சயித்து
காடுதிருத்திப் பவழக்கால் தான் நிறுத்தி
மேலே மறைப்பதற்கு மேற்கட்டுக் கடடியவாள்
மேல்கட்டுக் கட்டிவிடுதிப்பூக்கள் தொடுத்து
தோரணங்கள் கட்டி சுந்தரமாம் பந்தலிலே
தூண்களுக்கிடையிலே தூண்டா விளக்கேத்தி
அச்வபதிராஜாவின் ஆக்கினையுந்தப்பாதே
கலியாணமண்டபமும் காக்ஷியுடனே அமைத்தாள்
அச்வபதிராஜாவின் அலங்காரக் கன்னிகையை
சந்தனுதித் தைலமிட்டு தாதியர் நீராட்டிவைத்தார்
பச்சைமஞ்சள் பூசி பைங்கிளிக்கு நீராட்டி
அற்புதமாம் சுந்தரிக்கு அலங்காரஞ் செய்தார்கள் [டாள்
பரந்தொரு நெற்றியிலே பொட்டு மிட்டாள் மையுமிட்
கொத்ஸுவைத்துப் பின்னி குழல்வாரிப் பூமுடித்து
குப்பியிற் பன்னீரும் குளிர்ந்திருக்கும் சந்தணமும்
சிற்றிடையாள் சாவித்திரி தேகத்திற்பூசிவிட்டாள்
வசிஷ்டரிஷியுடனே வாமதேவர் காசிபரும்
வனத்திலேயுள்ள மற்றும் ரிஷிகளுடன்
முற்றின தேங்காய் முந்நூறு கொண்டுவந்து
விக்கின விநாயகருக்கு வேண்டித் தேங்காயுடைத்து
மைகுழலாள் சாவித்திரி மாதாபிதாவுடனே
வீற்றிருந்தாள் மணையில் விருதங்கள் செய்யவென்றே
வசிஷ்டமகரிஷியும் மந்திரங்கள் உச்சரிக்க
பாலிகையுந்தான் தெளித்து பாலம்ருதந்தான் சொரிந்தாள்

அந்தரங்க தோழியர்கள் அம்மனண்டையிற் சூழ்ந்து
மங்களங்கள்பாடி மான்கவரி வீசினார்கள்:

பொற்றாமரை நிறத்தாள் பூர்ணசந்திரன்போல் முகத்தாள்
கட்டழகி சாவித்திரி கைதனிலே காப்பிசைத்தார்

தமோமணி மார்பன் சத்தியவான் அப்பொழுது
விக்கினங்களில்லாதே விரதங்கள் செய்துமவன்

சாந்தியுடன் ஓமம் சத்தியவான் செய்துமப்போ
பரதேசிக் கோலம் புறப்பட்டார் பாவனையாய்

அச்வபதிராஜா அருகினிலே கிட்டவந்து
மஞ்சள் மணித்தேங்காய் வாழ்த்தியவர் கைக்கொடுத்து

கன்னிகையை நான் தருவேன் என்றே அழைத்துவந்தார்
ஆனைமே லேறி அலங்காரக் காக்ஷியுடன்

மாலையிட்டு சாவித்திரி மணவாளர் தன்னுடனே
பூவால் அலங்கரித்த பொன்னூஞ்சல் ஆடிநின்றாள்

பொன்னூஞ்சல் தானாடப் பெண்கொடிமார் தான்பாட
வாத்தியங்கள் தான் முழங்க மங்கையர்கள் தான்பாட

நிறைநாழி முத்தெடுத்து நெய்விளக்குத் தானெடுத்து
மங்களஹாரத்தி எடுத்தார்கள் மங்கையர்கள்

வேதகோஷங்களுடன் விருதும் பலமுழங்க
விரைக்கோட்டைமேலே வீற்றிருந்தார் ஸத்தியவான்

அச்வபதி ராஜாவும் அவருடைய தேவியுமாய்
சத்தியவான் கால்களைப் பொற்தட்டின் மீதுவைத்து

பாலினாற் காலலம்பி பட்டாலே தான் துடைத்து [தார்
கன்னிகையைக் கைப்பிடித்து சத்தியவான் கைக்கொடுத்

கன்னிகாதானம் காக்ஷியுடன் செய்தபின்பு
மறையோர்கள் கைக்கொடுத்து மங்கிலியம் வாழ்த்து

மங்கிலியம் தொட்டு மறையோர்கள் எல்லவரும் [மென்றார்
வாழ்வீர் வளமையுடன் மைந்தர்களைப் பெற்றிடுவீர்

அம்மா உன்ஐயரைப்போல் அவனிமுழுதும் ஆள்வீர்
(உன்)தாயைப்போல் மாமியைப்போல்(சௌ)பாக்ய
வதியாயிருப்பீர்

நிற்பீர் நிலைத்திடுவீர் நீடூழிவாழ்ந்திடுவீர்
தாலி முடுக்கினுல் சந்தோஷமாயிருப்பீர்

மங்கிலியம் வாழத்தி மறையோர்கள் தான் கொடுத்தாள்
பட்டெடுத்து ஓதிக்கொடுத்தாளே பாவையர்க்கு

குலநாயகிக்குக் கொசவாமுந் தாழவைத்து
வலமாய் இடைநெருங்க வைத்து மடிசாரிசைத்தாள்

மங்கைநல்லாள் சாவித்திரி மடிதனிலே வீற்றிருக்க
விரைக்கோட்டைமேலே வீற்றிருந்தார் அச்வபதி

மறையோர்கள் வாழ்த்த மங்கள வாத்தியம்முழங்க
மங்கலிய தாரணமுங் செய்தார் மனோகரமாய்

சாவித்திரி தேவியுடன் சத்தியவான் வீற்றிருந்து
காராவின் நெய் சொரிந்து காக்ஷி ஓமங்கள் செய்து

அம்மி மிதித்து வந்தாள் அருந்ததியைப் பார்த்து வந்தாள்
ஆசீர்வாதங்கள் செய்து அனுக்கிரகித்தார் மாமுனிகள்

கடல்போல் முழங்கு மந்தக் கலியாணப் பந்தலினில்
எடுத்துமொரு ஜாடிபணம் ஏற்றமுடனே வழங்கி

அன்னமுடன் பாயஸமும் அபூர்வபணியாரங்களும்
திருப்தியுடன் புஜித்தாள் தேவர்முதல் யாவர்களும்

புசித்து எழுந்துமவாள் பொடிதேய்த்துக் கையலம்பி
போஜன தாம்பூலம் புண்ணியருந்தான் கொடுத்தார்

நாலுநாள் ஹோமமுடன் கலியாணம் ஆனபின்பு
அச்வபதி ராஜாவும் அவருடைய தேவியரும்

புத்திரியைத் தானணைத்து புத்தி சொல்லி முத்தமிட்டு
மத்திரதேசம்போனுர் மஹாராஜர் தேவியுடன்.

---

## சாவித்திரியம்மன் கௌரி நோன்பு செய்தல்.

சாவித்திரியம்மன் சலியா மனதுடையாள்
காயத்திரியம்மன் கடுந்தபஸு செய்யலுற்ருள்
நாரதர் சொன்னதொரு நாளைக்குறித்து வைத்து
அவர் சொன்னகால அளவை மனதில் வைத்து
ஆபரணம் பூணும் அபேட்சைகளுமில்லாமல்
மரவுரி கிருஷ்ணஜினமும் மங்கையருந்தான் தரித்து
மாமிமாமன் சிச்ருஷை மகிமையுடன் செய்து வந்தாள்
பர்த்தாவின் பணிவிடைகள் பக்தியுடன் பண்ணிவந்தாள்
கௌரியை பூஜித்துக் கிளிமொழியாள் நோன்பிருந்தாள்
உபவாஸ மகாவிரதம் உத்தமியுந் தானிருந்தாள்
அமாவாசை பௌர்ணமியும் அஷ்டமி சதுர்த்தசியும்
மாஸம் முதல் தேதியிலும் மஹாதேவியைப் பூஜித்தாள்
பஞ்சமி பர்வ தினத்தில் பார்வதியைப் பூஜைசெய்தாள்
பார்வதி தேவியை நோக்கித் தவமிருந்தாள் பாவையரும்
மூன்று நாள் மௌனவிரதம் மிருது குழலாள் தானிருந்து
உபவாஸமாகவிருந்தாளே உத்தமியாள்
பால்குன மாதம் முதல் நாள் பாவைநல்லாள் சாவித்திரி
நாரதர் வாக்கியத்தை நன்ருகவே உணர்ந்து
மஹரிஷி சொன்னதொரு நாளுமிதுவாகுமென்று
அதிகாலையில் எழுந்து அம்பிகையை பூஜை செய்து
பக்திபெரிதாக பரதேவியைச் சிந்தை செய்து
பாரணைகள் பண்ணுதே பத்தினியுந் தானிருந்தாள்
மாமனூர் மாமியார் மங்கைதனை நோக்கி யவாள்
பாரணைகள் செய்யுமம்மா பைங்கிளியே என்று சொன்னாள்
(அம்மா) ஆருஞ்சாமத்தில் அஸ்திமித்த பிற்பாடு
போஜனங்கள் பண்ணுகிறேன் புண்ணியர்காள் என்று
[ரைத்தாள்

தபஸில் திடமுடைய சத்தியவான் அப்பொழுது
காட்டிற்குப்போகவென்றும் காய்கிழங்கு வெட்டவென் [றும்
கோடாலி தானெடுத்துத் தோள்தனிலே வைத்துமவன்
விறகொடித்து நானும் வரேன் என்று வழிநடந்தான்
வேகமுடன் நடக்க மெல்லியருங் கிட்டவந்து
நானும்வரேன் காட்டுக்கு நாயகரே என்று சொன்னுள்
மாதா பிதாவின் அனுமதியைக்கேட்டு வந்தால்
கூடவா என்னுடனே கொம்பனையே என்று சொன்னூர்
இருமிங்கே என்று சொல்லி ஏந்திழையாள் சாவித்திரி
ஓடி ஒரு நொடியில் ஓட்டமுடன் கிட்டவந்து
மாதாபிதாவை வணங்கியே மங்கையரும்
காட்டுக்குப் போய் வருவேன் கணவருடனுகை [ருள்
அனுப்பிவைக்க வேண்டுமென்று அன்புடனே கேட்டுநின்
(அம்மா)நீ இத்தனைநாள்தன்னில் கேட்டதில்லை இந்தவரம்
பட்டினியாக இருக்கின்ருய் பைந்தொடியே
போய்வாரும் சடுதியிலே என்றுரைத்தார் புண்ணியர்கள்

---

### சாவித்திரியம்மன் கணவருடன் காட்டுக்கு ஏகுதல்.

ஓடிநடந்து உவந்து த்தமியாள் சாவித்திரி
பர்த்தாவின் பாதம் பணிந்து நமஸ்கரித்து
பின்னே நடந்தாளே பொற்கொடியாள் சாவித்திரி
சத்தியவான் தன்னுடைய தேவியரின் கைப்பிடித்து
இந்தக் காடுதன்னைப்பாராய் கமலப் பூநாயகியே
விருக்ஷஞ் செடி கொடிகள் பாராய் நீ மெல்லியரே
புஷ்பங்கள் பூத்து சொரிவதைப்பார் பொற்கொடியே
மானுங் கலையும் விளையாடுவதைப் நீ பாராய்
தாமரை ஓடைகளைப் பாராய் நீ தார்குழலே
என்று சொல்லி சத்தியவான் இங்குமங்கும் காட்டிவர

(அவள்) அதுவொன்றும் பாராதே அந்தஃகரணம் நடுங்கி
நாரதர் சொன்னதொரு நாழிகையை எண்ணிவராள்
தவசீலனுகுமந்த சத்தியவானப் பொழுது
காட்டினிலுள்ள கனி கிழங்கு தான் பறித்து
பழங்கள் பறித்துமவர் தழையினல் கட்டிவைத்து
கண்டகக் கோடாலியினல் கட்டை பிளக்கலுற்ருர்.

102121

---

எமதர்மராஜன் சத்தியவான் ஜீவனைக் கொண்டு போதல்.

கட்டை பிளக்கும்போது கண்கள் கலங்கியவர்
தலையுங் கிருகிருக்கத் தன் வசங்களன்றியுமே
தலையு மிகவலிக்கத் தன்னுடம்பும் வேர்த்துவிட
நித்திரையுஞ்செய்ப வருகுதிப்போ நேரிழையே
என்று வந்து விழுந்தான் மலைபோல சத்தியவான்
மடியில் விழுந்தவுடன் மங்கையவள் கலங்கி
உள்ளம்பறக்க அம்மன் உடம்பு நடுநடுங்க
ஆம்பல்மலர்க்கண்ணுட்கு அடிவயிறு தானெறிய
நெஞ்சம் கலங்கியம்மன் நீலவிழி நீர்சொரிய
மஹாதேவியைத் துதித்து மரத்தடியில் வீற்றிருந்தாள்
அங்கோர் மஹாபுருஷன் அதிரூபந்தன்னுடனே
கிரீடமும் குண்டலமும் கேசவனுர்போல்நிறமும்
கறுத்ததொருமேகம்போல் காளமுகில்போல் வடிவும்
பீதாம்பரமும் பெருத்தமுத்து மாலைகளும்
சிவந்தபுஷ்ப மாலை பூண்ட சுந்தரனுர் பேரொளியும்
கண்டுமந்த சாவித்திரி கணவரைக் கீழேவைத்து
பிரதக்ஷிணமாகவந்து பணிந்து நமஸ்கரித்தாள்
தீர்க்கசுமங்கலியாயிரு வென்ருர் அப்பொழுதே
இதுவே சகுனமென்று எடுத்து முடிந்தாள் தலைப்பில்
எமராஜரை வணங்கி எந்திழையும் கேட்கலுற்ருள்

ஆத்மஸ்வரூபமோ அற்புதமாம் விக்கிரகமோ
பிரமஸ்வரூபமோ பேதமற்ற வஸ்துவோ
என் ஹ்ருதயந்தனில் வசிக்கும் எமராஜர் நீர் தாமோ
நீர் யாரென்றெனக்கு அறியவுரையு மென்றாள்
சத்துக்கள் கண்ணுக்கு நான் சந்தோஷமாயிருப்பேன்
அசத்துக்கள் கண்ணுக்கு அதிகோரமாயிருப்பேன்
பாபிகள் கண்ணுக்கு நான் பயங்கரமாயிருப்பேன்
பாபி அல்லார் கண்ணுக்கு பிரம்மவடிவாயிருப்பேன்
எமதர்மராஜ ரென்பார் என்னுடைய நாமதேயம்
சுகிர்தத்தினு னுனக்குத்தோன்றினேன் நானுமிப்போ
(என்று) பாசக்கயிரெடுத்து பறபறென்னத்தான் பூட்டி
ஒரு இசிப்பாய்த்தான் இசித்து உத்தமரைக் கொண்டு
[சென்றார்

---

## சாவித்திரியம்மன் எமதர்மர் பின்சேன்று வரம் பெறுதல்.

சாவித்திரியம்மன் சரேலென்று தானெழுந்து
பக்ஷி மிருகந்தீண்டாது பர்த்தாவை ரக்ஷபண்ணி
தழைந்தமரம் வளைத்து தழையொடித்து மேல்மூடி
கிளையின் இலை ப்றித்துக் கணவரை மூடிவைத்து
பின்னே நடந்தாளே பொற்கொடியும் தருமருடன்
பின்னால் நடக்கலுமே பெருமாள் திரும்பி நின்று
என் பெண்ணே சாவித்திரி என்னைத் தொடருகிறாய்
அதிதூரம் வழிநடந்தால் அதிக இளைப்பாகும்
போவாய்நீ ஊர்நோக்கி பொற்கொடியே என்றுசொன்னா
(ஐயா) பர்த்தாவுடன் நடந்தால் பார இளைப்புமுண்டோ
ஒரு இளைப்பு மில்லை ஐயா ஓடிவருவேன் என்றாள்
ஓடிவருவேனென்க உத்தமருங் கேட்டுகந்து

(அம்மா) உன்வாக்கு நலத்தழகும் மங்கள ஸ்தோத்திரமும்
(உன்)ஸ்தோத்திரங்களாலே செவியும் குளிர்ந்ததம்மா

உனக்கான தொருவரமுங் கேளாய் நீ உத்தமியே
(உன்) பர்த்தா உயிர் தவிரப் பிரியமுள்ளவரங் கேளாய்

வரந்தருவதுண்டானல் மஹாராஜா சோல்லுகிறேன்
(எங்கள்)யவசேன ராஜருக்கும் ஏற்றமுள்ள தேவியர்க்கும்

இருவருக்கும் இரண்டுகண்ணும் இராஜ்ஜியமும் வேண்டுமெ
தந்தேன் நான் இந்தவரம் சாவித்திரியம்மா வுனக்கு[ன்ருள்

தந்தேன் நான் என்றுசொல்லி தருமர் நடக்கலுற்ருர்
தருமர் நடக்கலுமே தார் குழலாள் பின்நடந்தாள்

பின்னல் நடந்திடவே பெருமாள் திரும்பிநின்று
என் பெண்ணே சாவித்திரி இன்னம் வருகின்ருய்

மான்கலேகளுண்டு மத யானைகளும் வேணதுண்டு
பார்க்கப்பயங்கரமாய் புலியுண்டு சிங்கமுண்டு

பக்ஷி மிருகங்களும் (இந்தப்) பயமான காடுதன்னில்
போவாய் நீ ஊர்தனக்குப் பொற்கொடியே என்றுசொன்
[ஞர்

(ஐயா) சத்துக்கள் தன்னுடனே சகவாசஞ் செய்திருந்தால்
மஹாபலன்கள் உண்டு என்று மஹான்களும் சொல்லியுள்
ளார்

உம்முடனே கூட வழிநடந்தால் எந்தனுக்கு
ஒருபயமுமில்லே யிப்போ ஓடிவருவே னென்ருள்

ஓடிவருவேனென்க உத்தமரும் கேட்டுகந்து
மங்களவார்த்தை தனைக்கேட்டு மனமகிழ்ந்து

வாருமம்மா சாவித்திரி (உன்) மணவாளர் தன்னை விட்டு
வேறொருவரங்கேளாய் மெல்லியரே என்று சொன்ஞர்

(ஐயா) புத்திரனில்லாத புகழுடைய அசுவபதி
அதுவேமனக்குறையாய் என் ஐயருந்தானிருக்கார்

(நல்ல) சத்துக்களாயும் சற்குணங்கள் வாய்ந்தவராய்
சத்குமாராளவர்க்குத் தாருமையா சற்குருவே

தந்தேனிந்தவரமும் சாவித்திரியம்மா வுனக்குத்
தந்தேன் நான் என்று தருமர் நடக்கலுற்ருர்
தருமர் நடக்கலுமே தார்குழலாள் பின் நடந்தாள்
பின்ஞல் நடக்கலுமே பெருமான் திரும்பி நின்று
ஏனே வருகின்ருய்(இந்த) இருள்சூழ்ந்த காடுதன்னில் [ற்கு
(உன்)பர்த்தாவின் உத்திரகிரியை (நீ)யுடனிருந்துசெய்வத
போவாய் நீ ஊர்தனக்கு என்று சொன்னர் புண்ணியரும்
தருமருரைக்கலுமே தார்குழலும் ஏது சொல்வாள்
(ஐயா)புத்திர ரில்லாவிட்டால் புண்ணிய உலகமில்லை
புத்து நரகமுண்டு பொல்லாத ஜன்மமுண்டு
மலடி என்று சொல்லி மானிடர்கள் ஏசிடுவாள்
எந்தனுக்கு நூறுபிள்ளை தாருமென்ருள் ஏந்திழையும்
தந்தேன் நானிந்தவரம் சாவித்திரியம்மா உனக்கு
தந்தேன் நான் என்று சொல்லித் தருமரும் ஓடலுற்ருர்
குறுக்காய் மறித்துமந்தக் கொம்பனையும் ஏதுசொல்வள்
என்னைத்தொடர்ந்து ஏன்மறித்தாய் என்பீரோ
சிருஷ்டிப்பீர் நீரும் ஜகத்திலுள்ள மானிடரை
விச்வபதியாய் நிறைந்து விஷ்ணுவாய் இரக்ஷிப்பீர்
சம்ஹார மூர்த்தியுமாய்ச் சகலரையும் சம்ஹரிப்பீர்
தருமந்தவருத ராஜனென்று தானுரைப்பாள்
தீர்க்கமுடன் வாழ்த்தும் உம் திருவாக்கு பொய்யாமோ
பதிவிரதையாவார்கள் பர்த்தாவை யன்றியிலே
பதிவிரதா தருமத்தில் பழுதுகள் வாராதே
பதிவிரதை பேரொழியபட்டப்பேர் இல்லாதே
அருந்தவப் பேரொழிய அவப் பெயர்கள் இல்லாதே
புத்திரரைப் பெற்றெடுக்க உபாயமொன்று சொல்லுமென்
தெட்டிஞய் என்னையிப்போ சிறுபெண்ணே சாவித்திரி[ருள்
தர்க்கங்கள் சாஸ்திரங்கள் சகலமும் கற்ருலும்
உன்னைப்போல் ஸ்தோத்திரங்கள் செய்யார் ஒருவர்களும்
உன்னுடைய ஸ்தோத்திரத்தால் (என்) உள்ளம் குளிர்ந்த
[தம்மா

எப்பொழுதும்போல யவசேனர் தேவியுடன்
இழந்தகண்ணை யடைந்து இராஜ்ஜியத்தை யாளவென்றும்
சத்தியவான் தன்னுடனே நீ சம்பிரமமாய் வாழவென்றும்
உந்தனுக்கு நூறுபிள்ளை உள் தந்தையர்க்கு நூறுபிள்ளை
என்று வரங்கொடுத்து யமராஜர் போனபின்பு
ஐந்துவரங்கொடுத்து அந்தர்த்தானமானபின்பு
ஓட்டம் பெருநடையாய் ஓடிவந்தாள் சாவித்திரி
நாயகர் தன்தலையை எடுத்து மடியில் வைத்து
சுந்தரனார் தன்னுடைய திருமுகத்தை பார்த்திருந்தாள்
சொப்பனங்கள் கண்டதுபோல் திடுக்கிட்டுக் கண்விழித்து
மஹாபுருஷர் வந்தார் மங்கயரே நீ கண்டாயா
அறிந்திடுவேன் நாயகரே அனேகம் பொழுதாச்சு
அநேகம் பொழுதாச்சு அஸ்தனமாச்சுதையா
மேகம்வந்து மூடி வெளிச்ச மொன்றுந்தோன்றவில்லை
போவோம்நாம் வாருமென்றுபொற்கொடியாள் கைப்பிடித்
பழங்கள் மூட்டைதன்னை பாவையருந்தானெடுத்து [து
கண்டகக் கோடாலி எடுத்து மவள் தோளில்வைத்து
சத்தியவான் கைபிடித்து சாவித்திரிதான் நடந்தாள்

---

சாவித்திரியம்மன் கணவர் ஜீவனைமீட்டு
மாமன் மாமியிடம் வருதல்.

மெள்ள நடந்தாளே மிருதுகுழலாள் நாதருடன்
காட்டுத்தீயால் வெளிச்சங்கொண்டு வழி நடந்தாள்
நக்ஷத்திர வெளிச்சம் நன்றாய் விளங்கிடவே
வழிகண்டுகொண்டு நடந்தாரிருவருமாய்
இவர்கள் கதையிங்கே இப்படியுந் தானிருக்க
யவசேனர் தேவியுடன் ஏதுசெய்வாரப்போது
காரணங்கள் தோன்றவில்லை கண்கள் தெரிகிறது
மைந்தரும் தேவியரும் வாராதிருப்பானேன்

அங்குமிங்கும் ஓடிப் பார்த்தே புலம்பலுற்ருர்
எங்குமே காணுதே ஏங்கிப் புலம்பலுற்ருர்
அபயமபயமென்று அழுதாரிருவருமாய்
வனத்திலேயுள்ள மஹரிஷிகளெல்லாரும்
எல்லாரும் வந்திருந்து ராஜனுக்கு ஏது சொல்வாள்
(உம்ம)புத்திரர்க்குத் தீங்கில்லை பொற்கொடியும் போயிருந் [தால்
அவள் மானுடர் என்றும் மனுஷி என்றும் எண்ணுதீர்
பொல்லாத லக்ஷணமும் இல்லையந்த பொற்கொடிக்கு
இப்போ வரப்போரார்கள் ஏங்காதிருங்களென்று
அந்தணர்கள் தேற்ற அவர்களங்கு வீற்றிருந்தார்
சத்தியவானைத் தன் தோளின்மேலேயணைத்து
வந்து பணிந்தார்கள் மாதாபிதாவையப்போ
வந்து பணிந்த மகனை வாரி எடுத்தணைத்து
தந்தையரும் மார்புடனே வழுவி எடுத்தணைத்து
இத்தனைநாழி வராமலிருப்பானேன் என் மகனே [ருர்
காரணங்கள் என்னவென்று கான்முனையே சொல்லுமென்
(என்) வசமழிந்து நித்திரையும் செய்தேன் மகாத்மாவே
அதுவொழிய நானறியேன் என்ருரே சத்தியாவான்
அந்தணர்கள் மஹரிஷிகள் இந்த ஆரணங்கைச் சூழ்ந்து
சாவித்திரியம்மா நீர் காட்டுக்குப் போனீரே [கொண்டு
காரணங்கள் யாதுமுண்டோ உரையீர் கடுகவென்ருர்
காரணங்கள் உண்டு அதைச் சொல்வேன் மஹரிஷிகாள்
எல்லாருங்கேளுங்கள் என்னுடையவன் குறையை
அசுவபதி ராஜாவின் அருந் தபஸ யாகத்தில்
கன்னிகையாயுதித்து கவலைகெடவே யிருந்தேன்
காட்டுக்கு வந்தேன் இந்தக் கணவரை நான் வரித்தேன்
நாரதமஹரிஷியும் என் நாயகரின் தீங்கு சொன்னார்
அன்றுமுதல் இன்றளவும் அம்பிகையை வேண்டி நின்
இன்றைக்குக்காட்டுக்கு இருவருமாய்ப்போனேமே [றேன்
எமராஜர் எந்தனுட நாயகரைக் கொண்டு சென்ருர்.

பின்னே நடந்து சென்று பெருவரங்கள் வேண்டி நின்றேன்
ஐந்துவரமுங்கொடுத்து அந்தர்த்தான மடைந்தார்.
ஐந்துவரம் எதென்றால் அந்தணர்காள் சொல்லுகிறேன்
(எங்கள்)யவசேன ராஜருக்கும் ஏற்றமுள்ள தேவியர்க்கும்
இருவருக்குமிரண்டு கண்ணும் இராஜ்ஜியமும்வாங்கி வந்தே
(எங்கள்) அச்வபதி ராஜருக்கு நூறுபிள்ளை வாங்கிவந் [ன்
எந்தனுக்கு நூறு பிள்ளைகேட்டுவரம்வாங்கிவந்தேன் தேன்
எந்தனுட பர்த்தாவை எழுப்பவரம் வாங்கிவந்தேன்.
ஆச்சரியம் ஆச்சரியம் என்றே அனைவர்களும்
எமனுடனே தர்க்கித்த எத்தமுள்ள தேவியிவள்
மரித்த அவள்பர்த்தாவை வரவழைத்துக் கொண்டாளே
(ஐயா) உங்கள் மைந்தனையும் மீட்டுவந்தாள் மறுபடியும்
[கண் கொடுத்தாள்
(இவள்) ஈச்வரியோ வென்று எல்லவருங் கண்டுகந்தாள்
மாமனும் மாமியாரும் மனமகிழ்ந்து கண்களித்து
மாமியாரும் மகளை மகிழ்ந்தே எடுத்தணைத்து [மடைந்தோம்
(அம்மா) உன் பதிவ்ரதா தருமத்தால் பாக்கியமெல்லா
(என்று) உத்தமியைக் கொண்டாடி உகந்தாரிருவருமாய்
ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்தே களிகூர்ந்தார்

---

### சாவித்திரியம்மன் முதலியோர் இராஜ்ஜியமடைந்து சுகித்திருத்தல்.

சத்தியவானுந் தர்மபத்தினியைக் கொண்டாடி
சந்தோஷமாயிருக்க சாலுவதேசத்திலிருந்து
கடுகியொரு தூதன்வந்து கண்டுமந்த ராஜாவை
(உம்ம) சத்துரு ராஜாவுந் தான் மாண்டுபோனதினால்
இராஜ்ஜியமாள்வதற்கு வாருமென்றுகைதொழுதான்
பட்டத்து யானைதனில் யவசேனர் ஏறிவர

அச்வத்தின்மேலேறி வந்தார் சத்தியவான்
சாவித்திரி தேவியும் தன் மாமியுடன் தண்டிகையில்
ஏறிவர எல்லவரும் இன்பமுடன் கண்களிக்க
வாத்தியங்கள் தான்முழங்க வந்தார் தன்தேசமதில்
பட்டணத்து வீதிசுற்றி வந்தார் அரண்மனையில்
இஷ்டமுடன் ராஜ்ஜியத்தை யவசேனர் தானடைந்தார்
அச்வபதி ராஜநக்கு அப்பொழுது தூதனுப்ப
மாளவி தேவியுடன்வந்தாரே அச்வபதி
யவசேனராஜர் எதிர் கொண்டு உபசரித்து
(உம்ம) மங்கையரால் வந்த வாழ்வு இதுராஜாவே
அச்வபதிராஜா அதிக சந்தோஷமுடன்
மங்கையுடதன்மகிமை மனமகிழ்ந்து தான்கேட்டு
அன்னையருந் தந்தையரும் அருமை மகளை அணைத்து
கண்களித்து ஆனந்த நீர் சொரிந்தார் கண்மலரால்.
சாவித்திரி நாயகரும் (ராஜா) தாளடியினில் பணிய
கண்களித்து ஆனந்தங்கொண்டே மனமகிழ்ந்தார்
தபஸாலதிகமுள்ள சாவித்திரி யம்மனவள்
தம்பிமார் நூறுடனும் தன்புதல்வர் நூறுடனும்
எமராஜன் தன் கிருபையால் ஏற்றமுள்ள இராஜ்ஜியத்தில்
சங்கரியைப் பூஜைசெய்து (ஸெள)பாக்கிய வதியாயிருந்தா
மார்க்கண்டேயர் உரைக்க மனமகிழ்ந்து பாண்டவர்கள் [ள்
ஆச்சரியமாகுமிந்த அருங்கதையைக் கேட்டுமவான்
அம்மன் மகத்துவத்தைக் கேட்டு மனங்குளிர்ந்து
சாவித்திரிதேவியரை சிந்தை செய்துமே ஸ்துதித்தாள்
ஒத்திசைத்த கெம்புடனே ஒளிமுத்துக் கோர்த்தாப்போல்
சித்திரமாம் பாரதத்தின் நடுவிருக்கும் சற்கதையை
கற்றவரும் கேட்டவரும் கற்றுக்கொடுத்தவரும்
சாவித்திரியம்மனைப்போல் சந்தோஷமாயிருப்பாள்
மங்கலியம் தான் பெருகும் மைந்தர்களைப் பெற்றிடுவாள்
மஹாதேவி தன் கிருபையால் வாழ்ந்திடுவார் என்று
[சொன்னார்.

ஓம் சுபம்.

# தமிழில்-பாணி ஸீரீஸ் புத்தகங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | யஜுஸ்ஸந்தியா - தர்ப்பணம் | ... | 0 | 2 | 6 |
| 2 | ருக்வேதம் ,, | ... | 0 | 2 | 6 |
| 3 | ஸ்யாமளா தண்டகம் | ... | 0 | 1 | 0 |
| 4 | முகுந்தமாலை நாமாவளியுடன் | ... | 0 | 2 | 0 |
| 5 | ஸாமவேத ஸந்தியா தர்ப்பணம் | ... | 0 | 2 | 6 |
| 6 | ஸ்தோத்ரமாலா—ஸ்துதிமஞ்சரி | ... | 0 | 3 | 0 |
| 7 | கல்பத்ரயம்—3 பூஜைகள் | ... | 0 | 5 | 0 |
| 8 | விஷ்ணு ஸகஸ்ரநாமம் | ... | 0 | 7 | 0 |
| 9 | சுப்ரமண்ய புஜங்க ஸ்தோத்ரம் | ... | 0 | 2 | 0 |
| 10 | லக்ஷிமி ஸகஸ்ரநாமம் | ... | 0 | 7 | 0 |
| 11 | லலிதா ஸகஸ்ரநாமம் | ... | 0 | 7 | 0 |
| 12 | சுப்ரமண்ய பூஜாவிதி | ... | 0 | 4 | 0 |
| 13 | புருஷஸூக்தம் முதலிய | ... | 0 | 2 | 0 |
| 14 | இந்திராக்ஷி சிவகவசம் | ... | 0 | 2 | 0 |
| 15 | ஆதித்யஹிருதயஸ்தோத்ரம் அர்த்தத்துடன் | ... | 0 | 2 | 6 |
| 16 | ஸௌந்தர்யலகரி | ... | 0 | 2 | 6 |
| 17 | பஜகோவிந்தம்—கோபிகாகீதை | ... | 0 | 1 | 0 |
| 18 | சுப்ரமண்ய ஸகஸ்ரநாமம் | ... | 0 | 7 | 0 |
| 19 | லக்ஷிமி அஷ்டோத்தரம் பதவுரையுடன் | ... | 0 | 2 | 6 |
| 20 | சிவானந்தலஹரி | ... | 0 | 2 | 0 |
| 21 | யஜுர் உபாகர்மம் | ... | 0 | 2 | 0 |
| 22 | நவக்ரஹ ஸ்தோத்ரம் | ... | 0 | 3 | 0 |
| 23 | பூஜாராமாயணம்—நாமராமாயணம் | ... | 0 | 1 | 0 |
| 24 | அகிலாண்டேச்வரி அக்ஷரமாலிகா | ... | 0 | 1 | 6 |
| 25 | யஜுஸ்ஸந்தியா பாஷ்யம் | ... | 0 | 5 | 0 |
| 26 | சங்கராந்திபூஜை—கோபூஜை | ... | 0 | 2 | 0 |
| 27 | மார்க்கபந்துஸ்தோத்ரம் | ... | 0 | 2 | 0 |
| 28 | நித்யான்னிகம்—நித்யனுஷ்டானவிதி | ... | 0 | 6 | 0 |
| 29 | ஸதாசிவ கீர்த்தனங்கள் | ... | 0 | 1 | 0 |
| 30 | அஷ்டபதி—கீதகோவிந்தம் | ... | 0 | 5 | 0 |
| 31 | விஷ்ணுபாதாதிகேசாந்த ஸ்தோத்ரம் | ... | 0 | 2 | 0 |
| 32 | தேவிநித்யபாராயணம் | ... | 0 | 8 | 0 |
| 33 | தேவிகட்கமாலா—நாமாவளியுடன் | ... | 0 | 1 | 6 |
| 34 | பகவந்நாம அஷ்டோத்தரகதம்பம் | ... | 0 | 8 | 0 |
| 35 | மகிஷாசுரமர்த்தனி ஸ்தோத்ரம் | ... | 0 | 1 | 0 |
| 36 | லலிதாதிருசதி நாமாவளியுடன் | ... | 0 | 4 | 0 |
| 37 | கிருஷ்ணலீலா தரங்கணி (அச்சில்) | ... | 1 | 4 | 0 |

பி. டி. பாணி கம்பெனி, திருவல்லிக்கேணி, மதராஸ்.

# விளம்பரம்.

## R. S. சுபலக்ஷ்மி அம்மாளால்

பிரசுரிக்கப்பட்ட புஸ்தகங்கள்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. வால்மீகி ராமாயணப் பாட்டும், ஞான ராமாயணக் கப்பலும் ... | 0 | 5 | 0 |
| 2. குசலவ வாக்கியம் ... | 0 | 5 | 0 |
| 3. அனந்தங்காடு ... | 0 | 3 | 0 |
| 4. ஸ்ரீ பார்வதி அம்மன் சோபனம் ... | 0 | 5 | 0 |
| 5. வேதாந்தப் பாட்டுகளும் தினஸரி ஸ்தோத்திரங்களும் | 0 | 6 | 0 |
| 6. ஜீவநாடகம் முதலிய சில அத்வைதப் பாட்டுகளும் பஞ்சீகரண மகா வாக்கியமும் ... | 0 | 4 | 6 |
| 7. பஞ்சீகரண கட்டம் ... | 0 | 0 | 6 |
| 8. சாவித்திரி பாடம் ... | 0 | 3 | 0 |
| 9. ஸ்ரீ லலிதாம்பாள் சோபனமும் தேவிபாடமும் ... | 0 | 6 | 0 |
| 10. ஐந்து கும்மிகள் ... | 0 | 3 | 0 |
| 11. குறவஞ்சி (தர்மாம்பாள் குறம், வேதாந்தக் குறம், அகண்டவெளிக்குறம்) ... | 0 | 3 | 0 |
| 12. கலைக்ஞானி தாயுமானர் - மூன்று பாடல்களின் விரிவுரை | 0 | 8 | 0 |

கிடைக்குமிடங்கள் :—

**R. S. S. அம்மாள்,**
**No. 33, Edward Elliot Road,**
**Mylapore, MADRAS.**

**பி. டி. பாணி அண்டு கோ,**
**1/15,** வெங்கடாசலம் செட்டி தெரு, திருவல்லிக்கேணி.

**R. சுப்பிரமணிய வாத்தியார் & Sons.**
*Book sellers & Publishers*, கல்பாத்தி, பாலக்காடு.